Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

வாரப் பதிப்பு THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத வருட சித்திரை மீ 02ஆம் உ | ஞாயிற்றுக்கிழமை | (15 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 18 | ஓசை 56

## மாகாண சபை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு சம்பளமில்லை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினர், மந்திரிகள் ஆகியோரின் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரின் சம்பளத்தை மார்ச் முதலாம் திகதி முதல் நிறுத்தியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

73 அங்கத்தினரைக் கொண்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவருக்கு, வடக்கு - கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசா மார்ச் 21ஆம் திகதி 1990 இட்ட கடிதத்தில் மார்ச் 1ஆம் திகதிமுதல் பாதுகாப்புத்தியோகத்தரின் சம்பளத்தை நிறுத்தும்படி தனக்குப் பணிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

சகல வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினருக்கும் மேற்படி தகவலைத் தெரிவிக்கும்படி எதிர்க்கட்சித் தலைவரைப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கேட்டுள்ளார்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# மட்டக்களப்பில் பொலிஸ் கலாட்டா; புலிகள் தடுப்பு!

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு நகரிலும் வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த சில பொலிஸார் புத்தாண்டு தினத்துக்கு முதல் நாளும் பெரிய வெள்ளிக்கிழமையுமான முக்கியத்துவம் வாய்ந்த இரவு வீதியால் சென்ற பெணகளுடன் சேட்டை விட்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் தலையிட்டு அவர்களின் வாலாட்டத்தை அடக்கினர்.**

புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி மட்டக்களப்பில் விமானப்படைக்கும் பொலிசாருக்குமிடையில் சடந்த வெள்ளிக்கிழமை (பெரிய வெள்ளிக்கிழமை) பிற்பகல் உதை பந்தாட்டப் போட்டி நடைபெறறது.

இப்போட்டியில் மட்டக்களப்பு பொலிஸ் கோஷ்டி விமானப்படை வெற்றியீட்டியது.

இந்த வெற்றியைக் கொண்டாடிய பொலிசார் வீதியில் சென்றுகொண்டிருந்த இளம் பெண்களிடமும் தமது வெற்றிக்களிப்பைக்காட்ட முற்பட்டனர். பெரிய வெள்ளிக் கிழமை ஆராதனைக்குத் தேவாலயத்துக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த இளம் பெண்கள் மீது சில பொருள்களை வீசியும் அவதூரான வார்த்தைகளைப் பேசியும் விசில் அடித்தும் அவர்கள் அட்டகாசம் செய்தனர். இடையிடையே வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

இச் செயல்கள் பற்றிப் பொதுமக்கள் விடுதலைப் புலிகளிடம் முறையிட்டனர். விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் உடனடியாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீபனிடம் சம்பவத்தை எடுத்துக் கூறிப் பொலிசாரின் அடாவடித்தனத்தை நிறுத்தும்படி கேட்டனர்.

பொலிஸ் அத்தியட்சகர் தாம் உடனடி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்து குழப்பம் செய்த பொலிசாரை

(4ஆம் பக்கம் பார்க்க)

## எழுவைதீவு மக்களுக்கு புலிகள் படகு அன்பளிப்பு

(எழுவைதீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் எழுவைதீவு இளைஞர் மன்றத்தினருக்கு ஓர் இயந்திரப்படகு அன்பளிப்புச் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவ் அன்பளிப்பு வழங்கப்பட்டது.

அரசு படகுச் சேவையான அலைஅரசி எழுவைதீவு துறைமுகத்தை கடல் வற்றுக் காலத்தில் போக முடியாமையால் எழுவைதீவு மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர் நோக்கியிருந்தனர் குறிப்பாக வைத்தியசாலை இல்லாத சிறு கிரா

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் பகிர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து வரும் காணியற்ற மக்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி, கண்டாவளை, பூநகரி, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 389 ஏக்கர் காணிகள் ... ளன. இக் காணிகளுக்காக 8010 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 690 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. அவற்றைப் பெறுவதற்காக 1350 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 19 ஆம், 23 ஆம், 24ஆம் திகதிகளில் பளைஉதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

## கிழக்கில் புத்தாண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரம் உட்பட கிழக்கின் பல பகுதிகளில் நேற்று புதுவருடம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

கடந்த ஏழு வருடங்களுக்கு பின்னர் மக்கள் வீதிகளில் மிக மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். பட்டாசு வெடிச் சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன.

இந்து ஆலயங்களில் விசேட வழிபாடுகளும் நடைபெற்றன மக்களும் பெருமளவு இந்த வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

பல இடங்களில் புதுவருடத்தை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்றன. (37)

## இன்று இயேசு உயிர்த்தெழுந்த திருநாள்

(விசேட நிருபர்)

''யேசுநாதர் உயிர்த்தெழுந்த திருநாளை உலக கிறிஸ்தவ மக்கள் இன்று கொண்டாடுகிறார்கள். நேற்று (14-4-90) சிங்கள, இந்து சமய மக்கள் புதுவருடத்தைக் கொண்டாடினார்கள். கிறிஸ்து உயிர்ப்பு தினமும் புதுவருட தினம் போன்றதே''

யாழ். ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை உயிர்த்த ஞாயிறு வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணத்தில் மோசடிகள் எனப் புகார்

(காத்தான்குடி)

புதிய காத்தான்குடி கிழக்குப் பிரிவில் வெள்ளநிவாரண உணவு விநியோகத்தில் குளறுபடி ஏற்பட்டிருப்பதாக புகார்கள் வந்துள்ளன.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள அகதிகளுக்காக பாகிஸ்தான் வழங்கிய அரிசியையும் சமூக சேவைத் திணைக்களம் வழங்கிய உணவுப் பொருட்களையும் ஒன்றாக இணைத்து இப் பகுதி மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதனால் இரண்டு நிவாரணங்களையும் பெறத் தகுதி இருந்தும் சில குடும்பங்கள் குறைவாகவே நிவாரண உதவிகளைப் பெறுகின்றன.

இது தொடர்பாக புதிய ... விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவரிடம் பாதிக்கப்பட்ட அனைவரும் புகார் தெரிவித்துள்ளார்கள்.

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வேறு கிராமசேவகர் பகுதிகளில் இரண்டுவிதமான நிவாரணங்களும் தனித்தனியாக கொடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (55)

## வீடுகட்ட கடன் உதவி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மூனூறு வீடுகள் கட்டுவதற்கு கடனாக நிதி

## வெளிநாட்டு வேலை வாய்ப்பும் போதைவஸ்துக் கடத்தலும்

(கொழும்பு)

... நிலையத்தில் பெருமளவிலான ... ஒரு தமிழ் இளைஞரும்,

புத்தாண்டுக் கொண்டாட்டத்தையொட்டி மட்டக்களப்பில் விமானப்படைக்கும் பொலிசாருக்குமிடையில் கடந்த வெள்ளிக்கிழமை (பெரிய வெள்ளிக்கிழமை) பிற்பகல் உதை பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இப்போட்டியில் மட்டக்களப்பு பொலிஸ் கோஷ்டி விமானப்படை வெற்றியீட்டியது.

இந்த வெற்றியைக் கொண்டாடிய பொலிசார் வீதியில் சென்றுகொண்டிருந்த இளம் பெண்களிடமும் தமது வெற்றிக்களிப்பைக் காட்ட முற்பட்டனர். பெரிய வெள்ளிக்கிழமை ஆராதனைக்குத் தேவாலயத்துக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த இளம் பெண்கள் மீது சில பொருள்களை வீசியும் அவதூரான வார்த்தைகளைப் பேசியும் விசில் அடித்தும் அவர்கள் அட்டகாசம் செய்தனர். இடையிடையே வானத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

இச் செயல்கள் பற்றிப் ... புலிகளிடம் முறையிட்டனர். விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் உடனடியாக மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீபனிடம் சபவத்தை எடுத்துக் கூறிப் பொலிசாரின் அடாவடித்தனத்தை நிறுத்தும்படி கேட்டனர்.

பொலிஸ் அத்தியட்சகர் தாம் உடன் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்து குழப்பம் செய்த பொலிசாரை

(4ஆம் பக்கம் பார்க்க)

... திரப்படகு அன்பளிப்புச் செய்யப்பட்டது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவ் அன்பளிப்பு வழங்கப்பட்டது

... எழுவைதீவு மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர் நோக்கியிருந்தனர் குறிப்பாக வைத்தியசாலை இல்லாத சிறு கிரா

(4ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பும் போதைவஸ்துக் கடத்தலும்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களுக்கும் போதை வஸ்து கடத்தல் காரர்களுக்கும் தொடர்பிருக்கின்றது என்ற சந்தேகதின் பேரில் போதை வஸ்து தடுப்புப் பிரிவு புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

சமீப காலங்களில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பெருமளவிலான ஹெரோயின் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து போதை வஸ்து தடுப்பு பொலிஸ் பிரிவு வெளிநாட்டு முகவர் நிலையங்களின் தொழிற்பாடுகளைக் கண்காணித்து வருகிறது.

கடந்த நான்கு மாதங்களில், குறிப்பாக மார்ச் 31ஆம் திகதிக்கும் ஏப்ரல் 3ஆம் திகதிக்குமிடையில் வடக்கிலுள்ள ஒரு தமிழ் இளைஞரும், கொழும்பு பெட்டாவைச் சேர்ந்த முஸ்லிம் பெண்ணும் மூன்று கிலோ ஹெரோயினை இலங்கைக்குள் கடத்த முயன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பிடிபட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி மாவட்டத்தில் காணிகள் பகிர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து வரும் காணியற்ற மக்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி, கண்டாவளை, பூநகரி, பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள 389 ஏக்கர் காணிகளே பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இக் காணிகளுக்காக 8010 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 690 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. அவற்றைப் பெறுவதற்காக 1350 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 19 ஆம், 23 ஆம், 24ஆம் திகதிகளில் பளைஉதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

(4 ஆம் பக்கப் பார்க்க)

# வெள்ள நிவாரணத்தில் மோசடிகள் எனப் புகார்

(காத்தான்குடி)

புதிய காத்தான்குடி கிழக்குப் பிரிவில் வெள்ளநிவாரண உணவு விநியோகத்தில் குளறுபடி ஏற்பட்டிருப்பதாக புகார்கள் வந்துள்ளன.

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள அகதிகளுக்காக பாகிஸ்தான் வழங்கிய அரிசியையும் சமூக சேவைத் திணைக்களம் வழங்கிய உணவுப் பொருட்களையும் ஒன்றாக இணைத்து இப்பகுதி மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதனால் இரண்டு நிவாரணங்களையும் பெறத் தகுதி இருந்தும் சில குடும்பங்கள் குறைவாகவே நிவாரண உதவிகளைப் பெறுகின்றன.

இது தொடர்பாக புதிய காத்தான்குடி கிழக்குப் பிரிவு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவரிடம் பாதிக்கப்பட்ட அனைவரும் புகார் தெரிவித்துள்ளார்கள்.

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வேறு கிராமசேவகர் பகுதிகளில் இரண்டுவிதமான நிவாரணங்களும் தனித்தனியாக கொடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (55)

## வீடுகட்ட கடன் உதவி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தேசிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முன்னூறு வீடுகள் கட்டுவதற்கு கடனாக நிதி வழங்கப்பட உள்ளது.

அரசாங்கத்தின் 15 இலட்சம் வீட்டுத்திட்டத்தின் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 2500 வீடுகள் அமைக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

15 ஆயிரம் ரூபா பணம் ஒவ்வொரு வீடமைப்பிற்கும் வழங்கப்பட இருக்கிறது. (தி)

# கடற்றொழில் அபிவிருத்திக்கு உதவி வழங்கப்பட வேண்டும்

- சூசை

(பருத்தித்துறை)

"கடற்றொழில் அபிவிருத்திக்கு வேண்டிய உதவிகள் வழங்கப்படவேண்டியது முக்கியமாகும். இத்தொழிலுக்கான மூலதன உதவிகள் வழங்கப்படும் போது தான் மீனவர்கள் கடற்றொழிலை அபிவிருத்தி செய்ய முடியும். கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள்மூலமாகக் கொண்ட குழுக்களுக்கு படகுகள் வழங்கி அவர்களின் கடற்றொழில் அபிவிருத்திக்கு ஊக்கமளிக்கப்படும்"

இவ்வாறு வட பிராந்தியக் கடற்றொழிலாளர் சங்கங்களுக்கான அபிவிருத்திக் கூட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க வடமராட்சி பொறுப்பாளர் திரு. சூசை கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ரோலர் மூலம் கடற்றொழிலை மேற்கொண்டு வரும் மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் றோலர் தொழிலை முற்று முழுதாக நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது என்றார்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் வெகுவிரைவில் ஆழ்கடல் இழுவைத் தொழிலை ஊக்குவிக்கத் திட்டமிட்டுள்ளார்கள் என்றார். மேலும் சில இடங்களில் மீனவர்கள் கடந்த காலங்களில் பாரிய சேதங்களுக்கு இலக்காகிப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செங்கடிப் புலவில் புதிய வீடுகள்

(வவுனியா)

வவுனியா செங்கடிப் புலவு கிராமத்தில் பாதிப்படைந்தவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

சுமார் ஐம்பது வீடுகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் வீடமைப்புத் திணைக்களம் மேற்படி வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான பொறுப்பினை ஏற்றுள்ளது. (தி)

# க.பொ.த.[சா]விடைத்தாள்கள் திருத்தம் ஏப்ரல் 23இல் ஆரம்பம்

(கொழும்பு)

சமீபத்தில் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை விடைத்தாள்களைப் புள்ளியிடும் வேலை எதிர் வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது

க. பொ. த. (சாதாரணம்) வகுப்புகளில் கற்பிக்கும் 25.000 ஆசிரியர்கள் 550.000 பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களைப் பார்வையிட்டுப் புள்ளியிடுவார்கள். புள்ளியிடும் வேலைகள் பத்து நாட்களுக்குள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## புனர்வாழ்வுப் படிவங்கள் விநியோகம் முடிவு

(வவுனியா)

புனர்வாழ்வுப் படிவங்கள் வழங்குவதற்குரிய வேலைகள் வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் முடிவடைந்திருப்பதாக உதவி அரசாங்க அதிபர் இமெல்டா அற்புதராஜா தெரிவித்தார்.

# அபிவிருத்தித்திட்டவேலைகளை உடன் ஆரம்பிக்கவும்

(கிளிநொச்சி)

நிறுத்தி வைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்ட வேலைகளை உடன் ஆரம்பிக்கவும். இதில் ஏதாவது தடங்கல் இருப்பின் எனக்கு அறிவிக்கவும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் சகல திணைக்களங்களின் தலைவர்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆட் தொகை தேவையில்லை 'இலட்சியமும், உறுதியுமே தேவை

(யாழ்ப்பாணம்)

"புதுவருட தினத்தில் பாரம்பரிய கடமைகளை எல்லாம் துறந்து ஆயிரக்கணக்கில் சிற்றூரவைக் கூட்டத்திற்கு வருகை தந்ததையிட்டு உங்கள் எல்லோருக்கும் எனது நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன்." என நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சிற்றூரவைப் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் தெரிவித்தார்,

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களில் ஒருவரான திரு. மூர்த்தி பேசுகையில், ஆயுதம் ஏந்தி ஆயுதத்துடனேயே உலகிலேயே முதன் முதலில் அரசியல் கட்சியாக எமது மக்கள் முன்னணி மட்டுமே அங்கீகரிக்கப்பட்டது என்றும், எமக்கு சம்பிரதாயமாக ஆட்கள் தொகை தேவையில்லை, இலட்சியத்துடன் உறுதியாக செயற்படக்கூடிய சிற்றூர் அவை செயற்குழு உறுப்பினர்கள் மட்டும், பொதுமக்களின் பங்களிப்பை விஸ்தரிப்பதால் போதுமென அவர் தெரிவித்தார். அத்துடன் அவர் சிற்றூர் அவையின் பொறுப்புக்கள், கடமைகள் என்பனவற்றை விளக்கினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இந்தியா சகல வழிகளிலும், எமது இயக்கம் மக்களின் இயக்கமல்ல என உலகுக்கு அறிவிக்க முனைந்ததை சுட்டிக் காட்டி, இன்று மக்கள் முன்னணியின் விஸ்தரிப்பால் எமது மக்கள் ஆதரவை உலகுக்கு எடுத்துக் காட்டுவது சிற்றூரவை ஏழு அங்கத்தவரின் கடமையாகுமென அவர் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் வடக்கில்-சாதி, கிழக்கில்-சமயம், யாழ்ப்பாணம் - வன்னி என்ற பாகுபாடற்ற மக்களவையாக திகழ வேண்டும் என்றும், மக்கள் சிற்றூரவை தோறும் அரசியல், பொருளாதார கலை, கலாசார

(4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகள் செயலகத்தில் விளையாட்டுப் போட்டி

(தருமபுரம்)

நேற்று மாலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியில் முசல்குத்தி என்னும் இடத்தில் வீரமரணமடைந்த விடுதலைப்புலிகள் உறுப்பினர்களான வேந்தன், ஆனந்த், மிரேஷ் ஆகியோரின் பெயர்களைக் கொண்ட இல்லங்கள் போட்டியிட்டன.

மிரேஷ் இல்லம் முதலாம் இடத்தையும் ஆனந்த் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றன. சிறந்த வீரராக நெப்போலியனும் சிவநேசனும் தெரிவு செய்யப்பட்டார்கள். போட்டியை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா ஆரம்பித்துவைத்தார்.

# புத்தபிக்கு தலைமையிலான சமாதானக் குழு யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

தென் பகுதியிலிருந்து புத்தபிக்கு தலைமையிலான சமாதானக் குழுவினர் நேற்று வடபகுதியிலுள்ள முக்கிய இடங்களுக்கு தரைமார்க்கமாக வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். அக்குழு எமது ஈழநாதபத்திரிகைக் காரியாலயத்திற்கு நேற்று மாலை 5-00 மணிக்கு வந்து எமது பத்திரிகை ஆசிரியர்களையும் சந்தித்து உரையாடிச் சென்றது.

வடபகுதிக்கு நேற்று விஜயம் செய்த சமாதான யாத்திரைக் குழுவினருக்கு கேத்தாராம பண்சாலையைச் சேர்ந்த விபாலித்த தேரோ தலைமை தாங்கினார். இவர்களுடன் திரு. அனுரா அபயசேகரா (றோயல் பிலிம் தயாரிப்பாளர்) திரு. சுனில் செனரத் வேலுவுவரா (தலைவர் அளுத் கடை - கிராமோதய சபை) திரு சோமசிறி (கிராம சேவையாளர் மாளிகாவத்தை) திரு. லோகறா வியனகே (கிராம சேவையாளர், முகத்துவாரம்) திரு. நிகால் விதானகே (சுகாதார பரிசோதகர், கொழும்பு மாநகரசபை) ஆகியோரும் வந்திருந்தனர்.

மேற்படி குழுவினரை, வேல

(4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

யாழ் நகரில் சகலவிதமான மணிக்கூடுகளையும் உத்தர வாதத்துடன் திருத்திக் கொள்ள DiLKA WATCH WORKS, Opposite Bus Stand, Jaffna (குறிப்பு) சகல 'சீக்கோ' சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு (B-537)

மோட்டார் சைக்கிள் திருத்துமிடம்

எவ்வகையான மோட்டார் சைக்கிளாயினும் துரித கெதியில் திருத்திக் கொடுக்கப்படும்.

**Motor Cycle Repair Centre**

NO. 3, Eachchamoddai Road Jaffna.

உரிமையாளர்:

S. மகேந்திரராஜா (B.758)

தனிச் சீனியில் அரைத்த ஐசிங் சுகர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

M.G M. 777 K.K.S. Road Jaffna. (B-768)

## கலைஞர்களுக்கு கௌரவ விருது

சுவாமி சாந்தானந்தா ஜெயந்தி விழாவும் ஜெயந்தி விழாவும் இராம கிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரியின் 2ம் ஆண்டு நிறைவு விழாவும் திருநெல்வேலி இராமகிருஷ்னாலயத்தில் இடம் பெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பிரம்மாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரையுடன் ஆரம்பமாகிய இந்த விழாவில் 1989ஆம் ஆண்டு வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சையில் விசேட சித்தி பெற்ற கல்லூரி மாணவர்க...க்கு சுவாமிகள் பரிசில்களை வழங்கினார்.

'சுவரமி சாந்தானந்தா-கலைஞர்கள் கௌரவ விருது' இம் முறை பிரபல மிருதங்கக் கலைஞராகிய சங்கீதரட்ணம் எஸ். மகேந்திரன், பிரபல வயலின் கலைஞராகிய சங்கீத வித்துவான் (செல்வி) பாக்கியலஷ்மி நடராஜா ஆகியோருக்கு வளங்கப்பட்டது.

## சிற்றூரவை

(தீவுப்பகுதி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவான மக்கள் முன்னணியால் அல்லைப்பிட்டிப் பகுதியில் சிற்றூரவை என்னும் அரசியல் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. (15)

---

தியாகச் செம்மல்
அன்னை பூபதி கணபதிப்பிள்ளை
அவர்களுக்கு
## எமது அஞ்சலிகள்



அந்நியப்படைகளின்
அராஜகச்செயல்களை
அகிலமெங்கணும்
அம்பலப்படுத்திட
எண்ணியே அகிம்சை
போர்தனைத்தொடுத்த
எம்மருமைத்தாயினை
இதயத்தில் இருத்தி
அஞ்சலிசெலுத்துகிறோம்.

கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையம்
கொற்றாவத்தை தேஞ்சஸ் விளையாட்டுக்கழகம்
கொற்றாவத்தை.

(R/183)

---

தியாக தீபம்
## அன்னை பூபதிக்கு எமது அஞ்சலிகள்



கிழக்கில் எரிந்த
தியாக ஜோதியே
இருளில் கிடந்த
ஈழ மண்ணுக்கு
வெளிச்சம் தந்தவள் - நீ
நின் தியாக நெருப்பால்

ஆதிக்க அரசுகள்
ஆட்டம் கண்டன.
உலக அரங்கில்
ஈழப் பெண்மைக்கு
பொன்மகுடம்
சூட்டினாய்.

உனது மரணம் மரணிக்கவில்லை
உனது வழியில் ஆயிரம் மக்கள்
'உருவாகின்றார்கள்'

தீவுப்பகுதி மக்கள் சார்பாக
வேலணை தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச்
சங்கம்,
வேலணை

(R/178)

---

யாழ்நகரில்
## இன்றைய சினிமா

**வின்சர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறைநாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோனா ..
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

106வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடைபோடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

## வெளியீடு

மறுமலர்ச் வட்டத்தினர் ''கலசம்'' எனும் சஞ்சிகை வெளியீட்டு வைபவத்தை நடாத்தினார்கள்.

இதில் முல்லைத்தீவு பிரதேசப் பொறுப்பாள மனோ அரசாங்க அதிபர் திரு. சே. பொன்னம்பலம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

## ஒஸ்மானியாவில் ஆரம்பப்பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 13 வரை வகுப்புக்களைக்கொண்ட உயர்நிலைக் கல்லூரியாக இயங்குவதற்கான உத்தரவை வடக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஈ. ஜே. சற்குணராசா கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டபோது

---

விடியலைத் தேடி நின்ற
வீரத் தாய் பூபதிக்கு
## எங்கள் அஞ்சலிகள்



மீன்பாடும் தேன்நாட்டில்
மிடுக்குடனே துடித்தெழுந்து
தீந்தமிழர் துயரடைக்க
தியாகப் போர் தொடுத்த எங்கள்
அன்னை பூபதிக்கு
அஞ்சலிகள் செலுத்துகின்றோம்
வாழ்க எங்கும் பூபதி நாமம்!

---

## ட்ரக் ELF - 350 விற்பனைக்கு

28ஸ்ரீ 6243 இலக்கம் கொண்ட
ட்ரக் ELF - 350 விற்பனைக்கு உண்டு,

தொடர்பு:-

ராணி மில், நெல்லியடி
அல்லது
அ. குமாரசாமி
88, பலாலி வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம். (R/168)

---

உ
சிவமயம்
## ஓராம் ஆண்டு நினைவு அஞ்சலி



---

அனைவருக்கும் எமது உளம் கனிந்த
புத்தாண்டு வாழ்த்துக்கள்

**நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ**
தங்கப்பவுண் நகை வியாபாரம்

அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

**நியூ ஆனந்தா**

## எங்கள் அஞ்சலிகள்



மீன்பாடும் தேன்நாட்டில்
மிடுக்குடனே குதித்தெழுந்து
தீந்தமிழர் துயரடைக்க
தியாகப் போர் தொடுத்த எங்கள்
அன்னை பூபதிக்கு
அஞ்சலிகள் செலுத்துகின்றோம்
வாழ்க எங்கும் பூபதி நாமம்!
வளர்க எங்கும் விடுதலை உணர்வு

கோவிற்கடவவை சனசமூக நிலையம்
துன்னாலை.

(R.184)

---

அல்லது
அ. குமாரசாமி
88, பலாலி வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(R/168)

---

உ
சிவமயம்

## ஓராம் ஆண்டு நினைவு அஞ்சலி



### திருமதி பத்மினி பாலச்சந்திரன்

அச்சுவேலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15-01-1953 | 25 - 04 - 1989 |

என் உயிருக்குயிரான பத்மினிதேவியே! வாடாத இதய மலரே! என் இல்லத்தரசியே! மனைக்கு விளக்காக இருந்த மாணிக்கமே! நின்பிரிவால் வாடுகிறோம் ஓராண்டு எப்படி நீங்கிற்றோ தெரியவில்லை.

நின் ஆன்மா அமைதியடையச் சிவபெருங்கடவுளுடைய பொற்பாதங்களை இறைஞ்சுகிறோம்

உங்கள் பிரிவால் வாடும்
அன்புக்கணவன், பிள்ளைகள்,
உறவினர்.

(R/156)

---

வேலணை ... உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்,

(R/178)

---

அனைவருக்கும் எமது உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

### நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

## நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(B.764)

---

அன்னை பூபதிக்கு

## எமது மலர் அஞ்சலி



யாழ். ஆங்கில மருந்து
வர்த்தகர் சங்கம்

(B.759)

---

அன்பர்கள், வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்

### எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

முழு இலங்கைத் தீவிலும் உள்ள
பீடி பாவனையாளர்கள், விரும்புவது
காரம், மணம், குணம் நிறைந்த
ஸ்டார் பீடியே!

## 903 ஸ்டார் பீடி

உரிமையாளர்:
எம். பி. மொகிடீன்
ஸ்டார் பீடி தொழிலகம்,
323, பிரதான வீதி,
கல்முனை.

தொலைபேசி: 067-2403

(B-766)

---

மறுமலர்ச் வட்டத்தினர் ''கலசம்'' எனும் சஞ்சிகை வெளியீட்டு வைபவத்தை நடாத்தினார்கள்.

இதில் முல்லைத்தீவு பிரதேசப் பொறுப்பாள மனோ அரசாங்க அதிபர் திரு. சே. பொன்னம்பலம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

### ஒஸ்மானியாவில் ஆரம்பப்பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆண்டு 1 தொடக்க ஆண்டு 13 வரை வகுப்புக்களைக்கொண்ட உயர்நிலைக் கல்லூரியாக இயங்குவதற்கான உத்தரவை வடக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஈ. ஜே. சற்குணராசா கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்ட போது நேரடியாக வழங்கியுள்ளார்.

ஒஸ்மானியாக் கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன கல்விச் செயலாளருக்கு இராப் போசன விருந்து அளித்துக் கௌரவித்தது.

ஒஸ்மானியா கல்லூரியில் ஆரம்பப் பிரிவு இயங்குவதற்கான அனுமதி கிடைத்ததையிட்டு யாழ். முஸ்லிம் மக்கள் தங்கள் நன்றியையும், பாராட்டையும் கல்விச் செயலாளருக்கும், கல்விப் பணிப்பாளருக்கும் தெரிவித்தனர்.

### காத்தான்குடியில் 8-வது கிளை

நேற்று காத்தான்குடி 6ஆம் குறிச்சி கிராம சேவகர் பிரிவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டம் காத்தான்குடி பிரதேச விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது. இக் கிளைத் தலைவராக ஜனாப். கே. எல். எம். தாயூடீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார், இது காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள எட்டாவது கிளை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

### அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

**சிற்றிசன்** எம்மிடம் கீழ்க்காணும் வீட்டு நிருமானத்துக்கு வேண்டிய சகல விதமான இரும்புப் பொருட்களும் மற்றும் C. I. C. பெயின்ற் வகைகளும், கிருமிநாசினி வகைகள், C. I. C. ரோசா சிப்ஸ் வகைகள், பிறவுன்ஸ் (M. M. L) பெயின்ற் வகைகள், மரப்பாதுகாப்பு (Preservative) பொருட்கள், அன்டன் பிளாஸ்டிக் பொருட்கள், அன்ரன் போல்ட அன் நட்ஸ் வகைகள் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம் **சிற்றிசன்**

(St. Antony Industries Group) அல்கதீன் பைப் CIC (Anton)

***BROWNS GROUP* (Masons Miseturs Ltd)**

## சிற்றி சன்

19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## CITY SUN

138, STANLEY ROAD, JAFFNA

(B.748)

# ஜனாதிபதி பிரேமதாசாவின் திட்டங்களை சுதந்திரக்கட்சி எதிர்க்க முடியாத நிலை

தென்பகுதியில் உள்ள அரசியல் நிலைமையில் இன்று ஜனாதிபதியின் நடவடிக்கைகள் துரிதமாக செயற்பட்டு வருகிறது. அமைச்சரவை மாற்றம், புதிய பாராளுமன்றத் தொடர் வைபவம், ஶ்ரீ கோதா வைபவம் யாவற்றிலும் நாட்டில் அமைதி தொழில்வாய்ப்பு வீடில்லாதவர்களுக்கு வீடு, வறுமை ஒழிப்பு போன்றவற்றையே முக்கிய தமது குறிக்கோளாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினருக்குள் திருமதி சந்திரிகா விஜய குமாரணதுங்கா லண்டனிலிருந்து வந்த பின்னர் பெரிய பிரச்சினை எழுந்துள்ளது. சுதந்திரக் கட்சியில் சேர்ந்தால் தனக்கு இடமில்லை என அனுரா கருதுகிறார். ஶ்ரீலங்கா மக்கள் கட்சியில் அவர் வந்தபின் தங்களுக்கு முன்னிடம் கிடைக்காது என அதன் தலைவர்கள் கருதுகிறார்கள். தனது கணவன் கொல்லப்பட்டபோது அவரது பாதுகாவலர்கள் ஓடிவிட்டதாகவும் அவர்களை மக்கள் கட்சியே ஏற்பாடு செய்ததாகவும் திருமதி சந்திரிகா சாடுகிறார்.

1960இல் திருமதிஶ்ரீமாவோ தமது கணவன் எஸ். டபிள்யூ ஆர். டியின் கொலையை சாதகமாக்கி தமக்கு ஆதரவு கேட்டு பதவிக்கு வந்தது போலவே எதிர்வரும் தேர்தல்களில் திருமதி சந்திரிக்காவும் தமது கணவன் கொலையைச் சாட்டி கேட்கலாம் அல்லவா?

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஶ்ரீமாவோ பண்டாரநாயக்கா சில காலத்துக்கு முன்னர் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், உதவி வழங்கும் நாடுகள் உதவிகள் வழங்கக் கூடாது என்ற பிரச்சாரங்கள் மேற்கொண்டார். ஆனால் 1971இல் அவரது ஆட்சியின் போது 'சேகுவேரா' நடவடிக்கையில் 5000 இளைஞர் வரை கொல்லப்பட்டதாக அரசாங்க தரப்பில் எதிர்ப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அதனால் அவர் மனித உரிமைமீறல்களைவிட்டுவிட்டு இப்போது வடக்கு கிழக்கு பிரச்சனையை தமக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்.

விடுதலைப் புலிகளும் அரசும் பேசுவதில் சந்தேகம்- விடுதலைப்புலிகள் ஆயுதங்களை வைத்திருப்பது. புலிகள் கூட்டம் நடாத்த அனுமதி,எமக்கு இல்லை என்றவாறு தெற்கில் பேசிவருகிறார். இதற்குச் சில கொழும்பு பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுக்கின்றன.

உதாரணமாக கல்முனையில் கடைகள் எரிந்ததை புலிகள் எரித்தது, இந்தியாவின் உதவியுடன் போராட்டம் இவ்வாறாக சில கொழும்புப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

வடக்கு கிழக்கு பிரச்சினையை வைத்து அரசியல் லாபம் தேட எதிர்க்கட்சியினர் முயற்சிப்பதை ஜனாதிபதியும் ஶ்ரீகோத்தாவில் நடைபெற்ற வைபவத்தில் ஆணித்தரமாக கூறியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வடக்கு கிழக்கில் தமக்கு ஆதரவு தேடி புலிகளின் உதவியை நாடி சுதந்திரக்கட்சியினர் வவுனியா காட்டுக்கு வந்தது தெற்கில் பிரபல்யமாகியது இதனையே ஜனாதிபதியும் ஶ்ரீகோத்தாவில் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் 1986ல் அடம்பனில் விடுதலைப் புலிகளுக்கும் ஶ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் புலிகளிடம் பிடிபட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்களை மீட்பதற்கு ஶ்ரீலங்கா மக்கள்கட்சித்தலைவர் விஜயகுமாரணதுங்கா புத்தபிசுகுமார் சகிதம் யாழ்ப்பாணம் வந்தார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளின் தளபதி கிட்டுவுடன் பேச்சு நடாத்தினார். இதனையும் ஜனாதிபதி ஶ்ரீகோத்தாவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனையடுத்து சுதந்திரக் கட்சியின் வடக்கு கிழக்கு பிரச்சினை குறித்துப் பேசுவதை சற்றுக் குறைத்து விட் மேதினத்தில் என்ன பேசலாம் என ஆலோசனைகள் நடாத்துகின்றனர்.

சுதந்திரக்கட்சி ஆட்சியின் போதே வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழ்த் தீவிரவாத நடவடிக்கைகள் ஆரம்பமாகத் தொடங்கியன. பல தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டதும் இவர்கள் ஆட்சியில் தான்.

இந்த நாட்டில் வன்முறைகளுக்கு காரணம் என்ன என்று ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தார். இளைஞர்கள் விரக்திதான் காரணங் என்றும் இக்குழு தெரிவித்துள்ளது. ஆனால் சுதந்திரக்கட்சி எதிர்க்கட்சி கூட்டணியைக் கூட்டி மனித உரிமைகள் மீறல் தமது கட்சியில் கொல்லப்பட்டவர்கள் யார் போன்ற விபரங்களை ஆராய்கிறது.

1956இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சுதந்திரக்கட்சி கொண்டுவந்த தனிச் சிங்களச் சட்டமே இவ்வளவு நாட்களும் நாட்டில் இடம் பெற்ற வன்முறைகளுக்கு அத்திவாரம் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர் ஆனால் நமது தவறை உணர்ந்த பண்டாரநாயக்கா தமிழர்களுக்கு சமஷ்டி என்ற முறையில் ஒரு மாற்றத்தையும் கொண்டுவர எத்தனித்தார்.

ஆனால் தற்போது ஶ்ரீமாவோ அம்மையார் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஏதாவது வழிகள் அல்லது ஆலோசனைகளைத் தெரிவிக்காமல் வடக்கு - கிழக்குப் பிரச்சினையில் அரசியல் லாபம் தேட முற்படுகிறார் ஆனால் இதற்கு ஆதரவு கிடைக்குமோ என்பது தெரியவில்லை. காரணம் அண்மைக்கால ஜே. வி. பி. நடவடிக்கைகளால் தென் பகுதி மக்கள் பல அனுபவங்களைக் கண்டுவிட்டார்கள்.

புதிய அமைச்சர்கள் தமது அமைச்சுக்களைத் துரிதமாகச் செயற்படுத்துவதாக அறிவித்து வருகின்றனர். இவர்களில் போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் எல்லோரையும் மிஞ்சிவிட்டார். இவர் 1965இல் டட்லி சேனநாயக்கா அரசில் பிரதிதபால் தந்தி தொடர்புகள் அமைச்சராக இருந்தவர். அடிக்கடி யாழ்ப்பாணம் வந்தவர். இம்மாதம் 11ஆம் திகதி புறக்கோட்டை பஸ்நிலையத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்தார். மினிபஸ்களுக்கு சில அறிவுறுத்தல்களையும் எச்சரிக்கைகளையும் விடுத்தார். பஸ்களுக்குக் காத்திருந்த மக்களுக்கு வேறு பஸ்களை ஏற்பாடு செய்தார்.

அமைச்சர்கள் பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்க வேண்டும். உயிருக்குப் பயப்படக்கூடாது என ஜனாதிபதி தெரிவித்த கருத்தை போக்குவரத்து அமைச்சர் செயலில் காண்பித்துள்ளார்,

இதேசமயம் சுதந்திரக்கட்சியின் சில உறுப்பினர்கள் அரசாங்கம் நடாத்தும் திறப்பு விழா மற்றும் அபிவிருத்தித் திட்ட வைபவங்களிலும் கலந்து கொள்கின்றனர்.

**ரூபன்**

சுதந்திரக்கட்சி ஏனைய எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்து வருகிறது. ஆனால் எதிர்க்கட்சிகளுக்குள்ளேயே கருத்து வேற்றுமை நிலவுகிறது என்பதைச் சில சம்பவங்கள் தெரிவிக்கின்றன.

கட்சி மாறுவதைத் தடை செய்யும் சட்டம் ஜே. ஆர். ஆட்சியில் இருப்பதால் சுதந்திரக்கட்சி உறுப்பினர்களோ அல்லது வேறு கட்சி உறுப்பினர்களோ தாம் விரும்பியது போல கட்சி மாற முடியாத நிலையும் தற்போது இருக்கிறது.

# 'சார்க்' அமைப்பு நாடுகளிடையே பிரச்சினைகள் தொடர்கின்றன

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு 'சார்க்' மாநாடு நடப்பதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் தெற்காசிய பிராந்திய நாடுகளுக்குள் பிரச்சினைகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

சிலகாலம் இலங்கையில் நடந்தது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் தொடர்ந்தும் மாறிமாறி வன்செயல்களும், தீவிரவாத நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இந்தியாவில் பஞ்சாப் பிரச்சினை ஏற்கனவே உள்ளது. அங்கே மேற்கு வங்காளத்திலும் தீவிரவாத

அதாவது பஞ்சாப் காஷ்மீர் பிரச்சினைக்கு பாகிஸ்தான் காரணம் என்று இந்தியாவும்; இலங்கைப் பிரச்சினைகளுக்கு இந்தியா என்று இலங்கையும்; இப்படியாக தெற்காசிய பிராந்திய நாடுகளுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகளும், கண்டனங்களும் எழுந்துள்ளன.

இவற்றுடன் கடந்த வாரம் நேபாளத்தில் ஏற்பட்ட வன்முறைகளால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும், ஆயிரத்துக்கு அதிகமானோர் காயமடைந்தும் உள்ளனர்.

நேபாளத்துடனும் இந்தியாவுக்கு சிறிது மனக் கசப்பு

மாணவர்கள் படு காயமடைந்தனர். வெளிநாட்டவர்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கினார்கள். இதனையடுத்து உலக நாடுகளில் நேபாளத்துக்குஇருந்த மதிப்பு குறையத் தொடங்கியது.

மன்னர் பிரேந்திரா உடன் நடவடிக்கை எடுத்தார். எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடாத்தினார். சகல கட்சி ஆட்சிக்கு வழிவகுக்கப்படும் என்று அறிவித்தார். இதனையடுத்து தற்போது அங்கே சுமூக நிலை ஏற்பட்டு வருகிறது. முப்பது வருடங்களால் அரசியல நிலை மாறிபுள்ளது. இவ்வாறாக தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்குள்ளும்,

'சார்க்' யாப்பின்படி ஒரு வருடத்தில் இரு தடவைகள் மாநாட்டை நடத்தலாம்.

இவற்றிலிருந்து 'சார்க்' ஒத்துழைப்பு நாடுகளிடையே பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றை 'சார்க்' நாடுகள் தீர்க்காவிட்டால் யார் தீர்ப்பது. இல்லையேல் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பு பிரிந்து விடலாம்.

பாகிஸ்தான் - இந்தியா காஷ்மீர் பிரச்சினையை ஏன் 'சார்க்' அமைப்பு தீர்க்கக் கூடாது. வல்லரசுகளின் தலை

அமெரிக்க - சோவியத் வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்டையடுத்து கனடாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி புஷ் லித்வேனியாவில் சோவியத் எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளனர். ஆனால் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவின் ஆட்சிமுறையைப் பாராட்டியுள்ளார்.

இதேவேளை லித்வேனியாவில் இராணுவ நடவடிக்கை எடுக்கப் போவதாக சோவியத் தலைவர் கொர்பசேவ் எச்சரித்து வருகிறார்.

பால்டிக் குடியரசான லித்வேனியா கடந்த மாதம்11ஆம் திகதி தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

லித்வேனியாவுடன் பேச்சு நடாத்துமாறு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள்

## ஓராண்டு நினைவு அஞ்சலி



அன்னையின் மடியில்

**28-01-1970**

அரக்கன் பிடியில்

**15-04-1989**

**தம்பிராசா பிரபாகரன் (ஜீவா)**

எமது இனிய ஜீவா
பத்தொன்பது வயதில்
பாதையிலே பலியெடுத்து
பரலோகம் அனுப்பினார்களே
படுபாவிகள். பல பேரின்
பயணம் அனுப்பி வைத்தாய்
பாதியிலே பறக்தார்களே

# பிரச்சினைகள் தொடர்கின்றன

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு 'சார்க்' மாநாடு நடப்பதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் தெற்காசிய பிராந்திய நாடுகளுக்குள் பிரச்சினைகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

சிலகாலம் இலங்கையில் நடந்தது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் தொடர்ந்தும் மாறிமாறி வன்செயல்களும், தீவிரவாத நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. இந்தியாவில் பஞ்சாப் பிரச்சினை ஏற்கனவே உள்ளது. அங்கே மேற்கு வங்காளத்திலும் தீவிரவாத பிரச்சினை எழுந்தபோது அங்குள்ள குர்க்கா தேசிய விடுதலை முன்னணியுடன் இந்திய அரசு பேசி சமரசமாக தீர்க்கப்பட்டது.

தற்போது காஷ்மீர் பிரச்சனையால் பாகிஸ்தானும் இந்தியாவும் மோதுகிற நிலையில் ஒன்றையொன்று எச்சரித்து வருகின்றன. எல்லைகளில் படைகளை இரு நாடுகளும் குவிந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானிலும் இனக்கலவரம், மற்றும் உள்ளூர் அரசியல் நடவடிக்கைகளால் அடிக்கடி ஊரடங்கு அமுல், குண்டுவெடிப்பு இவ்வாறாக சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இதே போல பங்களாதேஷிலும் சாந்திபாஹினி தீவிரவாதிகள் பிரச்சினை இவர்களுக்கு இந்தியா ஆதரவு என்று பங்களாதேஷ் இந்தியாவைக் குற்றம் சாட்டி வருகிறது.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளான இவற்றில் இவை ஏற்படக் காரணம், பின்னணி என்ன என்று ஒருநாடுமே கருத்து வெளியிடவில்லை. ஆனால் ஒன்றையொன்று இவை குற்றம் சுமத்துகின்றன.

அதாவது பஞ்சாப் காஷ்மீர் பிரச்சினைக்கு பாகிஸ்தான் காரணம் என்று இந்தியாவும்; இலங்கைப் பிரச்சினைகளுக்கு இந்தியா என்று இலங்கையும்; இப்படியாக தெற்காசிய பிராந்திய நாடுகளுக்குள்ளேயே கருத்து வேறுபாடுகளும், கண்டனங்களும் எழுந்துள்ளன.

இவற்றுடன் கடந்த வாரம் நேபாளத்தில் ஏற்பட்ட வன்முறைகளால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும், ஆயிரத்துக்கு அதிகமானோர் காயமடைந்தும் உள்ளனர்.

நேபாளத்துடனும் இந்தியாவுக்கு சிறிது மனக் கசப்பு இருந்து வருகிறது. சீனாவிடமிருந்து நேபாளம் ஆயுதம் வாங்கியது இதற்கு காரணம், பாகிஸ்தான் இலங்கை, பங்களாதேசம் ஆகிய நாடுகளுக்கு சீனா இன்னமும் ஆயுதங்களை வழங்கி வருகிறது,

இந்தியாவுக்கு இவை பிடிக்கவுல்லை.

நேபாளத்தில் 1960இலிருந்து வந்த தேசிய பஞ்சாயத்து முறை கடந்தவாரம் கலைக்கப்பட்டது. சிறையிலிருந்த அரசியல் கைதிகள் விடுதலை செய்ய மன்னர் பிரேந்திரா நடவடிக்கை எடுத்துள்ளார்.

மன்னர் பிரேந்திராவின் தந்தையார் மன்னராக இருந்தபோது அமுல் செய்த பஞ்சாயத்து முறையை எதிர்த்து கடந்த வாரம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களை அடக்க பொலிஸார் சுட்டதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மரணமானார்கள். ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் படு காயமடைந்தனர். வெளிநாட்டவர்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கினார்கள். இதனையடுத்து உலக நாடுகளில் நேபாளத்துக்குஇருந்த மதிப்பு குறையத் தொடங்கியது.

மன்னர் பிரேந்திரா உடன் நடவடிக்கை எடுத்தார். எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடாத்தினார். சகல கட்சி ஆட்சிக்கு வழிவகுக்கப்படும் என்று அறிவித்தார். இதனையடுத்து தற்போது அங்கே சுமூக நிலை ஏற்பட்டு வருகிறது. முப்பது வருடங்களால் அரசியல நிலை மாறிபுள்ளது. இவ்வாறாக தெற்காசியப் பிராந்திய நாடுகளுக்குள்ளும், வெளியேயும் பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படுகின்றன.

## உலக அரசியல் நோக்கு

இம்முறை 'சார்க்' மாநாடு மாலைதீவில் நடைபெற ஏற்பாடாகி வருகிறது. இலங்கையில் கடந்த முறை நடக்காததால் மாலைதீவில் நடைபெறும் மாநாட்டை பகிஷ்கரிப்போம் என இலங்கை அறிவித்துள்ளது.

இலங்கையில் இந்திய இராணுவம் இருந்ததால் இம்மாநாடு இங்கு நடைபெறவில்லை. இந்தியப்படை வெளியேறிய பின்னர் இலங்கையிலேயே நடாத்த வேண்டும் எனவும் இலங்கை கோரி வந்தது. ஆனால் தற்போது மாலைதீவில் நடாத்தப்படும் என 'சார்க்' தலைமையகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் நடாத்த வேண்டிய காலம் போய்விட்டதாலேயே மாலைதீவில் நடாத்த வேண்டும் என 'சார்க்' வட்டாரங்கள் கூறுகின்றன.

'சார்க்' யாப்பின்படி ஒரு வருடத்தில் இரு தடவைகள் மாநாட்டை நடத்தலாம்.

இவற்றிலிருந்து 'சார்க்' ஒத்துழைப்பு நாடுகளிடையே பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றை 'சார்க்' நாடுகள் தீர்க்காவிட்டால் யார் தீர்ப்பது. இல்லையேல் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பு பிரிந்து விடலாம்.

பாகிஸ்தான் - இந்தியா காஷ்மீர் பிரச்சினையை ஏன் 'சார்க்' அமைப்பு தீர்க்கக் கூடாது. வல்லரசுகளின் தலையீடின்றி இவற்றை 'சார்க்' அமைப்பு தீர்க்கலாமல்லவா?

### அமெரிக்க - சோவியத் பேச்சுக்கள்

கடந்தவாரம் அமெரிக்க சோவியத் வெளியுறவு அமைச்சர்களின் உயர்மட்டப்பேச்சு வாஷிங்டனில் நடைபெற்றது. எதிர்வரும் மே மாத இறுதியில் நடைபெறவுள்ள அமெரிக்க சோவியத் உச்சி மாநாட்டுக்கு முன்னேற்பாடாகவே வெளியுறவு அமைச்சர்களின் இச்சந்திப்பு இடம்பெற்றது.

ஆயுத உற்பத்திக் குறைப்பு, லித்வேனியா கிழக்கு ஜேர்மன், மேற்கு ஜேர்மன், மத்திய கிழக்கு என்பனவற்றின் பிரச்சினைகள் பற்றி முக்கியமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், சோவியத் தலைவர் கொர்பசேவும் பேச்சு நடாத்தவுள்ளனர். திரு. புஷ் ஜனாதிபதியானதும் இரண்டாவது தடவையாக சோவியத் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார்.

எடுத்துவரும் நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளனர். ஆனால் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவின் ஆட்சி முறையைப் பாராட்டியுள்ளார்.

இதேவேளை லித்வேனியாவில் இராணுவ நடவடிக்கை எடுக்கப் போவதாக சோவியத் தலைவர் கொர்பசேவ் எச்சரித்து வருகிறார்.

பால்டிக் குடியரசான லித்வேனியா கடந்த மாதம்11ஆம் திகதி தன்னைச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்ததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

லித்வேனியாவுடன் பேச்சு நடாத்துமாறு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் சோவியத் யூனியனை வற்புறுத்துகின்றன.

லித்வேனியாவுக்கு எதிராக பொருளாதாரத்தடை எதுவும் நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று சோவியத் தலைவர் அண்மையில் இங்கு வந்த பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

உலகத்தவர்களுக்கு லித்வேனியா பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கப் போவதாகக் கூறும் ரஷ்யா இப்படியான எச்சரிக்கைகளை விடுத்து வருவது மேற்குலக நாடுகளுக்கு பெரும் வியப்பைத் தந்துள்ளது.

இதேவேளை எஸ்தோனியாவும் இவ்வாறாக சோவியத் அரசுக்கு எதிராக செயற்பட முயன்றுள்ளது.
அதற்கும் சோவியத் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எஸ்தோனியா சோவியத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி என்றும் சுதந்திரம் அடைய விரும்புவதாகவும் எஸ்தோனியா கூறிவருகிறதால் சோவியத் யூனியனுக்கு உள்நாட்டில் பிரச்சினைகள் எழுந்துள்ளன.


அன்னையின் மடியில்

28-01-1970



அரக்கன் பிடியில்

15-04-1989

**தம்பிராசா பிரபாகரன் (ஜீவா)**

எமது இனிய ஜீவா
பத்தொன்பது வயதில்
பாதையிலே பலியெடுத்து
பரலோகம் அனுப்பினார்களே
படுபாவிகள். பல பேரின்
பயணம் அனுப்பி வைத்தாய்
பாதியிலே பறித்தார்களே
பாவிகள் உன் பயணத்தை

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அம்மா, அப்பா, சகோதரி
நாவலடி நண்பர்கள்

(B-768)



அன்பர்கள் வாடிக்கையாளர் அனைவருக்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
உரித்தாகட்டும்!

தரமான தெளிவான
போட்டோஸ்ரட் பிரதிகளைப்
பெற்றுக்கொள்ள

**சன்லைட் றைக்கிளினர்ஸ்**
23, பஸ் நிலைய முன்பாக
யாழ்ப்பாணம்

**சன்லைட்**
**றைக்கிளினர்ஸ்**

கச்சேரி முன்பாக
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்



அன்பர்கள் ஆதர ாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த் க்கள் உரித்தாகுக

உங்கள் இல்லங்களை அழகிய நிறங்களில் அழகுபடுத்த **DULUX PENTALITE** பெயின்ற் வகைகளே சிறந்தவை

யாழ் நகரில் மொத்தமாகவும் சில்லறையாகவும் DUCO DULUX PENTALITE (C.I.C. Paints) பெயின்ற் வகைகளை பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

**THE JAFFNA PAINT HOUSE**

**21, Clock Tower Road,**
**JAFFNA**

(B-747)

ஈழநாதம்

## சுழற்சிமுறை உண்ணாவிரதம்

(கரவெட்டி)

அன்னை பூபதி கணபதிப் பிள்ளையின் இரண்டாண்டு ஞாபகார்த்தத்தை முன்னிட்டு நெல்லியடி பஸ்நிலையத்தின் முன்பாகசுழற்சிமுறையிலான உண்ணா விரதம் நடைபெற்று வருகின்றது.

இவ் உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவர்கள் முதியோர்கள் உட்பட பல தரப்பினரும் கலந்து கொள்கின்றனர். (18)

## பாசப்பலி

(சேடநிருபர்)

பெரிய வெள்ளிதினத் தன்று குருநகர், யாகப்பர் ஆலய முன்றலில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் ''பாசப்பலி'' என்னும் பாஸ்கா இசையுரை நடிப்புச் சித்திரத்தை பெருந்திரளான மக்கள் முன்னிலையில் நடித்துக் காண்பித்தனர். (22)

## யாழ்தேவி மோதி வயோதிபர் பலி!

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை யாழ்தேவி ரயிலில் சிக்கி வயோதிபர் ஒருவர் மரணமான சம்பவம் கொக்குவில் ரயில் நிலையம் அருகில் இடம்பெற்றுள்ளது.

இவர் ரயில்பாதையில் படுத்திருந்தபோதே இச்சம்பவம் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆறாவது திருத்தத்தை நீக்க உதவுமாறு

# ஈரோசுக்கு பிரேமா யோசனை

## முட்டை விலை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்டத்தில் முட்டையின் விலை உயர்ந்துள்ளது. தற்சமயம் 1 முட்டையின் விலை ரூபா 3 50 சதமாக விற்பனையாகிறது.

கோழித்தீனின் விலை உயர்ந்ததை அடுத்து முட்டையின் விலையும் உயர்ந்துவிட்டது என கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## இளைஞன் மரணம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் நோக்கிவந்த விசேட ரயிலில் ஏற முயன்ற இளைஞன் ஒருவர் தவறி விழுந்து மரணமானார்.

இதேபோல நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இருந்து வந்த தபால் ரயிலினால் மோதப்பட்டு ஒருவர் பொல்காவலைக்கு அருகில் இறந்துள்ளார்.

## “புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றேயாகவேண்டும்” —ஈரோஸ் எம்பி

(கொழும்பு)

தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும். ஆனால், ஸ்ரீ லங்கா அரசும், தமிழ்பேசும் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரித்துள்ளார்கள். ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளைப் பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்திருப்பதை நாம் வரவேற்கிறோம். இதுகுறித்து எமக்கு மனத்தாங்கல் ஒன்றும் கிடையாது. ஏன் நாம் மனத்தாங்கல் அடைய வேண்டும்? விடுதலைப் புலிகள் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளைப் பெற்றெடுப்பதற்காகத் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள்.

இவ்வாறு ஈரோஸ் மத்திய குழு உறுப்பினரும், பாராளுமன்ற அங்கத்தவருமான திரு; எஸ். ரட்ணராஜா ‘ஐலன்ட்’ பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதிக்கும் எமக்கும் இடையில் நடந்த பேச்சு வார்த்தை பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். 6ஆவது சட்டதிருத்தத்தைநீக்குமபடி பாராளுமன்றத்துக்குள் எம்மைப் போராடும்படி ஜனாதிபதி புரிந்துணர்வுடன் கேட்டுக்கொண்டார். அரசாங்கத்துடன் சேர்ந்து மற்றத் தேசியக் கட்சிகளும் எம்மை ஆதரிக்கலாம் என்று நம்புகிறோம். எதிரணியினர் எப்படி நடந்துகொள்வார்கள் என்று நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஈழவர் ஜனநாயக முன்னணியும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் இரு வேறுபட்ட அமைப்புக்கள் இரண்டிற்கும் வெவ்வேறு வகையான கோட்பாடுகளும், ஸ்தாபன அமைப்புமுறையும், தன்மைகளும் உண்டு, இந்த இரு அமைப்புகளுக்குமிடையிலான ஒத்ததன்மையைச் சொல்வதானால் கடந்தகால அரசாங்கங்களின் கையில்சிக்கி தமிழ்ப்பேசும் மக்கள் பட்ட இன்னல்களுக்கு நியாயம் காண்பதே இரண்டு அமைப்புக்களினதும் இலக்காகும்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை எவராலும் மறுக்க முடியாதென்றும், இதை ஜனாதிபதி பிரேமதாஸாவே ஏற்றுள்ளார் என்றும், அரசியல் செயற்பாடுகளில் தணிந்துபோவதென்று ஈரோஸ் முடிவெடுத்துள்ளது என்றார்.

## புத்தபிக்கு..,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணைக் கவிஞர் வேணியன் என்பவர் வடபகுதிக்கு அழைத்து வந்தார், இவ் சமாதானக் குழுவினர் வடபகுதியிலுள்ள புங்குடுதீவு, வேலணை நல்லூர், நாகபூஷணி அம்மன கோவில், நாகதீப விகாரை, கோண்டாவிலுள்ள எல்.ரி.ரி.ஈ தலைமைச் செயலகம் ஆகிய இடங்ளுக்குச் சென்று பார்வையிட்டனர்.

இக்குழுவினர் நயினைதீவு நாக விகாரை பிரதம குரு தரும கீர்த்தி தேரோவைச் சந்தித்த இடத்தில், அவர் கூறினார். இக்குழுத்தான் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் முதல் முறையாகத் தரை மார்க்கமாக வந்து தரிசித்த முதற் குழு என வர்ணித்தார்.

## படகுகளில் திருட்டு

(புங்குடுதீவு)

குறிகட்டுவானுக்கும், நயினாதீவிற்கும் இடையில் சேவையிலீடுபடும் படகுகள் சிலவற்றில் இருந்து கடந்த 9ம் திகதி இரவு பெருமளவு டீசல் மற்றும் உபகரணப் பொருட்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

இப்படகுகள் நயினாதீவு கோவிலடிப் பாலத்தில் கட்டி வைக்கப்பட்டிருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

தனியார் படகுகளிலும், புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான செந்தாரகைப் படகிலும் இருந்தே மேற்படி களவாடல் நடைபெற்றுள்ளது. (22)

## யாழ். நகரில் குதூகலத்துடன் புத்தாண்டு கொண்டாடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஏழு வருடகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புதுவருடதினம் நேற்று விமரிசையாக கொண்டாடப்பட்டதாக எமது நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

காலையில் மக்கள் ஆலயங்களுக்குச் சென்றனர். மாலையில் பல இடங்களில் விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும்இடம்பெற்றன.

யாழ். நகரில் உள்ள திரை அரங்குகளில் என்றுமில்லாதவாறு சனத்திரள் நிறைந்து காணப்பட்டது.



கிளிநொச்சியில் நடந்த அன்னை பூபதி நினைவு உண்ணா நோன்பின் போது எடுத்தபடம்

## எழுவைதீவு ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மமான இத்தீவில் நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துவருவது பெரும் சிரமமாக இருக்கிறது.

இவ் விடுதலைப் புலிகளின் உதவிக்கு எழுவைதீவு இளைஞர் மன்றத்தினர் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சி ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1106 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப் படும். இக்காணிகளைப் பெறுவதற்கு 1980 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 19 ஆம். 20 ஆம் திகதிகளில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 900 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்

## அபிவிருத்தி ---

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் திரு மாணிக்க வாசகர் பிறப்பித்துள்ள உத்தரவில் மேலும் கூறபட்டுள்ளதாவது:-

89, 90 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இதுவரை ஆரம்பிக்கப்படாத வேலைகளை உடன் ஆரம்பிக்கவும். பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட பணத்தில் வேலைகளை ஆரம்பிக்க முடியாதுவிட்டால்அதற்குரிய காரணங்களை எனக்கு அறியத்தரவும்.

மக்களின் தேவைகளைப்

## அம்பாறையில் எழுச்சி விழா

(அம்பாறை)

''அன்னை பூபதி அவர்கள் உலகில் முதன்முதலாக தமிழுக்காக உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த ஒரு வீரத்தாயாவார். அவரை நினைப்பதில் நாம் என்றும் பின் நிற்கக்கூடாது. என்றோ ஒருநாள் உலகமே அவரை ஒரு வீரத் தாயாகக் கணிக்கும்''

அன்னை பூபதியின் இரண்

## இன்று ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார். வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதா

## மட்டக்களப்பில்..

டதையடுத்துப் பத்துப்பொலி

## இடமாற்றம்

இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் புதுவருடதினம் நேற்று விமரிசையாக கொண்டாடப்பட்டதாக எமது நிருபர்கள் தெரிவிக்கின்றனர்.

## எழுவைதீவு ..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மமான இத்தீவில் நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துவருவது பெரும் சிரமமாக இருக்கிறது.

இவ் விடுதலைப் புலிகளின் உதவிக்கு எழுவைதீவு இளைஞர் மன்றத்தினர் நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

## இன்று ...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார். வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''அகந்தையில் மாய்ந்த மனித குலத்தைச் சமாதானம் மூலமாக ஒன்றிணைக்க முனைந்த கிறிஸ்துவுக்குக் கிடைத்த வெகுமதி சிலுவையில் மரிப்பதுதான்.

மனித சமுதாயத்தில் சமாதானத்தையும், அன்பையும் போதித்து வந்த கிறிஸ்து வழியில் சகல இன மக்களும் அன்டடன் சமாதானத்தைப் பேணி புரிந்துணர்வுடன் வாழ உயிர்த்த ஞாயிறு வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' (21)

## வெளிநாட்டு..
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவில் சென்னை வழியாக கொழும்புக்குக் கொண்டு வரப்படும் போதைவஸ்தில் பெரும்பகுதி மேற்கு ஜேர்மனிக்குக் கடத்தப்படுகிறதாம்.

சென்ற ஆண்டில் ஐரோப்பாவில் போதைவஸ்துக் கடத்திப் பிடிபட்டுத் தண்டனைக்குள்ளான 48 இலங்கையர்களில் 35 பேர் தமிழர், 9சிங்களவர், 2 முஸ்லிம்கள் 2 பறங்கியர் எனப் பொலிஸ் போதைவஸ்து கடத்தல் பிரிவுப் பேச்சாளர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாகச்சென்றவர்களை போதைவஸ்துக் கடத்தல் ''மன்னர்கள்'' போதைப் பொருள்களைக் கடத்துவதற்கும் பயன்படுத்துகிறார்களாம். பிரான்ஸ், சுவீடன், இத்தாலி ஆகிய நாடுகளிலும் இலங்கையர் போதைப் பொருள் கடத்தலில் அதிகமாக ஈடுபட்டு வருவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யில் பல இடங்களில் விளையாட்டுப்போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும்இடம்பெற்றன.

யாழ். நகரில் உள்ள திரை அரங்குகளில் என்றுமில்லாதவாறு சனத்திரள் நிறைந்து காணப்பட்டது.

## கிளிநொச்சி ...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1106 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும். இக்காணிகளைப் பெறுவதற்கு 1980 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 19 ஆம். 20 ஆம் திகதிகளில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 900 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன. இவற்றைப் பெறுவதற்கு 3500 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கான காணிக்கச்சேரி இம்மாதம் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1200 ஏக்கர் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும். இக் காணிகளைப் பெறுவதற்காக 1180 பேர் விண்ணப்பித்துள்ளனர். இக் காணிகளுக்கான காணிக்கச்சேரி இம்மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது-

பளை, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் குறைந்தளவு காணிகளுக்குக் கூடுதலான மக்கள் விண்ணப்பித்துள்ளனர்.

பூநகரி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கூடுதலான காணிகள் இருந்த போதும், குறைந்தளவு மக்களே காணிகளுக்கு விண்ணப்பித்துள்ளனரென கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.



கிளிநொச்சியில் நடந்த அன்னை பூபதி நினைவு உண்ணா நோன்பின் போது எடுத்தபடம்

## மட்டக்களப்பில்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எச்சரித்தார்.

சிறிது நேரம் சம்பந்தப்பட்ட பொலிசார் அடங்கி ஒடுங்கி இருந்தனர்.

சிறிது நேரம் கழித்து அதே பொலிஸ் விடுதியைச் சேர்ந்த பொலிசார் வீதியில் சென்ற பெண்கள் மற்றும பொதுமக்களிடம் அட்டகாசமாக நடந்துகொண்டனர்.

இச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட விடுதலைப் புலிகள் பொலிஸ் நிலையத்தைச் சுற்றி வளைத்து அட்டகாசம் செய்த பத்துப் பொலிசாரை விசாரணைக்காகத் தம்முடன் கூட்டிச் சென்றனர். இதுபற்றிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் தெரிவித்து அவரையும் இவ் விசாரணையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டனர்

இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரீபன் பேச்சுவார்த்தை நடத்தி புத்தாண்டுத் தினத்தில் பொலிஸ் நிலையத்தை விட்டு பொலிசார் எவரும் வெளியே வரக்கூடாது என்ற புலிகளின் நிபந்தனையை ஏற்றுக்கொண்டதையடுத்துப் பத்துப்பொலிசாரும் விடுவிக்க பட்டனர்.

நேற்றுச் சனிக்கிழமை புத்தாண்டுத் தினத்தில் பொலிசார் எவரும் பொலிஸ் விடுதியையோ பொலிஸ் நிலையத்தையோ விட்டு வெளியே வரவில்லை. புத்தாண்டுக் கொண்டாட்டம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் மட்டக்களப்பில் கொண்டாடப்பட்டது.

இதே சமயம் பெரிய வெள்ளிக்கிழமை இரவு களுவாஞ்சிக்குடியிலும் சில பொலிசார் அடாவடித்தனத் திலிறங்கி சீவல் தொழிலாளி ஒருவரைத் தாக்கினர். இதிலும் விடுதலைப் புலிகள் தலையிட்டு நிலைமையைச்சமாளித்தனர். வாழைச்சேனையிலும் பொலிசார் அத்துமீறிய சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட புலிகள் தலையிட்டு நிலைமையைச் சமாளித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்களில் சிங்களப் பொலிசாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக வரும் பொலிசார் தங்குவதற்கு தனிப்பட்டவர்களின் வீடுகள், வங்கிக் கட்டிடங்கள் பலாத்காரமாக எடுக்கப்படுகின்றன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வெளிக்கள ஆய்வு நிலையம் புனர் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு வெளிக்கள நிலையமும் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இதேபோல யாழ். கல்வித் திணைக்களத்தில் சுற்றுலா விடுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளர் விடுத்த வேண்டுகோளையடுத்து வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சின் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

மத்தியகல்லூரி மைதானத்திற்கு இரண்டரை லட்சம் ரூபாவும், தொண்டமானாறு வெளிக்கள நிலையத்துக்கு எட்டு லட்சம் ரூபாவும், சுற்றுலா விடுதிக்கு ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கனகரத்தினம் மகாவித்தியாலயத்துக்கு பாடசாலை மணியும், நீரிறைக்கும் யந்திரமும் வாங்க ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (11)

## ஆட்தொகை ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் முன்னணிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இயக்க மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு. ராஜன் பேசுகையில், சிற்றூர் அவை மற்றும் வட்ட அவை போன்ற கடசி அமைப்புக்கள் கட்டுப்பாடாக ஜனநாயக அமைப்பாக இயங்க வேண்டும். உங்கள் தகுதி திறமையுடன் இயங்க வேண்டும். வழக்காடுமன்றமாக மாறக்கூடாது என்றும், நாங்கள் மக்களின் சேவகர்களே என்றும் அவர் தெரிவித்தார்.

இறுதியாக வலிகாமப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு ஆஞ்சநேயர் பேசுகையில், உறுதியாக போராட்டம் நேசிக்கப்பட வேண்டும் என்று கூறி, நன்றியுரை கூறினார்.

# இடமாற்றம்
(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் திரு.ஆ. மகாலிங்கம் மண்டைதீவு கொத்தணி அதிபராக பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச்செல்வதைக் கௌரவிக்குமுகமாக இந்து மகா வித்தியாலய ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் பிரிவுபசார வைபவம் நடாத்தப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு இராசநாயகம், ஆசிரியர் கழக தலைவர் திரு. பெனடிக்ற், திரு. வே. கெ. தனபாலன் உட்பட வேறு பலரும் பேசினர். (24)

## மாகாணசபை ...
(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மாகாண சபை உறுப்பினர்கள் தங்களுக்கு வேண்டிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் தாமே தெரிவு செய்தார்கள். தெரிவு செய்தவர்களுக்கான பயிற்சி, சம்பள உயர்வு, சம்பளம் என்பன மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டன.

மார்ச் மாதத்திலிருந்து சம்பளத்தை நிறுத்தியதனால், தனது கையாலேயே சம்பளத்தைக் கொடுக்க வேண்டியிருந்ததென்றும் தனக்குப் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவையில்லை. எனது மனோதிடம் ஒன்றே போதுமென்று வடக்குக் கிழக்கு மாகாண சபைப் போக்குவரத்து அமைச்சர் அபுயூசுப் தெரிவித்தார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் முதன் முறையாகத் தரை மார்க்கமாக வந்து தரிசித்த முதற் குழு என வர்ணித்தார்.

## அபிவிருத்தி ---
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் திரு மாணிக்க வாசகர் பிறப்பித்துள்ள உத்தரவில் மேலும் கூறடபட்டுள்ளதாவது:-

89, 90 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து இதுவரை ஆரம்பிக்கப்படாத வேலைகளை உடன் ஆரம்பிக்கவும். பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒதுக்கப்பட்ட பணத்தில் வேலைகளை ஆரம்பிக்க முடியாதுவிட்டால்அதற்குரிய காரணங்களை எனக்கு அறியத்தரவும்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், நாட்டை அபிவிருத்தி செய்யவும் ஒதுக்கப்பட்ட இப்பணம் வீணே முடங்கிக் கிடப்பதை அனுமதிக்க முடியாது.

ஒதுக்கப்பட்ட பணம் உரிய தேவைக்குப் பயன்படுத்தப்படல்வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வகுக்கப்பட்ட கால எல்லைக்குள் வேலைகள் அனைத்தும் செய்து முடிக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடற்றொழில் ...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கு விமோசனம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமாகும் என்றார்.

இக்கூட்டத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. எஸ். குணம் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் மீன்பிடித் தொழிலில் நீண்ட காலமாக இருந்து வந்த சிறுதொழில், றோலர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்குமுகமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் ''வட பிராந்திய கடற்றொழில் யாப்பு'' அறிமுகம் செய்யப்பட்டது,

யாழ் மாவட்டப் பொறுப்பாளர் திரு ஸ்ரான்லி டொமினிக் அறிமுகப்படுத்தி உரையாற்றினார், யாப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள முன்னணித் தொடர்பாளர் திரு. ஸ்ரெனின்லாஸ் வாசித்தார். இதனையடுத்து கடற்றொழிலாளர்களின் கேள்விகளுக்குத் திரு. பாலன் பதிலளித்தார்.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்கங்களிலிருந்தும் தலைவர்கள், செயலாளர் உட்பட நான்கு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தனியார் படகுகளிலும், புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான செந்தாரகைப் படகிலும் இருந்தே மேற்படி களவாடல் நடைபெற்றுள்ளது. (22)

# அம்பாறையில் எழுச்சி விழா
(அம்பாறை)

''அன்னை பூபதி அவர்கள் உலகில் முதன்முதலாக தமிழுக்காக உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த ஒரு வீரத் தாயாவார். அவரை நினைப்பதில் நாம் என்றும் பின் நிற்கக்கூடாது. என்றோ ஒருநாள் உலகமே அவரை ஒரு வீரத் தாயாகக் கணிக்கும்''

அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவை முன்னிட்டுப் பாண்டிருப்பு திரௌபதை அம்பாள் ஆலய முன்றலில்நடைபெற்ற சுழற்சி முறை உண்ணா விரதத்தை முடித்து வைத்து உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் பாண்டிருப்புப் பொறுப்பாளர் திரு. வின்சன்ற் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்: எதிர்வரும 19ம் திகதி அம்பாறைமாவட்டத்தில்அன்னை பூபதியின் நினைவை ஒரு எழுச்சி விழாவாகக் கொண்டாடவிருக்கின்றோம். அவ் விழா கிழக்கிலங்கை வரலாறு காணாத ஒரு விழாவாக அமையுமெனவும் அவர் சொன்னார் (48)

# வங்கியில் ஏமாற்று முயற்சி
(ஈச்சமோட்டை)

மீளக் குடியமர்தல் நிவாரணப பணமாக வழங்கப்பட்ட 1000 ரூபாவைப் பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் மேலதிகமாக 500 ரூபாவைப் பெற முயற்சித்த சம்பவம் காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இப்பணத்தைப் பெற்றுக் கொண்ட இளவாலை வசந்தபுரம் வாசி ஒருவர் மீண்டு வந்து தமக்கு 500 ரூபா மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் மிகுதி 500 ரூபாவை உடன் தரும்படியும் உத்தியோகத்தரை வற்புறுத்தினாராம். உடனே அங்கு பணிபுரிந்த சக ஊழியர்களும், வசந்தபுரக் கிராம சேவையாளரும் அந்த நபரை வளைத்துப் பிடித்துச் சோதனை நடத்தியபோது அவரது சேர்ட் பொக்கற்றில் 500 ரூபாவும், அவரின் பையிலிருந்த பொலிதீன் பையில் ஐநூறுரூபாவும் மறைக்கப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது. 4೭

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஈழநாதம்

## ஞாயிறு மலர்

எல்லாவற்றிலும் சரியாக நடந்து அனைவரையும் மகிழ்ச்சியிலாழ்த்த முயற்சி செய்யும் அரசியல்வாதிகளும், வாய்ச்சொல் வீரர்களும் நிச்சயமாக அனைத்தைப் பற்றியும் கூறி ஒவ்வொருவரையும் ஏமாற்றுகிறார்கள். புரட்சிக்காரர்களோ தங்களது கருத்துக்களை துணிவோடு அறிவிக்கிறார்கள்; தங்களது குறிக்கோள்களை விளக்குகின்றார்கள்; தங்கள் நோக்கங்களை வெளிப்படுத்துகிறார்கள்; எனவே, அவர்களது நண்பனோ' எதிரியோ, எவருமே அவர்களால் ஏமாற்றப்படுவதில்லை.

- ஃபிடல் காஸ்ட்ரோ





சிறுமை கண்டு பொங்கி
சினங்கொண்டு — வீறாய்
சீறும் சிறுத்தைகள் தான்...

பொறுமை தகர்த்திங்கோர்
பூகம்பம் நிகழ்ந்ததன்பின்
வெறுமை எறிந்த மண்ணில்
வீறு கொண்டெழுந்தமையால்...

அருமை மிகு அழகான
அன்னை பூமிதனில்
கருமை அகன்றொருநாள்
கங்குல் விடிந்தது பார்...

சுதந்தரமாய் சிறுத்தை
சுதந்திரமாய்த்தி இருப்பதனால்
வந்தது பார் இங்கு...
வளமான ஓர் அமைதி ..

— துவாரகன்

### கள நிகழ்வுகளும் கள நினைவுகளும்



தியாகி திலீபன் அன்றொரு நாள் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை முன் பேசுகின்ற போது பின்வருமாறு குறிப்பிட்டான்.

''இதோ இந்த டச்சுக் கோட்டை ஒல்லாந்தரால் கட்டப்பட்டது. இதில் முதவில் ஒல்லாந்தர் அமர்ந்து ஆட்சி புரிந்தார்கள். அதன் பின்னர் ஒல்லாந்தரிடமிருந்து இக்கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன் பின்னர் இதனை சிங்களவர் தம் வசமாக்கிக் கொண்டனர். இப்போது இந்தியர்கள் இங்கே தங்கியிருக்கிறார்கள். என்றைக்கு இக் கோட்டையில் புலிக் கொடி பறக்கின்றதோ அப்போது தான் தமிழர் சுதந்திரம் பெற்றனர் என்பது பொருளாகும்''

ஆம் தமிழ் மண்ணை போர்த்

இராணுவத்தின் அட்டூழியங்களை எதிர்த்து பொதுமக்

தலைகீழாக கட்டித் தொங்க விட்டது தொடக்கம் கழுத்துக்குக்கீழ் நிலத்திற்கு அடியில் நாட்கணக்கில் புதைத்து வைத்தது வரை இழைத்த கொடுமைகளோ எண்ணிலடங்கா எத்தனையோ அப்பாவி பொதுமக்கள் சித்திரவதைக் கொடுமைகளால் இராணுவ முகாம்களிலேயே மடிந்தனர். கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளை விடுவிக்க முயன்ற பெற்றோர்களிடம் ஆயிரக்கணக்கில் பணம் இந்திய ஜவான்களால் கப்பமாக கொள்ளை அடிக்கப்பட்டது. றேடியோ, தொலைக்காட்சிபெட்டி டேப் றெக்கோடர்கள் முதலானவற்றிற்காக மக்களின் உயிர்கள் பேரம் பேசப்பட்டன. அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு இம்மண்ணின் தேசத்துரோகிகளும் பலவித சேவகங்களைச் செய்தனர்.

**மக்கள் யுத்தம்**

இருந்ததாகவும் ஒரு பொய்ப் பிரசாரம் இந்திய 'றோ' கும்பல்களால் கட்டவிழ்த்து விடப்பட்டது. இவ்வாறு காந்திதேசம் சாத்வீக போராட்டங்களை இராணுவ ரீதியாக எதிர்கொண்டது.

**அன்னை முன் வந்தார்**

அன்னையர் முன்னணியினர் உண்ணாநோன்பைக் கைவிட்டதை தொடர்ந்து அன்னைபூபதி அவர்கள் மார்ச் மாதம் 19ஆம் திகதி (19-3-1988) தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். தொடங்கும்போது அன்னை பின்வருமாறு சத்தியக் கடதாசி எழுதிக்கொடுத்தார்.



முதலாவது; இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்தல் வேண்டும்.

இரண்டாவது: தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை இந்தியா மேற்கொள்வதன் மூலம் ஜனநாயக ரீதியாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணல்வேண்டும்.

**இந்தியாவின் வீறாப்பு**

அன்னையின் இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிராகரித்த இந்தியா விடுதலைப் புலிகள்மீது இராணுவ பலத்தைப் பிரயோகித்து புதிதாக இரண்டு தாக்குதல்களை தொடுத்தது. அதாவது

குதலுக்கு இந்திய விமானப் படையின் ஹெலிகப்டர்கள் பயனபடுத்தப்பட்டு ஆகாய மார்க்கமான தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. 250 கிலோ எடையுள்ள குண்டுகள ஆகாயமார்க்கமாக காடுகளில் இத்தாக்குதல்களின் போது வீசப்பட்டன. இத்தாக்குதலின் நோக்கம்பற்றி சூரிய நாராயணா தனது 'The Peace Trap'' என்ற நூலில் பின்வருமாறு எழுதுகின்றார்.

''The Idea was to Trace down Prabhakaran as early as possible by Forcing him to come out of his jungle hide outs in this region''

அதாவது பிரபாகரனை இக் காட்டுப் பிரதேச மறைவிடங்களிலிருந்து வெளியேறுமாறு செய்வதே இத்தாக்குதலின் நோக்கமாகும் என்றார். ஆனால் உண்மையில் 250 கிலோ எடையுள்ள குண்டுகளை வீசியது விடுதலைப் போராளிகளின் உயிருக்கு தீங்குவிளைவிக்கவேயாகும்.

அன்னை பூபதியின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை இராணுவ பலத்தால் எதிர்கொண்ட இந்தியா செய்வதறியாது நின்றது. அன்னையின் ஆத்மபலம் உறுதியாக நின்றமையால் அன்னை உண்ணா நோன்பைத் தொடர்ந்து மேற்கொண்டு ஒரு மாதத்தின் பின்னர் 31 நாட்களின் பின்னர் தியாக மரணமடைந்தார். உலகிலேயே உண்ணா நோன்பிருந்து உயிர்துறந்த முதல பெண்மணி என்ற பெருமையையும் பெற்றார்.

**சுவடியின பதிவுகள்**

தமது தூய இலட்சியத்திற்காக உண்ணா நோன்பை மேற்கொண்டு போராடி உயிர்துறந்த வீரமறவர்களின் பெயர்களை வரலாற்று சுவடிகள் பதிவு செய்து

ராகவும் தான் உண்ணா நோன்பை மேற் கொண்டவர்கள் உயிர்துறந்ததாக வரலாறே பதிவு செய்துள்ளது.

இலங்கையிலும் இந்திய ஏகாதிபத்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிராக முதலில் ஆயுதப் போராளியான தியாகி திலீபன் உண்ணா நோன்பை மேற்கொண்டு பன்னிரண்டு நாட்களின் பின்னர் தியாக மரணமடைந்தான். அன்னை பூபதி திலீபன் காட்டிய பாதையில் உண்ணா நோன்பை மேற் கொண்டு 31 நாட்களின் பின்னர் தியாக மரணமடைந்தார்.

அந்நிய ஆக்கிரமிப்பாளர்களான போத்துக்கேயரை ஆயுதமுனையில் சங்கிலியன் எதிர்த்துப் போரிட்டது வரலாறாகி விட்டதுபோல, நல்ல நாச்சியார் ஒல்லாந்தரை வாள் முனையில் எதிர்த்துப் போராடியது எப்படி வரலாறாகிவிட்டதோ ஆங்கிலேயரை பண்டாரவன்னியன் ஆயுதமுனையில் எதிர்கொண்டது வரலாறாகி விட்டது போல அந்நிய ஆக்கிரமிப்பாளர்களான இந்திய அரசுக்கு எதிராக திலீபனும் அன்னை பூபதியும் அகிம்சை வழியில் எதிர்த்துப் போராடியதும் விடுதலைப் புலிகள் இந்திய பிராந்திய வல்லரசு வாதத்திற்கு எதிராக ஆயுத முனையில் எதிர்த்துப் போராடி வெற்றி கண்டதும் வரலாறாகி விட்டது. ஒல்லாந்தரை எதிர்த்த நல்ல நாச்சியார் ஒளிவிளக்கு இந்தியரை அம்பலப்படுத்திய அன்னைபூபதி இன்று தமிழ் இனத்தின் கலங்கரை விளக்கு.

**தியாகத்தின் அறுவடைகள்**

அன்னைபூபதி அவர்களது நியாய பூர்வமான கோரிக்கைகளுக்கும் சாத்வீக ரீதியான போராட்டங்களுக்கும் இராணுவ மொழியில் பதில் சொல்ல முயன்ற இந்தியாவின் இராணுவபலம் இறுதி தோல்வியில் முடிந்தது. தொடர்ச்சியாக இந்தியா விடுதலை புலிகளுடன் இராணுவ ரீதியாக தோல்வியடைவதைக்கண்ட இலங்கை அரசு முதலில் விடுதலைப்புலிகளுட நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் உட படட்டது. அப்போது தான் அன்னைபூபதியின் அர்ப்பணிப்பு அர்த்தமுள்ள வடிவம் பெற்றது தியாகம் உயிர்ப்பு பெற்றது. இறுதியில் இந்தியாவும் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கு சம்மதித்த போது இந்தியாவின் இராணுவபலம் தோற்றது. அன்னைபூபதியின் ஆத்மபலம் வெற்றி பெற்றது. அன்னை பூபதி செய்த தியாகம் அடுத்த சில சகாப்தங்களுக்கு

## நேதாஜி

கொண்டிருக்கின்றன. இவை பிறிட்டின் ஏகாதிபத்திய கொடுமைகளுக்கு எதிராக அயர்லாந்து வீரர்களும் இந்திய மத்திய அரசின் ஏதேச்சதிகாரத்துக்கெதிராக இந்திய மக்களும் மேற்கொண்டவையாகவேயுள்ளன

அயர்லாந்தின் சுதந்திரத்திற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்த ரெரென்ஸ் மாக்ஸ்வினி இருநூறு நாட்களின் பின் உயிரைத்தியாகம் செய்தார். இதேபோல் அயர்லாந்து நாடாளுமன்ற எம். பியான பொபிசாண்ட்ஸ் சிறைக் கொடுமைகளுக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்து இறந்தார். இவரைத் தொடர்ந்து 10 பேர் இவ்

றொரு நாள் யாழ்ப்பாணம் டச்சுக் கோட்டை முன் பேசுகின்ற போது பின்வருமாறு குறிப்பிட்டான்.

''இதோ இந்த டச்சுக் கோட்டை ஒல்லாந்தரால் கட்டப்பட்டது. இதில் முதவில் ஒல்லாந்தர் அமர்ந்து ஆட்சி புரிந்தார்கள். அதன் பின்னர் ஒல்லாந்தரிடமிருந்து இக்கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன் பின்னர் இதனை சிங்களவர் தம் வசமாக்கிக் கொண்டனர். இப்போது இந்தியர்கள் இங்கே தங்கியிருக்கிறார்கள். என்றைக்கு இக் கோட்டையில் புலிக் கொடி பறக்கின்றதோ அப்போது தான் தமிழர் சுதந்திரம் பெற்றனர் என்பது பொருளாகும்''



ஆம் தமிழ் மண்ணை போர்த்துக்கேயர் ஆக்கிரமித்தபோது யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசனான சங்கிலியன் ஆயுத முனையில் எதிர்த்துப் போராடினான். பின்னர் ஒல்லாந்தர் ஆக்கிரமித்தபோது நல்ல நாச்சியார் என்ற வீரத்தமிழ்ப் பெண் வாளேந்தி வீரப்போர் புரிந்து அந்நியரை எதிர்த்துப் போராடினாள். அதன்பின் ஆங்கிலேயர் தமிழ் மண்ணை ஆககிரமித்த போது பண்டார வன்னியன் ஆயுத மேந்திப் போராடி அந்நியரை எதிர்த்தான். பின்னர் சிங்களவர் ஆட்சி ஏற்பட்ட போது இன ரீதியான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக தியாகி சிவகுமாரனும் தலைவர் பிரபாகரன் தலைமையில் விடுதலைப்புலிகளும் ஆயுதமேந்தியே போராடினார்கள். சிங்கள இராணுவம் தோல்வியைத் தழுவக் கூடாது என்பதற்காக இந்திய மத்திய அரசு விடுதலைப் புலிகளுடன் மோதலைத் தொடங்கியது. இந்திய இராணுவத்தின் இராணுவ ரீதியான ஒடுக்குமுறைகளை விடுதலைப் புலிகள் ஆயுதமுனையில் எதிர்கொண்ட வேளையில் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை எதிர்த்து பொதுமக்கள் பலரும் தமக்கு நன்கு பழக்கப்பட்ட சாத்வீக வடிவில் போராட்டங்களை முன் எடுத்தனர். தேடுதல் வேட்டை என்ற பெயரில் இந்திய இராணுவ துருப்புகள் ஆயிரக் கணக்கில் கவசவாகனங்களிலும் கால் நடையாகவும் கிராமங்களைச் சுற்றி வளைத்து பொதுமக்களை இளைஞர்கள் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்ற வேறுபாடின்றி கோயில்களிலும் மைதானங்களிலும் பொது இடங்களிலும் கடும் வெய்யிலிலும் மழையிலும் மணிக் கணக்காக இருக்க வைத்தும் நிற்க வைத்தும் கொடுமைப் படுத்தியது. அத்தோடு தலையாட்டிகளைக் கொண்டுவந்து அவர்கள் முன் நிறுத்துவதும் தலையாட்டிகள் மூலம் சந்தேகத்திடமானவர்களைக் கைது செய்து முகாம்களுக்கு கொண்டு சென்று சித்திர வதை செய்வதும் சகஜமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. கைது செய்யப்பட்ட பொதுமக்களுக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளோ நாகரிக உலகமே கண்டிராத கேட்டிராத இம்சைகளாகும்.

துக்குக்கீழ் நிலத்திற்கு அடியில் நாட்கணக்கில் புதைத்து வைத்தது வரை இழைத்த கொடுமைகளோ எண்ணிலடங்கா எத்தனையோ அப்பாவி பொதுமக்கள் சித்திரவதைக் கொடுமைகளால் இராணுவ முகாம்களிலேயே மடிந்தனர். கைது செய்யப்பட்ட தமது பிள்ளைகளை விடுவிக்க முயன்ற பெற்றோர்களிடம் ஆயிரக்கணக்கில் பணம் இந்திய ஜவான்களால் கப்பமாக கொள்ளை அடிக்கப்பட்டது. றேடியோ, தொலைக்காட்சிபெட்டி டேப் றெக்கோடர்கள் முதலானவற்றிற்காக மக்களின் உயிர்கள் பேரம் பேசப்பட்டன. அந்நிய ஆக்கிரமிப்பாளனுக்கு இம்மண்ணின் தேசத்துரோகிகளும் பலவித கேவலங்களைச் செய்தனர்.

## மக்கள் யுத்தம்

இந்நிலையில் 1988 முற்பகுதியில் அன்னையர் முன்னணி பல இடங்களிலும் உண்ணாநோன்பை மேற்கொண்டு தமது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினார்கள். திருகோணமையில் சுசீலா கணேசனும் மட்டக்களப்பில் அன்னம்மா டேவிட், நேசம்மா வடிவேலு ஆகிய இரு பெண்களும் சாகும் வரை உண்ணா நோன்பை மேற் கொண்டனர். அன்னம்மா டேவிட்டை இந்தியா பலாத்காரமாக கடத்திச் சென்று வைத்தியசாலையில் அனுமதித்து சாத்வீகப் போராட்டத்தை முறியடித்தது. திருமதி. அன்னம்மா டேவிட்டின் பிள்ளைகள் வேண்டிக் கொண்டமையால் தான் தாம் அவ்வாறு செய்ததாக இந்தியா தன்னை நியாயப்படுத்த முயன்றது.

இதற்கு மேலாக இந்தியா தனது மேலாதிக்க கரங்களை அகல விரிவுபடுத்தி இன்னுமொரு பொய்ப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டது. அதுதான் விடுதலைப் புலிகளின் நிர்ப்பந்தத்தின் பேரில் தான் அன்னம்மா டேவிட் உட்பட பலர் உண்ணாவிரதம்

கும்பல்களால் கட்டவிழ்த்து விடப்பட்டது. இவ்வாறு காந்திதேசம் சாத்வீக போராட்டங்களை இராணுவ ரீதியாக எதிர்கொண்டது.

## அன்னை முன் வந்தார்

அன்னையர் முன்னணியினர் உண்ணாநோன்பைக் கைவிட்டதை தொடர்ந்து அன்னைபூபதி அவர்கள் மார்ச் மாதம் 19ஆம் திகதி (19-3-1988) தனது சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். தொடங்கும்போது அன்னை பின்வருமாறு சத்தியக் கடதாசி எழுதிக்கொடுத்தார்.



''மட்டுநகர் மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் உண்ணாநோன்பை மேற்கொண்டுள்ள யான்எனது சொந்த விருப்பின் பேரிலேயே இதனைச் செய்கிறேன். எவரதும் வற்புறுத்தலிலோ அல்லது நிர்ப்பந்தத்திலோ செய்யவில்லை. உண்ணா நோன்பு மேற்கொள்வது என்ற எனது முடிவானது இறுதியானது மட்டுமல்ல கைவிடப்பட முடியாதது மாகும். எத்தகைய இடர்ப்பாடான சூழ்நிலை ஏற்பட்டாலும் எனது கோரிக்கைகள் நிறைவேறும் வரை யான் எனது முடிவில் மாற்றத்தைச் செய்ய மாட்டேன் என இத்தால் உறுதி கூறுகிறேன்''

இது அன்னை எழுதிக் கொடுத்த சத்தியவாசகங்கள். இதற்கு முன்னர் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டங்களின் போது இந்தியா மேற்கொண்ட தரக்குறைவான செயல்களை மனதில் கொண்டு உண்ணாநோன்பை ஆரம்பித்த தினம் அன்னை பூபதி உரையாற்றும்போது பின்வருமாறு கூறினார்.

''சாத்வீகப் போராட்டத்தை மதித்து நடக்கும் இந்தியா எமது போராட்டத்தை மாசுபடுத்தாது என நம்புகிறேன்.'' என்றார். அன்னைபூபதி இரண்டு கோரிக்கைகளை முன்வைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்தல் வேண்டும்.

இரண்டாவது: தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை இந்தியா மேற்கொள்வதன் மூலம் ஜனநாயக ரீதியாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணல்வேண்டும்.

## இந்தியாவின் வீறாப்பு

அன்னையின் இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிராகரித்த இந்தியா விடுதலைப் புலிகள்மீது இராணுவ பலத்தைப் பிரயோகித்து புதிதாக இரண்டு தாக்குதல்களை தொடுத்தது. அதாவது அன்னைபூபதியின் உறுதி குலையாதஉண்ணாநோன்பின் காரணமாக தமிழ்ப்பிரதேசங்களில் தமிழ் மக்களது உணர்வுகள் கொந்தளித்து வளர்வதைக் கண்ட இந்தியா, அந்த சாத்வீகப் போராட்டத்தின் எதிரொலிகள் தனக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் எனக் கண்ட இந்தியா அதனை இராணுவ ரீதியாக எதிர்கொள்ளத் தயாரானது.

## இரண்டுபுதிய தாக்குதல்கள்

1988 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல்வாரத்தில் ''ஒப்றேஷன் விராட்'' என்ற பெயரில் விடுதலைப் புலிகள் மீது ஒரு தாக்குதல்மேற்கொள்ளப்பட்டது. ஆனையிறவுக்குத் தெற்கே கண்டி வீதியின் கிழக்குப் பக்கமாக அடர்ந்த காடுகளில்



தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டன. இதே வேளையில் இந்தியத் துருப்புகள் ஆனையிறவுக்குத் தெற்கே கண்டி வீதியின் மேற்குப்புறமாக ''ஒப்றேசன் திரிசூலம்'' என்ற பெயரில் வன்னியின் அடர்ந்த காடுகளில் தேடுதல் வேட்டையையும் பலத்த தாக்குதல்களையும் மேற்கொண்டது. இரண்டு தாக்குதல்களுக்கும் பொதுவாக ஒப்றேசன் விராட்-திரிசூலம் எனப் பெயர் இடப்பட்டது. இந்தத் தாக்

# நேதாஜ்

கொண்டிருக்கின்றன. இவை பிறிட்டின் ஏகாதிபத்திய கொடுமைகளுக்கு எதிராக அயர்லாந்து வீரர்களும் இந்திய மத்திய அரசின் ஏதேச்சதிகாரத்துக்கெதிராக இந்திய மக்களும் மேற்கொண்டவையாக வேயுள்ளன

அயர்லாந்தின் சுதந்திரத்திற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்த எரைன்ஸ் மாக்ஸ்வினி இருநூறு நாட்களின் பின் உயிரைத்தியாகம் செய்தார். இதேபோல் அயர்லாந்து நாடாளுமன்ற எம். பியான பொபிசாண்டஸ் சிறைக் கொடுமைகளுக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்து இறந்தார். இவரைத் தொடர்ந்து 10 பேர் இவ்விதம் உண்னாவிரதம் இருந்து சிறையில் இறந்தனர்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது பிரிட்டிஷாரின் சிறைக் கொடுமைகளை எதிர்த்து ஜிதேந்திரநாத் என்ற இந்தியதேசபக்தர் சிறையில்



உண்ணாவிரதம் இருந்தார். இவர் 63 நாட்களின் பின் உயிர்துறந்தார்.

ஆந்திர மாகாணத்தைப் பிரித்துத்தர வேண்டும் என்று 1953 ஆம் ஆண்டு பொட்டி ஸ்ரீ ராமுலு உண்ணாவிரதம் மேற்கொண்டார். பண்டிதர் நேரு அவரது கோரிக்கைகளை ஏறெடுத்துப் பாராமையால் அவர் 58 ஆம் நாள் உயிர்துறந்தார்.

இதேபோல சென்னை மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று கோரி சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதம் மேற்கொண்டார். பண்டிதர் நேரு இவரது கோரிக்கைகளையும் ஏறெடுத்தும் பாராமையால் அவர் 78 ஆம் நாள் உயிர்துறந்தார்.

உலகத்திலேயே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் இந்திய ஏகாதிபத்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதி

ணுவ மொழியில் பதில் சொல்ல முயன்ற இந்தியாவின் இராணுவ பலம் இறுதி தோல்வியில் முடிந்தது. தொடர்ச்சியாக இந்தியா விடுதலை புலிகளுடன் இராணுவ ரீதியாக தோல்வியடைவதைக்கண்ட இலங்கை அரசு முதலில் விடுதலைப்புலிகளுட நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கும் உட பட்டது. அப்போது தான் அன்னைபூபதியின் அர்ப்பணிப்பு அர்த்தமுள்ள வடிவம் பெற்றது. தியாகம் உயிர்ப்பு பெற்றது. இறுதியில் இந்தியாவும் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்திற்கு சம்மதித்த போது இந்தியாவின் இராணுவபலம் தோற்றது. அன்னைபூபதியின் ஆத்மபலம் வெற்றி பெற்றது. அன்னை பூபதி செய்த தியாகம் அடுத்த சில சகாப்தங்களுக்கு இலட்சியப்போரின் சங்கநாதமாகவே ஒலித்துக்கொண்டிருக்கும். அதனை இக்கவிதை வரிகள் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளன.

மதுரையில் நீதிகேட்டு
கண்ணகி காற்சிலம்புடன்
நடந்தாள்
மட்டக்களப்பில் நீதிகேட்டு
'பூபதி' பசித்த வயிற்றுடன
கிடந்தாள்
காந்தி பிறந்த தேசத்திற்கு
திலீபன் கன்னத்தில்
அறைந்தான்
.... அன்னை பூபதி
அடிக்கவில்லை காறி
உமிழ்ந்தாள்
''இந்திய அரசே'' வேங்கை
களுடன் போதாதே!
நிறுத்து! என்று
போராடினாய்
உண்ணா நோன்பிருந்து
உருகினாய்
அவர்கள் உன் மூச்சையே
நிறுத்திவிட்டார்கள்
பாரத அரசு! உன்சாவுக்குப்
பின்பு
பாதக அரசு என்பது
புலனாயிற்று
அம்மா! உன் இறப்பு
இந்திய அரசை அம்மண
மாக்கியது
வெட்கம் கெட்டவர்கள்
வெளியில் உலாவுகின்
றனர்
தாயே! நீ......
உண்ணா நோன்பிருந்து
மரணித்த
முதற் பெண்மணி!
தமிழீழ மக்களின்
கண்மணி!
தியாகப்புயலே எங்கள்
தேசத்தின் கனலே!
உன் மூச்சுக் கலந்த
காற்றுப்பட்டாலே...
வீரம் பிறக்கும்
தாயே! வணங்குகிறோம்
வாழ்த்துச்சொல்லு!
படைகள் புறப்படுகிறது
வழியனுப்ப வா □

ஆந்திர மாகாணத்தைப் பிரித்துத்தர வேண்டும் என்று கோரி 1953ஆம் ஆண்டு பொட்டி ஸ்ரீ ராமுலு மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தைப் பண்டிதர் நேரு அசட்டை செய்தமையால் 58 ஆம் நாள் அவர் உயிர்பிரிந்தது. சென்னை மாநிலத்திற்கு தமிழ் நாடு என்ற பெயர் மாற்றம் செய்ய வேண்டி உண்ணா நோன்பு மேற் கொண்ட சங்கர லிங்க நாடார் மேற்கொண்ட உண்ணா நோன்பைப் பண்டிதர் நேரு ஏறெடுத்தும் பாராமையால் அவர் 78 ஆம் நாள் உயிர்துறந்தார். இதேபோல தியாகி திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகளையும் அன்னை பூபதியின் இரண்டு அம்சக் கோரிக்கைகளையும் பண்டிதர் நேருவின் பேரன் ராஜீவ் காந்தி நிராகரித்து அவர்களது மரணத்திற்கு காரணமாயினார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்களிப்பு செய்ததாக மார்தட்டிக் கொள்ளும் நேரு பரம்பரை காந்தியப் போராட்டங்களை மேற் கொண்டோரை மரணிக்க வைத்துப் பெருமையடைவதுதான் நவீன இந்தியாவா?

# பாரதச்சுவடுகள்

--- பாப்பாணன்

(6)

எத்தனையோ செய்தார்கள் ஏற்று விட்டோம்
எதுவெதுவோ செய்தார்கள் சகித்து விட்டோம்
முத்தனைய தமிழுக்கு விழாவெடுக்க
முன் வந்தார் தமிழீழ மண்ணின் மீது
வித்தகர்கள் பல் திசையும் இருந்து இந்த
விழாவினிலே கலந்து கொள்ள ஆசையுற்றார்
சுத்தமிலா மனத்தர் சிலர் அவ் விழாவை
சூதிழைத்துக் கலைத்திடவே எண்ணலுற்றார்.

"சிங்களமே ஆளுகின்ற இந்த நாட்டில்
சிறப்பாமோ தமிழுக்கு?" என்று நெஞ்சில்
பொங்கிவரும் காழ்ப்புக்கு இலக்கு ஆகி
போட்டார்கள் திட்டங்கள் குழப்புதற்கு
"அங்கெதந்து வடக்கினிலே தமிழ் மாநாடு
அதுவேண்டாம் தெற்கினிலே நடத்தும்போதும்
இங்கறிஞர் வரப்போக வசதியுண்டு
இன்னுமெங்கள் ஒத்துழைப்பு முழுதுமுண்டு.

"பண்டாரநாயக்கா மண்டபத்தை
பாவிப்பீர் அதற்கொன்றும் தடைகளில்லை
கண்டாரும் கேட்டாரும் வியக்கும் வண்ணம்
கலைத்துவம் சேர் பந்தல்களும் போட்டு வைப்போம்
பண்டான புகழ்மிக்க தமிழின் நாமம்
பறைசாற்றி வானொலிக்க வசதி செய்வோம்
உண்டான 'செலவெல்லாம் அரசே செய்யும்
உங்களது பிடிவாதம் விடும்" என்றார்கள்.

ஆட்டினுக்காய் அழுகின்ற ஓநாய் போல
அன்றவர்கள் வடித்திட்ட நீலிக்கண்ணீர்
போட்டிமனப் பான்மையிலே வாய்மையற்று
பொழிகின்ற தென்பதனை அறிவார் எம்மார்
"ஆட்டிவைத்த படியெல்லாம் ஆடுதற்கு
அறிவற்ற குரங்குகளா தமிழர் கூட்டம்
காட்டிவைப்பம் காண்பீர்கள் திறனை" என்று
கருமத்தில் குதித்தார்கள் எம்மவர்கள்.

தாய்மொழிக்கு எடுக்கின்ற விழாவதனை
தமிழர்தம் நாட்டிற்றான் செய்ய வேண்டும்
ஏய்ப்புகளுக்கெடுபட்டு கொழும்பில் வைத்தால்
எமமவர்கள் எப்படித்தான் கலந்து கொள்வார்?
நாய்ப்புத்தி நமக்கில்லை எச்சில் உண்ண
நட்டமெது வந்தாலும் நல்விழாவை
சேய் தமிழர் செறிந்துள்ள யாழ் நகரில்
செய்திடுவோம்" என இறுதி முடிவெடுத்தார்.

தலை நகராம் கொழும்பினிலே விழாவெடுக்க
தமிழறிஞர் பூரணமாய் மறுத்தபோது
தலையாட்டிப் பொம்மைகளாய் சில தமிழர்
[illegible]

## விண்வெளி விஞ்ஞானம்

### விண்வெளி விநோதம்

ஒளி வண்ணத்தில், டொப்ளர் விலக்கம் பெரும்பாலான கிரகங்கள், நட்சத்திரங்களைப் பொறுத்தவரை மிகவும் சிறப்பாக உதவி செய்கிறது. வெள்ளிக் கிரகத்தில் மட்டும், பல தடவைகள் இந்த முறையைப் பிரயோகத்தும், ஒருதடவை கூட இது பலனைக் கொடுக்கவில்லை. உலகத்தில் உள்ள மிகச் சிறந்த நவீன தூரதரிசினிகள் இம்முயற்சியில் பயன்படுத்தப்பட்டும், எவ்வித பிரயோசனமும் ஏற்படவில்லை. தொடர்ந்து தோல்வியே கிடைத்தது. வெள்ளியின் விளிம்புகளில் இருந்து பிரதிபலிக்கப்பட்ட சூரிய ஒளி, பிடிவாதமாக, எந்தச்சிறிய அளவிலாவது டொப்ளர் விலக்கத்தை வெளிப்படுத்த மறுத்துவிட்டது. எனவே வெள்ளி தன்னைத்தானே சுழல்வதாக இருந்தால், அந்தச் சுழற்சி மிக மெதுவாக, ஆமைவேகத்தில் நடைபெறுகிறது என்று ஊகித்தார்கள். மிகச் சமீப காலம் வரை, வெள்ளியைப் பற்றி மிகச் சாதாரணமாக எல்லோராலும் ஏற்கப்பட்டு வந்த ஒரு பொது அபிப்பிராயம் என்ன வென்றால் அது எப்போதும் – ஒரே பக்கத்தைச் சூரியனுக்குக் காட்டிய வண்ணம் இருக்கிறது என்பதாகும். சந்திரன் எப்போதும் தனது ஒரே பக்கத்தையே பூமிக்குக் காட்டியவாறு சுழன்று வருவது போல.

வெள்ளியின் சுய சுழற்சிபற்றிய ஆக்க பூர்வமான தகவல்—1960 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தான் பெறப்பட்டது. ராடார் என்ற நவீனமுறை இரண்டாவது உலகயுத்தத்துக்குப்பின் அபிவிருத்தி அடைந்து வந்த காரணத்தினால், "ராடார் வானியல்" என்பதோர் புதிய பிரிவு அத்துறையில் ஆரம்பித்தது. மைக்ரோ அலைக்கதிர்களை வெள்ளியை நோக்கிச் செலுத்தினால், அவை வெள்ளியில் பட்டு, அங்கிருந்து எதிரொலி பூமியை நோக்கித் திரும்பும் அப்படித் திரும்பும் எதிரொலியிற் பெரும்பகுதி – வெள்ளியின் மையப் பிரதேசத்தில் உள்ள சிறிய பிரதேசத்தில் இருந்தே பிரதிபலிக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் பூமியில் இருந்து அனுப்பப்படும் ராடார் மைக்ரோ அலைகள், செங்குத்தாகவே படுகின்றன. பலவீனமான எதிரொலிகள் வெள்ளியின் விளிம்புகளில் இருந்து பிரதிபலிக்கப்படும். இவற்றின் அலை நீளங்களை வெகுநுட்பமாகக் கணித்து அறிந்து கொள்வது சாத்தியம். இப்படிக் கணிக்கப்பட்ட முடிவுகளின் படி, டொப்ளர் விலக்கம் மிகக் குறைந்த அளவில் இருந்தாலும் – அது மிகத் தெளிவாக - எவ்விதமான ஐயத்துக்கும் இடமின்றி -அவதானிக்கக் கூடியதாக இருந்தது. வெள்ளியின் விளிம்புகள் ஒரே நிலையாக இருக்காது அவை அசைகின்றன—நகர்கின்றன - என்றும், காலத்துக்குக் காலம் வெவ்வேறு பிரதேசங்கள் விளிம்புகளாக விளங்குகின்றன என்றும் உறுதிப்படுததுவதற்கு இந்த ராடார் டொப்ளர் விலக்கம் சிறந்த அத்தாட்சியாக விளங்குகிறது. பலவருடங்களாக இருந்துவந்த சந்தேகம் நீங்கியது, வெள்ளி சுழல்கிறது !

சந்திரனைப் போல, ஒரே பக்கத்தையே காட்டியபடி அது சூரியனைச் சுற்றி வரவில்லை. பூமியைப் போல - மற்றைய கிரகங்களைப்போல வெள்ளியும் தன்னைத்தானே சுற்றுகிறது. பூமி தனது அச்சில் தன்னைத்தானே சுற்ற 24 மணி ஆகிறது. வெள்ளியோ - ஒருதடவை தன்னைத்தானே சுற்ற 243 நாட்கள் ஆகின்றன

### உடுவில் வியன் நமசிவாயம்

□

## மொழியியல்

சென்ற வாரத்தொடர்ச்சி ..,...

முத்தமிழ்ச் சிறப்புக் கொண்டது தமிழ்மொழி. இயலிசை நாடகம் இவை வரை தமிழுக்குரிய தனிச் சிறப்பாகின்றது. தமிழர் கைக் கொள்ளும் உணவு, உடை, ஒழுக்கம் என்பனவும் தமிழினத்தின் பண்பாட்டு நிகழ்வினைப் பறைசாற்றுந் தன்மையன.

'அறுசுவையுண்டி அமர்ந்
தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண்டாகும்'

என்று கூறுகிறது நாலடியார். உண்ணும் முறையில் பலரோடுண்ணல், சுவையோடுண்டல் என்னும் விழுமிய நாகரிகத்தினைப் பேணினர்.

''விருந்து புறந்தருதலும்
சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன்
மாண்புகள்''

என்று தொல்காப்பியம் கூறுகின்றது. ''இசை – தமிழ்ச் சொல்; ராகம் – வடசொல். ராகம் என்றால்தான் பெரும்பாலான மக்களுக்குத் தெரிகிறது. ஆதலால் ராகம் என்று சொல்லித்தான் இசைபற்றி விளக்க வேண்டிய வெட்கக் கேடான நிலை தமிழர் [illegible]

ஒலிக்க உலகில் எம்மொழியிலும் எழுத்தில்லை என்றும் கூறுகின்றார் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்.

தமிழ் என்பதற்கு அழகு, இனிமை என்றும் பொருளுண்டு. தமிழுக்கு இனம் வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன. த-வல்லினம்; மி - மெல்லினம்; ழ்- இடையினம். இயல், இசை, நாடகமென மூன்று தமிழ் உண்டு. 'தமிழுக்கு அமுதென்றுபேர்' என்பர் பாரதிதாசனார். தமிழையே உயிராகக் கொள்பவர் பாரதிதாசனாராவர்.

தமிழ் எழுத, படிக்க, பேச மிகவும் எளிதானது. சீன, ஜப்பானிய மொழிகளின் எழுத்துக்கள் எப்போல் மேலிருந்து கீழ்நோக்கி எழுதுகின்ற அல்லது உருது மொழி எழுத்துக்களைப் பாலவலப்புறமிருந்து இடப்புறம் நோக்கி எழுதுகின்ற கடின முறை தமிழில் இல்லை. இடமிருந்து வலப்பக்கம் நோக்கி எளிதாக எழுதலாம். தமிழ் எழுத்துக்களை எழுதுகோலை எடுக்காமலேயே தொடர்ந்து எளிதாக எழுதிக்கொண்டு செல்லலாம். தமிழில் ஒரு எழுத்துக்கு ஒரே ஒலிதானுண்டு. எளிதாகப் படித்துக்கொள்ளலாம்; பேசுதற்கு எளியது. மேலுதடு, கீழு

ஆசிரியர் சுந்தரம்பிள்ளை. இன்றைய மொழியியலாளர்கள்இக்கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர். இதுஉணர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கூற்று என்பர். ஒவ்வொருவனுக்கும் அவனவன மொழிதான் உயர்ந்ததென்ற கருத்தை வைத்துக்கொண்டு ஆய்வுக் கருத்துக் கூறக்கூடாதென்பர் இன்னுஞ்சிலர்; சுந்தரம்பிள்ளையின் கூற்றை நிராகரிப்போர். ஆரியத்தின் செல்வாக்கினை எடுத்துக்கூறி அம்மொழி தமிழையும் அடி

'ட' வுக்கு 'ண' இனவெழுத்து.
'த' வுக்கு 'ந' இனவெழுத்து.
'ப' வுக்கு 'ம' இனவெழுத்து.
'ற' வுக்கு 'ன' இனவெழுத்து.

'ந' கரத்தைத் தந்நகரம் எனவும் 'ண' கரத்தை டண்ணகரம் எனவும் 'ன' கரத்தை றன்னகரம் எனவும் இலக்கணங் கூறுவர். ஓசையை

> 'Woman' என்ற ஒரு ஆங்கிலச் சொலலே பெண்ணைக் குறிக்கும் ஆனால் தமிழில் பேதை பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்றுண்டு அது போலவே ஆணுக்கும் வகைகளுண்டு.

மைகொள்ள நினைத்தது; ஆனால் தமிழ் பணிந்தியகுங்கிறது என்பர். 'ஆரியம் தெலுங்கை அடிமைப்படுத்தியது; மலையாளத்தை மணந்துகொண்டது; கன்னடத்தில் கைவைத்தது; துளுவத்தைச் சூழ்ந்துகொண்டது; செந்தமிழ் மருங்கிலும் செல்லத் தொடங்கியது என்பர்.

அறிந்ததும் அதனை எழுத்து வடிவில் கொணர்ந்து நெடுங்கணக்கிட்ட பெருமை தமிழர்க்கேயுரியது.

வழுநிலை, வழாநிலைகளைக் கொண்டமைந்த செம்மையானமொழி தமிழ். வழு ஏழுவகை. திணைவழு; பால் வழு மரபுவழு, செப்புவழு; [illegible]

பராமாயணமும் திருக்குறளும். முதலாவது நூல் வாழ்க்கையைப் பேசுவது: இரண்டாவது நூல் வாழ்வளம் பேசுவது; குறள் நீதிநூல், பொதுமறை மனுக்குலம் முழுவதற்கும் ஏற்புடமையாயமைவது, எக்காலத்தும், எவ்வினத்தாருக்கும், என் நாட்டார்க்கும் பொருந்துவது கம்பன் காவியம் இராமன் என்னும் நடையினின்றும் இராமனைப் பற்றிப்பேசுவது அதர்மத்தை அழித்துத் தர்மம் காப்பதே அதன் முடிவு அதாவது 'இராவணவதமே' இராமாயணக் கருப்பொருள் நட்பு, பாசம், காதல், சரணாகதி, காமம், அறம், வீராண்மை, போராண்மை பெண்மை அரக்கத்தனம். அறிவுடைமை, சாணக்யகிம் என்பன கம்ப இராமாயணத்திலுண்டு. சிலப்பதிகாரம் தமிழுக்குக்கிடைத்த முத்தமிழ் ஆரம். மரபுபேணும் இலக்கியமாகவும் புரட்சிக் காப்பியமாகவும் கொள்ளப்படுகிறது. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகிய தன்மை சுட்டப்படும் அரசியற் காப்பியம் சிலம்பு. சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்கள். கந்தபுராணம் தமிழுக்குக் கிடைத்த தெய்வத் தமிழ்ப்புராணம் திருமுறைகள்கொஞ்சுதமிழ்,விஞ்சு தமிழ்,கெஞ்சுதமிழ்என்றவகையில் நாயனமார் மூவராலும், மாணிக்கவாசகரால் திருவாசகம் திருக்கோவையாரும் அருளிச் செய்யப்பட்டுள்ளன.

ஆட்டிஹுகளாய் அழுகின்ற ஓநாய் போல
அன்றவர்கள் வடித்திட்ட நீலிக்கண்ணீர்
போட்டிமனப் பான்மையிலே வாய்மையற்று
பொழிகின்ற தென்பதனை அறிவார் எம்மார்
"ஆட்டிவைத்த படியெல்லாம் ஆடுதற்கு
அறிவற்ற குரங்குகளா தமிழர் கூட்டம்
காட்டிவைப்பம் காண்பீர்கள் திறனை" என்று
கருமத்தில் குதித்தார்கள் எம்மவர்கள்.

தாய்மொழிக்கு எடுக்கின்ற விழாவதனை
தமிழர்தம் நாட்டிற்றான் செய்ய வேண்டும்
ஏய்ப்புகளுக்கெடுபட்டு கொழும்பில் வைத்தால்
எமமவர்கள் எப்படித்தான் கலந்து கொள்வார்?
நாய்ப்புத்தி நமக்கில்லை எச்சில் உண்ண
நட்டமெது வந்தாலும் நல்விழாவை
சேய் தமிழர் செறிந்துள்ள யாழ் நகரில்
செய்திடுவோம்" என இறுதி முடிவெடுத்தார்.

தலை நகராம் கொழும்பினிலே விழாவெடுக்க
தமிழறிஞர் பூரணமாய் மறுத்தபோது
தலையாட்டிப் பொம்மைகளாய் சில தமிழர்
தரங்கெட்டு அரசுக்குத் தாளம் போட்டார்
கலைஞர்களும் கற்றறிந்த அறிஞர்தாமும்
கலந்துகொள்ள முடியாது தடைகள் செய்தார்
நிலைபெயராக் கொள்கையொடு தமிழர் கூடி
நிகரற்ற விழாவொன்றை நிகழ்த்தி வைத்தார்.

பார்க்கின்ற திசையெங்கும் விழாவின் கோலம்
பாட்டொலியும் கலை நிகழ்வும், காட்சிகளும்
ஊர்க்கொன்றாய் ஊர்திகளின் ஊர்வலங்கள்
உணர்வெல்லாம் தமிழான மக்கள் கூட்டம்
கார்சிந்தும் மழையன்ன கருத்து வெள்ளம்
கருத்தரங்கு ஆய்வுகளில் அறிஞர் பெய்ய
ஆர்க்கின்ற கடலுக்கு நிகராயன்றோ
அணிதிரண்ட தமிழ் மாந்தர் ஆர்ப்பரித்தார்.

இயல் இசையும் நாடகமும் இணைந்து ஒன்றாய்
இனிமைசெறி முக்கனியின் சாறுஆகி
வயலூடே பாய்புனலாய் ஓடிஊறி
வந்தவர்கள் நெஞ்செல்லாம் இனிக்கலாச்சு
புயல்வேகம் கொண்டிளைஞர் தேடிவந்த
புலவர்களை அறிஞர்களை கௌரவித்தார்
செயல் யாவும் கண்டார்கள் வந்தபேர்கள்
செப்பரிய ஓம்பலில்லை திணறிப் போனார்.

— தொடரும்

## வள்ளுவ வாக்கியம்

ஒதுக்கி விடு!
எதனை? எது உனக்குச் சிறுமை தருமோ அதனை ஒதுக்கி விடு. விரட்டி விடு!

இது சாதாரண மனிதனுக்குக் கடினம். ஏனெனில் மயக்கம் பலவடிவில் வரவல்லது. அது அச்சத்தின் வடிவில் வரும். ஆசையின் உருவில் வரும். அவசியத் தேவை என்ற நிலையிலும் வரும். பொருள்களும் சுகமும் பெரும் புகழும் போல இனிமை காட்டியும் வரும். இவ்விதம் மனிதனை வீழ்த்தும் வலைகள் பல!

ஆனால் —

எந்நிலையிலும் இழிவுக்கு இடம் தந்து வாழ்பவன் நீ அல்லன்! உனக்கென நீ வகுத்த நெறியுண்டு. தெளிவும் திடனும் உண்டு. இந்தத் திடனே உன்னைக் காக்கும் கவசம். மானம் உன் இன்னுயிர். உறுதி உனக்குண்டு. நிலைபெயர்தல் உனக்கில்லை. பலவீனம் உன்னை வீழ்த்தாது. அனுபவம் துணியாது!

இவற்றை நீ எப்போதோ ஒதுக்கியவன் - விரட்டியவன்! எனவேதான் தளர்விலாத் திட வாழ்வு வாழ்கிறாய். எண்ணத்தால் ஒரு மனிதன் கிறாய். (குறள் 961)

நாக. பத்மநாதன்

# தமிழ் மொழியின் தனிச்சிறப்புகள்

'அறுசுவையுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண்டாகும்'

என்று கூறுகிறது நாலடியார். உண்ணும் முறையில் பலரோடுண்ணல், சுவையோடுண்ணல் என்னும் விழுமிய நாகரிகத்தினைப் பேணினர்.

''விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்''

என்று தொல்காப்பியம் கூறுகிறது. ''இசை – தமிழ்ச் சொல்; ராகம் – வடசொல். ராகம் என்றால்தான் பெரும்பாலான மக்களுக்குத் தெரிகிறது. ஆதலால் ராகம் என்று சொல்லித்தான் இசைபற்றி விளக்க வேண்டிய வெட்கக் கேடான நிலை தமிழர்களுக்கு உண்டாகியிருக்கிறது'' என்கிறார் மறைமலையடிகள். இங்கு தமிழ்ச் சொல் எதுவென்று தெரியாத –புரியாத தமிழர்தம் பரிதாப நிலையினையே அடிகளார் சுட்டுகின்றார்.

''தமிழரிடம் ஓர் இயற்கைச் சக்தி இருக்கிறது. தமிழுக்கு அருள் துணையிருக்கின்ற வரையிலே தமிழை எவராலும் அழிக்கமுடியாது. தமிழ்த்தாய் நம்மைக் காக்கிறாள். தமிழ்த்தாய் பிறருக்கு மயங்காள்: நம்மைப் பாதுகாக்க முனைந்துநிற்பது தமிழ். தமிழ் இன்பவடிவாக, அன்புவடிவாக, அருள்வடிவாக இருப்பது'' என்கின்றார் மறைமலையடிகள். பாரதியும், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்குங் காணோம்'' என்று பாடியுள்ளார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை 'சீரிளமைத்திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே' என வாழ்த்துகிறார். 'பக்திக்குரிய மொழி தமிழ்' என்றார் பேராசிரியர் தனிநாயக அடிகளார். பிறிதொரு கவிஞன்,

''ஓடையிலே என்சாம்பல் ஓடும் போதும்
ஒண் தமிழே சலசலத்து ஓடவேண்டும்''

என்றும்,

''பாடையிலே என்னுடலம் போகும் போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்''

என்றும் அவாவுறுகின்றாரென்றால் அவரது தமிழ்ப் பித்து எவ்வளவு! என்று கணக்கிட இயலுமா? இச் சிறப்புக்களனைத்தும் 'தமிழ் மொழி' உணர்வு சம்பந்தப்பட்டவையே.

தமிழ் எழுத்துக்களை ஒலிப்பதில் தொண்டைக்குக் கீழே வேலையே இராது. 'ழ' என ... 'தமிழுக்கு அமுதென்றுபேர்' என்பர் பாரதிதாசனார். தமிழையே உயிராகக் கொள்பவர் பாரதிதாசனாராவர்.

தமிழ் எழுத, படிக்க, பேச மிகவும் எளிதானது. சீன, ஜப்பானிய மொழிகளின் எழுத்துக்களைப்போல் மேலிருந்து கீழ்நோக்கி எழுதுகின்ற அல்லது உருது மொழி எழுத்துக்களைப் பாலவலப்புறமிருந்து இடப்புறம் நோக்கி எழுதுகின்ற கடினமுறை தமிழில் இல்லை. இடமிருந்து வலப்பக்கம் நோக்கி எளிதாக எழுதலாம். தமிழ் எழுத்துக்களை எழுதுகோலை எடுக்காமலேயே தொடர்ந்து எளிதாக எழுதிக்கொண்டு செல்லலாம். தமிழில் ஒரு எழுத்துக்கு ஒரே ஒலிதானுண்டு. எளிதாகப் படித்துக்கொள்ளலாம்; பேசுதற்கு எளியது. மேலுதடு, கீழுதடு, மேற்பல், கீழ்ப்பல், நுனிநாக்கு, அடிநாக்கு, நடுநாக்கு, அண்ணாக்கு, உண்ணாக்குக் கொண்டே ஒலிப்பதாக இருக்கும். தொண்டைக்குக் கீழே வேலையிராது. வடமொழிச் சொற்கள் பெரும்பான்மையாக அடிவயிற்றின் துணையின்றி ஒலிக்க முடியாதவை. வலிந்து ஒலிப்பதால் நாவும் உலர்ந்து தொண்டையும் வரண்டுவிடும். தமிழைப்பேசுவதற்குக் கஷ்டப்படத் தேவையில்லை.

சுழியிடுதல் பிறமொழியெழுத்துக்களில் இல்லை. ஓலையில் எழுதியதால் சுழி அவசியம். கீறினால் ஓலை கிழிந்துவிடும். பச்சையாக இருந்தால் சிக்கும். ஆங்கில எழுத்துக்ளை எழுத நெருப்புக் குச்சிகளே போதும் (Ex: AVNZMN)

'Woman' என்ற ஒரு ஆங்கிலச் சொல்லே பெண்ணைக் குறிக்கும். ஆனால் தமிழில் பேதை, பெதும்பை, மங்கை' மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்றுண்டு. அதுபோலவே ஆணுக்கும் வகைகளுண்டு.

தமிழை 'ஆதிமொழி' என்றும், 'அனாதிமொழி' என்றும் அழைப்பர்.

'சதுமறை ஆரியர் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழி நீ அனாதியென மொழிகுவதும் வியப்பாமோ!,

என்பார் மனோன்மணிய ... அம்மொழி தமிழையும் அடிமைகொள்ள நினைத்தது; ஆனால் தமிழ் வித்தியகுங்கிறது என்பர். 'ஆரியம் தெலுங்கை அடிமைப்படுத்தியது; மலையாளத்தை மணந்துகொண்டது; கன்னடத்தில் கைவைத்தது; துளுவத்தைச் சூழ்ந்துகொண்டது; செந்தமிழ் மருங்கிலும் செல்லத் தொடங்கியது என்பர்.

'Woman' என்ற ஒரு ஆங்கிலச் சொலலே பெண்ணைக் குறிக்கும் ஆனால் தமிழில் பேதை பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்றுண்டு அது போலவே ஆணுக்கும் வகைகளுண்டு.

... ஓசையை அறிந்ததும் அதனை எழுத்து வடிவில் கொணர்ந்து நெடுங் கணக்கிட்ட பெருமை தமிழர்க்கேயுரியது.

வழுநிலை, வழாநிலைகளைக் கொண்டமைந்த செம்மையானமொழி தமிழ். வழு ஏழுவகை. திணைவழு; பால்வழு மரபுவழு, செப்புவழு; வினாவழு; இடவழு: காலவழு என்பன. இவ்வழுக்கள் நேர்ந்தால் பொருள் மயக்கமேற்படும். உதாரணமாக அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன என்று கூறினால் பால்வழு இல்லை. ஆனால் அவன் வந்தான், அவன் வந்தது, யான் வந்தான் எனக் கூறினால் அவை வழுவாம். நேற்று வந்தான். நாளை வருவான் எனக் கூறினால் அவை வழுவாம். நேற்று வந்தான் நாளை வருவான். எனக் கூறினால் அவை செம்மையான வாக்கியங்கள் ஆனால் நேற்று வருவான் நாளைக்கு வருவான் என்றால் அது காலவழுவாகும்.

தமிழ்மொழி இலக்கணத்தை இலட்சணமாகவுடையது. இலக்கணம் மொழியின் சட்டம், வரம்பு, ஒழுங்கு, அமைப்பு, அமைதி, அழகு என விரியும். அகத்தியம் வடநூல் முறைமைக்கு ஒப்பத் தமிழிலே செய்யப்பட்டது. 'ர' கர 'ல' கர 'ய' கரங்கள் வடமொழிக்கன்றித் தமிழ்மொழிக்கண் மொழிக்கு முதல்வரா. 'ரகரம்' அ, இ, உ என்னும் மூன்று குறில்களையும் 'ல' கரம் இ, உ என்னும் இரண்டு குறில்களையும் 'ய' கரம் 'இ' என்னும் குறிலையும் முதலெழுத்துக்களாகப் பெற்றுவரும்.

எழுத்துக்களின் பிறப்பினால் தமிழ் மொழியின் சிறப்பு நோக்குதற்குரியது. 'மீகீழிதழுறபம்மப்பிறக்கும்' என்பது சூத்திரவிதி. மேலுதடும் கீழுதடும் சேரின் 'ப'வும் 'ம'வும் பிறக்கும் என்றார் உயிரொலிகள் பிறக்கும்போது நாவினுடைய முயற்சி

**கனகசபாபதி நாகேஸ்வரன் M.A.(Jaffna)**

தமிழில் 'பெயர்மரபு' (இளமைப் பெயர்கள்) இன்றும் மாற்றத்திற்குள்ளானதில்லை. பனையின் இளையது வடலி. கோழிக்குஞ்சு; பசுக்கன்று; கீரிப்பிள்ளை, பாம்புக்குட்டி, ஆண்யானை 'களிறு' என்றும் பெண்யானை 'பிடி' என்றும் குறிக்கப்படும். பசுமாடு, எருதுமாடு என்பது இனத்தையும் விலங்கின் பெயரையும் குறிப்பிடும் மரபிலமைந்தவை.

ஒரு எழுத்துக்கு மற்றோரெழுத்து இனம் என்பதனைத் தமிழில் தான் காணமுடியும்.

'ங்' வந்தபிறகு அதன் இனமாகிய 'க' தான் வரும்.

'ச' வுக்கு 'ஞ' இனவெழுத்து.

தேவைப்படுகிறது. 'நா' முன்னுக்குச் செல்லுதல், பின்னுக்குப் போதல், மேல் எழுதல், நடுவில் நிற்றல், கீழே நிற்றல் ஆகிய முயற்சிகள் உயிரொலிகள் பிறக்க உதவுகின்றன. சில ஒலிகளுக்கு எமது வாயிதழ்கள் குவிதல் வேண்டப்படுகின்றது. வாயினாலே காற்று வெளியேறும் போது நாவின் நுனிப்பகுதி மேலண்ணத்தில் தொட்டுத் தடையேற்படுத்த அக்காற்றுப் பிரிந்து நாக்கின் இருபக்கங்களாலும் வெளியேறும் போது 'ல்' 'ள்' ஒலிகள் பிறக்கின்றன இவை 'பிரிவளி ஒலி' எனப்படும்.

தமிழுக்கும், தமிழனுக்கும் 'கதி' யென விளங்குவன கம் ...

... கதி, காமம், அறம், வீராண்மை, பேராண்மை பெண்மை அரக்கத்தனம். அறிவுடமை, சாணக்யகிம் என்பன கம்ப இராமாயணத்திலுண்டு. சிலப்பதிகாரம் தமிழுக்குக்கிடைத்த முத்தமிழ் ஆரம். மரபுபேணும் இலக்கியமாகவும் புரட்சிக் காப்பியமாகவும் கொள்ளப்படுகிறது. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகிய தன்மை சுட்டப்படும் அரசியற் காப்பியம் சிலம்பு. சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்கள். கந்தபுராணம் தமிழுக்குக் கிடைத்த தெய்வத் தமிழ்ப்புராணம் திருமுறைகள்கொஞ்சுதமிழ்,விஞ்சு தமிழ்,கெஞ்சுதமிழ்என்றவகையில் நாயனயார் மூவராலும், மாணிக்கவாசகரால் திருவாசகம் திருக்கோவையாரும் அருளிச் செய்யப்பட்டுள்ளன. தமிழ்தெய்வத் தன்மையுடைய தென்பது நாயன்மார் செய்த பல்வேறு அற்புதங்களாலும் உணரப்படுகின்றது. □



கவிதை

## ஏழை

பெரு மூச்சாய்
விடியல்கள் ...
ஏழையாய்,
வயிற்றுக்காய்
ஏங்கும்
ஜீவன்களுக்கு......

காற்று.
குரல்வளைக்குள்
செல்ல
மறுக்கும் பட்டினிக்
கோலங்கள்......

வீதியோரத்தில்
உயிரற்ற ஜடமாய்
குழந்தைகள். ...

நவீன ஓவியமாய்
கிறுக்கல்களாய்
எலும்புகளின்
ரேகைகள்......

தினமும்
உண்ண முடியாப்
போராட்டங்கள்
ஏழைக்கு......

பெருமூச்சாய்
விடியல்கள்......

– சரவணமுத்து ஜெயா




## சிறுவர் பகுதி

### அன்பான சிறுவர் சிறுமியரே

ஓய்வு நேரங்களை நீங்கள் பயனுள்ள முறையில் பயன் படுத்த வேண்டும்
'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா' என்று பாரதியார் உங்களுக்காகவே பாடிவைத்திருக்கிறார்
நல்ல நூல்களை தேடிஎடுத்து படித்தல் உபயோகமான ஒரு பொழுது போக்கே.
அதற்காக வாராவாரம் உங்களுக்கான நூல் ஒன்றினைப் பற்றிய குறிப்பினை வெளியிடவுள்ளோம்
தேடி எடுத்துப் படியுங்களேன்.....

- அன்புடன்
தமிழண்ணா

## தேடி எடுத்துப் படியுங்கள்....



### புதையல் தீவு (Treasure Isand)

ரோபட் லூயி ஸ்ரீவின்சன் என்ற ஆங்கிலேயரால் 1883 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. ஒரு கடற் கொள்ளைக்காரன் தான் கொள்ளையடித்த பொருட்களை ஒரு அனாதரவான தீவில் புதைத்து வைக்கிறான். தான் புதைத்த தீவின் படத்தையும் வரைந்து வைக்கிறான். எதிர்பாராத விதமாக அவனைக் சிலர் கொன்றுவிட்டு அப்படத்தை கைப்பற்றுகின்றனர். இப்படத்தை கைப்பற்றியவர்களிடமிருந்து படம் வேறொரு சிறுவன் கையில் அகப்படுகின்றது. அச்சிறுவன் பலருடன் சேர்ந்து அத்தீவை நோக்கி கப்பலில் செல்கிறான். அவர்களுடன் பழைய கொள்ளைக்கார

## நிழல்களில் உருவங்கள்



## விந்தைச்செய்திகள்

**1760** ஆம் ஆண்டில் சீனாவில் 'யூவேன் ரொங்' என்ற புத்த பிக்கு இருந்தார். புத்தபகவான் மீது அதிக பற்றுடையவர். அவரைப்போல அடிக்கடி யோக நிஷ்டையில் இருப்பார். தனது இருபதாவது வயதில் யோகநிஷ்டையில் இருந்தவர் 62 வயதுவரை அசையவேயில்லை. இவர் இறந்த பின்பும் இதே யோகநிலையில் இருக்கையில் ஒரு கண்ணாடிப்பெட்டியில் பாது காத்து வைக்கப்பட்டார்.

O நியூசிலாந்தில் வாழும் கீவி எனும் இறக்கையில்லாப் பறவை இடும்முட்டை அதன் உருவத்தில் கால் பங்கு ஆகும்.

O ஸ்வோட் பில் என்ற பாடும் பறவையினது சொண்டு அதன் நீளத்தைவிட நீளமானதாகும்.

O இத்தாலி தேசத்திற் கண்மையான இச்சியா தீவுகளை அண்டிய கடற்பகுதி மிகுந்த வெப்பம் கொண்டதாம். தேவையானால் முட்டையும் அவித்துச் சாப்பிடலாம். அத்தகைய வெப்பம் கொண்டது அக்கடற் பகுதி. இதற்குச் காரணம் என்ன தெரியுமா? இக் கடற்பகுதியில் கனன்று கொண்டிருக்கும் எரிமலை தான் இதற்குக்காரணம்.

## அண்ட வெளியில் ஒரு புதிய தாரகையாக நீந்தும்

# வொயேஜரின் விந்தைமிகு விண்பயணம்

**1989** ஆகஸ்டில் நெப்ரியூன் கிரகத்தை அண்மித்த, மனிதனற்ற விண்கலம் வொஜேஜர் - 2, அதிசயமான நிழற்படங்களையும் தரவுகளையும் 2.8 மில்லியன் மைல்கள் தொலைவிலிருந்து கலிபோனியாவிலுள்ள ஜெற் ஏவும் ஆய்வு மேடையில் ஆவலுடன் காத்திருக்கும் விண்வெளி விஞ்ஞானிகளுக்கு அனுப்பி வைத்தது; வொயேஜர் பயணத்தின் பிரதான நோக்கம் நிறைவு பெற்றது.

பன்னிரண்டு ஆண்டுகளாக வொயேஜர் - 2 சூரியத் தொகுதியில் நுழைந்து ஜூபிட்டர், சற்றேண், யுரேணஸ், நெப்ரியூன் கோள்களின் நிழற்படங்களையும் பதினைந்து மில்லியன் விஞ்ஞானத் தரவுகளையும் அனுப்பிக் கொண்டிருந்தது.

வொயேஜர் - 2 இதுவரை விண்வெளிக்கு அனுப்பப்பட்ட கலங்களில் அதிகம் வெற்றி பெற்ற ஆய்வுச் செய்மதி என நிரூபிக்கப் பட்டுள்ளது.

1819 இறாத்தல் எடையுள்ள இச் செய்மதி 1977 ஆகஸ்ட் இருபதாம்தேதியன்று கேப் கனவரால் தளத்திலிருந்து செலுத்தப்பட்டு வரலாற்றில் இடம் கொள்ள வைத்தபோது இதுவும் ஏமாற்றிவிடுமோவெனப்பயப் படும் படியாக சிறு குறைகள் தென்பட்டன. கொம்பியூட்டர் மூன்று வீதம் ஞாபகசக்தியை இழநதது. எப்படியோ வொயேஜர், வெற்றி கரமாக நெப்ரியூனைச் சென்றடைந்தது வின் இதுவரை முயற்சிக்காத மிகச் சிக்கலான சில பொறியியல் முறைகள் தேவைப்பட்டன.

நாலு கண்டங்களால், அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான முப்பத்தெட்டு அன்ரனாக்கள் மூலம் வொயேஜர் – 2 செய்திகளைச் குசுகுசுத்தபடி சுற்றியது.



நெப்ரியூன் வெப்பம் புயலும் 15000 மைல் வேகத்தில் அடிக்கும் சுழல் காற்றும் உள்ள கிரகம்.

சூரியத் தொகுதியில் உள்ள தாய்க் கிரகங்கள் செல்லும் பாதையில் செல்லாது எதிர்ப் பக்கம் சுழலும் ஒரே சந்திர




மோதல்களின் முக்கியத்துவம் பால் செலுத்துகின்றது. வொயேஜர் - 2." என்று பிரதம திட்ட விஞ்ஞானி எட்வேட் ஸ்ரோன் கூறுகிறார். விண்வெளியில் ஒவ்வொரு மோதலும் சந்திரவட்டத்தில் ஒரு வித்தியாசமான வளையத்தை உருவாக்கும் என்றும் அவர் சொன்னார்.

முதற்கட்டப் பயணம் இப்போது பூர்த்தியாகிவிட்டது.

வொயேஜர் -2 இன் கமெராக்கள், கருவிகள், மானிகள் இவ்வாண்டின் இறுதியில் மூடப்படும்.

2020 ஆம் ஆண்டில் வொயேஜ்ஜர் - 2 அமைதியடையலாம். அதன் ஜெனரேற்றர்கள் சக்தி குறைந்து தொடர்பு வேகம் குறையலாம்.

40,176 ஆம் ஆண்டில் அது றோஸ் தாரகை (Star Ross ) 248 இன் 1.7 ஒளி ஆண்டுகளுக்குள் இறங்கும். ஒரு குளிர்ந்த செம்புள்ளியாக கண்சிமிட்டும்.

296036 ஆம் ஆண்டில் வொயேஜர் - 2 சிரீயஸ் (Sirius) இன் 4.3 ஒளி ஆண்டுகளில் இறங்கும்.

### வேரற்கேணியன்

வாய்ப்புக்கள் அரிது. ஆனால் அமைதியாக, அலைந்து திரியும் ஒரு சிறு தாரகையை கண்டு கொள்ளும் வாய்ப்பு எந்த கிரகத்திலாவது வாழும் ஒருவருக்கு கிடைக்கலாம். அப்படியாரும் வொயேஜர் -2 டினை கண்டு கொண்டால் அதன் ஒரு பக்கத்தில் அணையப்பட்டிருக்கும் தங்கமுலாம் பூசிய செப்புச் சிமிழையும் இலட்சணையையும் பார்ப்பர். அதனை எப்படி இயக்குவதெனக் கண்டு



## புதையல் தீவு (Treasure Isand)

ரோபட் லூயி ஸ்ரீவின்சன் என்ற ஆங்கிலேயரால் 1883 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. ஒரு கடற் கொள்ளைக்காரன் தான் கொள்ளையடித்த பொருட்களை ஒரு அனாதரவான தீவில் புதைத்து வைக்கிறான். தான் புதைத்த தீவின் படத்தையும் வரைந்து வைக்கிறான். எதிர்பாராத விதமாக அவனைக் சிலர் கொன்றுவிட்டு அப்படத்தை கைப்பற்றுகின்றனர். இப்படத்தை கைப்பற்றியவர்களிடமிருந்து படம் வேறொரு சிறுவன் கையில் அகப்படுகின்றது. அச்சிறுவன் பலருடன் சேர்ந்து அத்தீவை நோக்கி கப்பலில் செல்கிறான். அவர்களுடன் பழைய கொள்ளைக்காரனின் நண்பர்கள் அச்சிறுவனின் கூட்டத்தாருடன் நண்பர் போல் கொண்டாடுகின்றனர். எதிர்பாராத விதமாக அவர்கள் சூழ்ச்சியை அறிந்து அவர்களை எதிர்க்கின்றனர் சிறுவன் கூட்டத்தினர். பின்னர் கொள்ளைக்காரருடன் சண்டையிட்டு புதையலை எடுத்துத் திரும்புகின்றனர்.

மிகுந்த சுவையுடன் பல தடவைகள் படித்தாலும் மனதை விட்டு அகலாத வகையில் ரசனையாக எழுதியுள்ளார் ஸ்ரீவின்சன்

இக்கதை 1949 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவன் என்பவரால் இளஞ்சிறார் என்ற சிறுவர் இதழில் தொடராகத் தழுவி 'மணிபல்லவம்' என்ற பெயரில் எழுதப்பட்டது. பின்னர் 'சுதர்சன் வெளியீட்டாளரால்' நூலாக்கப்பட்டது.

இங்கே காணப்படும் ஆறுசெய்மதிகள் இரண்டிரண்டாக **இணைக்கப்பட்டுள்ளன. எது எதனுடன் இணைந்துள்ளன என கண்டறியுங்கள்.**



பற்றுடையவர். அவரைப்போல அடிக்கடி யோகநிஷ்டையில் இருப்பார். தனது இருபதாவது வயதில் யோகநிஷ்டையில் இருந்தவர் 62 வயதுவரை அசையவேயில்லை. இவர் இறந்த பின்பும் இதே யோகநிலையில் இருக்கையில் ஒரு கண்ணாடிப்பெட்டியில் பாதுகாத்து வைக்கப்பட்டார்.

O நியூசிலாந்தில் வாழும் கீவி எனும் இறக்கையில்லாப் பறவை இடும்முட்டை அதன் உருவத்தில் கால் பங்கு ஆகும்.

O ஸ்வோட் பில் என்ற பாடும் பறவையினது சொண்டு அதன் நீளத்தைவிட நீளமானதாகும்.

O இத்தாலி தேசத்திற் கண்மையான இச்சியா தீவுகளை அண்டிய கடற்பகுதி மிகுந்த வெப்பம் கொண்டதாம். தேவையானால் முட்டையும் அவித்துச் சாப்பிடலாம். அத்தகைய வெப்பம் கொண்டது அக்கடற்பகுதி. இதற்குச் காரணம் என்ன தெரியுமா? இக்கடற்பகுதியில் கனன்று கொண்டிருக்கும் எரிமலை தான் இதற்குக்காரணம்.

O 'ஜோசி சில்வா' என்ற மனிதர் பொலிவியா என்ற தேசத்தில் வாழ்ந்தவர். இவர் ஒரு கூர்மையான அம்பை தனது தலையில் குத்தி எடுப்பாராம். ஆனால் தலைபத்திரமாக இருக்கும். இதன் மர்மம் என்ன? இன்றும் புலனாகவில்லை.

O சாதாரண இலையானின் இறக்கைகள் நிமிடத்திற்கு 198000 தடவைகள் அடித்துக் கொள்ளுமாம்.

O நம் உடல் இரத்தம் இருக்கின்றதல்லவா. இது நீரிலும் பார்க்க ஆறுமடங்கு தடிப்புடையது.

**-ரிப்ளியின் நம்பினால் நம்புங்கள்**

## குட்டிக்கதை

# விருந்து....

இந்தியாவிலேயே ''தெனாலிராமன்'' என்பவன் பண்டைக் காலத்திலே நகைச்சுவை ததும்ப அரசவைகளிலே பேசக் கூடியவனாக இருந்தான. இவனைப் போல் அராபியாவிலே நசுருதீன், முல்லா, ஹோட்ஜா என்பவர்களும் இலங்கையிலே அந்திரே என்பவனும் அக்கால விகடகவிகளாக இருந்தார்கள். இவர்தம் விகடங்கள் கதைகளாக வந்தன. இவர்களைப்போல் சீனாவில் 'அவாந்தி' என்பவன இருந்தான்.

அவனைப்பற்றிய கதை ஒன்றையே இங்கு நீங்கள் படிக்கப் போகின்றீர்கள்.

அன்று ஒரு விருந்து. பெரிய பணக்காரர் ஒருவர் நடத்திய விருந்து. அதில் அவாந்தியும் கலந்துகொண்டான். விருந்தில் முலாம் பழத் துண்டுகள் (வத்தகைப்பழம்) படைக்கப்பட்டது. அனைவரும் பழத் துண்டுகளை கபளீகரம் செய்ய ஆரம்பித்தனர். ஒருவன் தான் சாப்பிட்ட துண்டுகளின் தோல்களை அவந்தியின் தட்டில் போட்டவாறு சாப்பிட்டான்.

பழத்துண்டுகள் முடிந்ததும் 'அட அவந்தி பெரும் சாப்பாட்டுராமன் போலருப்பான் போலிருக்கிறது எவ்வளவு துண்டுகளைச் சாப்பிட்டுவிட்டு தோல்களை குவித்திருக்கிறான்' என்று கேலியாகப் பேசினான். விருந்தில் ஒரு சிரிப்போசை. சிரிப்போசை அடங்கியதும்.அவாந்தி 'நானாவது சாப்பிட்டுவிட்டுமீதிதோலை வைத்திருக்கிறேன். ஆனால் அவரைப் பாருங்கள் தோலைக் கூடவிடாதுதின்றுவிட்டான். அவர் என்னை விடப் பெரிய சாப்பாட்டுராமன் போலிருக்கிறதே' என பதிலடி தர' முன்னயதைவிட பெரிய சிரிப்பலை விருந்தில் உலவியது.

தி. தபா

யேஜர், வெற்றி கரமாக நெப்ரியூனைச் சென்றடைந்தது




நெப்ரியூன் கோளின் 3000 மைலகள் அண்மையில் 61148 மைல் வேகத்தில் சுற்றிக் கொண்டிருநத வொயேஜர் -2 ற்கு நாசா (NASA) '' எங்கள் கவனத்தை

பாதையில் செல்லாது எதிர்ப் பக்கம் சுழலும் ஒரே சந்திர கிரகம் என விண்வெளி விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது நெப்ரியூன்.

கண்சிமிட்டும்.

296036 ஆம் ஆண்டில் வொயேஜர் - 2 சிரீயஸ் (Sirius) இன் 4.3 ஒளி ஆண்டுகளில் இறங்கும்.

## வேரற்கேணியன்

வாய்ப்புக்கள் அரிது. ஆனால் அமைதியாக, அலைந்து திரியும் ஒரு சிறு தாரகையை கண்டு கொள்ளும் வாய்ப்பு எந்த கிரகத்திலாவது வாழும் ஒருவருக்கு கிடைக்கலாம். அப்படியாரும் வொயேஜர் -2 டினை கண்டு கொண்டால் அதன ஒரு பக்கத்தில் அணயப்பட்டிருக்கும் தங்கமுலாம் பூசிய செப்புச் சிமிழையும் இலட்சனையையும் பார்ப்பர். அதனை எப்படி இயக்குவதெனக் கண்டு பிடித்துவிட்டால், பூவுலகின் அறுபது மொழிகளில் வாழ்த் தொலிகளையும் கிரகத்தின் இயல்பான சத்தங்களையும் கைதட்டல்களையும் தவளைகள் சத்தமிடுவதையும் புதிதாகப் பிறந்த குழந்தை ஒன்றின் அழுகைக் குரலையும் கேட்பர்.

விண்கலம் எவரையும் எதிர் கொள்ளாவிட்டால் 'பால் வெளியில்' அது தொடர்ந்து நீந்திக்கொண்டிருக்கும். □

**நன்றி: றீடேர்ஸ் டைஜெஸ்ற் மார்ச் 90**



இலங்கையில் போர்த்துக் கேயர், ஒல்லாந்தர், பிரிட்டிஷார் சமீபத்தில் இரண்டு ஆண்டுகள் இந்தியர் (வடக்கிலும் கிழக்கிலும்) ஆட்சி நடாத்தினர்.

போர்த்துக்கேயர் ஆட்சி நடாத்தியமையால் மேசை, லாட்சி, போத்தில்,ஜன்னல் என்ற பொருட்களின் பெயர்களும் எம்மொழியில் கலந்தன.

ஒல்லாந்தர்ஆட்சியில்உலாந்தா' கக்கூசு என்ற பொருட்களும் தமிழ் மொழியில் கலந்தன.

பிரிட்டிஷார் இங்கு ஆட்சி நடாத்தியதால் ஆங்கிலம் எஞ்சியது. அத்துடன் பாடசாலைகள், ரயில்வேக்கள், ரோட்டுக்கள், ஐரோப்பிய உடைகள் என்பன இலங்கையிற் எச்சங்களாக மிஞ்சின.

சீனர்கள் இலங்கையில் ஆட்சி நடாத்தவில்லை. ஆனால் நல்லெண்ண அடிப்படையில் அவர்களால் கட்டப்பட்ட பண்டார நாயக்கா சர்வதேச மண்டபம் அவர்கட்கு ஒரு புகழ் எச்சமாக மிஞ்சியது.

இந்தியர்கள் எமது அயல்நாட்டினர் அவர்கள் அமைதிப்படையாக வந்து எம்மை இரண்டு ஆண்டுகள் ஆண்டும் ஆட்டியும் விட்டனர்; தாமும் ஆட்டம் கண்டனர்.

அவர்களின் எச்சங்கள் எவை? ஹிந்தி மொழிச் சொற்கள் எம் மொழியில் கலக்க முடியவில்லை. ஆனால் அரிசி மூடை என்று சொல்லி விளக்கம் அளித்த தமிழர்கள் சிலருக்கு ஆனையிறவுக்கு அருகாமையில் அடி விழுத்தது' ''றைஸ்'' என்ற தூய தமிழ் இருக்கக் கொடுந்தமிழ் பாவித்தமைக்கே இந்த அடி விழுந்தது.

இந்திய அமைதி காக்கும் படை நல்ல படைவீரர்களாக இருக்கவில்லை. அதனால் அவர்கட்குப் பெயரெச்சம் இல்லை. வினைமுற்றியதால் வினையெச்சத்தையும் அவர்களிடம் காணமுடியவில்லை விமானப் பொதிச் சாக்குகள், அலுமினியப் பாத்திரங்கள், பதுங்கு குழியில் மிஞ்சிய மண்டையோடுகள், அடித்துக்கொல்லப்பட்ட அப்பாவிகளின் எலும்புத் துண்டுகள் தவறவிட்ட கூர்க்காக் கத்திகள் மண்ணில் தூவிய நோய்கள் என்பனவே எமது மண்ணில் இவர்கள் விட்டுச் சென்ற எச்சங்கள்-

ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு புலிக்கொடி ஏந்தி ஆட்சி நடத்திய சோழர்கள் பொலன்னறுவையில் சிவன்கோவிலைக் கட்டிப் புகழ் எச்சம் காட்டினர். ஆனால் அமைதிப்படையினர் அசோகக் கொடியினால அராஜகம் செய்ததே எச்ச சொச்சமாக இருந்த மிச்சம்.

□

# சிறைப்பட்ட சிந்தனைகள்



05 - 04 - 1989

இன்று காலை வெளியே போகும்போது மூன்று (வரிப்) பட்டி தரத்தில் உள்ள ஆமி ஒருவர் எங்கள் புளொக்குக்கு அண்மையில் போய்க்கொண்டிருந்தான். அப்போது நமது பையன்கள் ''இவன்தான் சுகுமார், நமது பையன்களை அடித்துச் சித்திரவதை செய்வதில் ஒரு தனியான சுகத்தை அனுபவிப்பவன். இந்த முகாமுக்கு இவன் வரும்போது ஒரு பட்டியுடன் வந்தான். இப்போது இவன் ''மூன்றுபட்டி'' என்றனர். அதே நேரம் நாலாவது அறையிலிருந்த பையன் ஒருவன் வெளியில் வந்தான். அவனது முதுகு முழுவதும் வரிவரியாக அடிகாயங்கள் காணப்பட்டன. அந்தக் காயங்கள் புதியதாக இருந்ததால் ''தம்பி! நீங்கள் எப்போது பிடிபட்டீர்கள்?'' என்று கேட்டேன். ''ஒரு வருடம்'' என்று பதில் வந்தது. 'இந்தக் காயங்கள்?' என்று வினாவினேன். இது ஒரு கிழமைக்கு முதல் அடி வாங்கியதால் வந்தவை'' என்று அந்தப் பையன் சொன்னான். ''ஒரு வருடத்தின் பின் கூட விசாரணையென்று அடிக்கிறார்களா?'' என்று என்று கேட்டேன். ''ஒன்றும் விசாரிக்கவில்லை. எங்கள் வீட்டிற்குக் கிட்ட இருக்கும் E.P. த் தோழர் ரமேஸ் எனக்கு அடி விழுவதைப் பார்க்க ஆசைப்பட்டார். அதற்காக அவர் முன்னிலையில் திரும்பவும் எனக்கு அடித்து அவரைத் திருப்திப்படுத்தினார்கள்'' என்று அந்தப் பையன் சொன்னான். ''ஏதாவது சொன்னார்களா?'' என்று கேட்டேன். ''ஆம், எனது பதவிக்கு ஏதாவது பிரச்சினை வருமானால் உன்னைக் கொல்லவும் தயங்கமாட்டேன் என்று சுகுமார் சொன்னான்'' என்று அந்தப் பையன் சொன்னான்.

தூரத்தே சென்று கொண்டிருந்த சுகுமாரின் பட்டி தெரிந்தது. இந்தப் பையனின் முதுகுப் புண்ணாய்த் தெரிந்தது. எமது பையன்களின் முதுகில் வேதனையுடன் ஏற்படும் வரிகள் இந்திய தமிழ் இராணுவத்தின் சீருடையில் பதவி உயர்வுக்கான பட்டிகளாக மாறுகின்றன. என்ற கசப்பான உண்மையை ஜீரணிக்க வேண்டியுள்ளது. இந்தப்பையனுக்கு சுகுமார் சொன்னதை நினைத்தேன். அதன் அர்த்தம் எனக்குப் பட்டி – உனக்குப் (சவப்) பெட்டி என்பதுதானே?

> *தூரத்தே சென்று கொண்டிருந்த சுகுமாரின் பட்டி தெரிந்தது. இந்தப் பையனின் முதுகும் புண்ணாய்த் தெரிந்தது. எமது பையன்களின் முதுகில் வேதனையுடன் ஏற்படும் வரிகள் இந்தியத் தமிழ் இராணுவத்தினரின் சீருடையில் பதவி உயர்வுக்கான பட்டிகளாய் மாறுகின்றன.*

இதைப்பற்றி இரவு பையன்களுடன் கதைத்துக்கொண்டிருந்தேன், ''தமிழர்களே இவ்வாறு நடந்து கொள்கின்றார்களே'' என்றேன். அப்போது ஒரு பையன் 'இது மட்டுமல்ல, எமது தமிழ்ப்பற்றையும் பற்றி புதுவிளக்கம் ஒன்றை இவர்கள் அளிக்கின்றார்கள்' என்றான். 'என்ன' என்று கேட்டேன். தன்னிடம் ஒரு ஆமி 'உங்களுக்கெல்லாம் தமிழ்ப்பற்று கொஞ்சமுமில்லை. இந்திக்காரனுக்கு சில பையன்கள் ஆயுதம் இருக்குமிடத்தைக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்குக் காட்டாமல் அந்த ஆயுதங்களின் இடத்தைத் தமிழர்களான எங்களுக்குக் காட்டினால் எங்களுக்குப் பதவியுயர்வு கிடைக்கும் தானே' என்று சொன்னதாகத் தெரிவித்தான். எங்கே போய் முட்டிக்கொள்வது என்று தெரியவில்லை. சமயம் கிடைக்கும் போதெல்லாம் இவர்கள் தாங்கள் தமிழர்கள் என்று சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் அடுத்த வினாடியே பழைய குருடி கதவைத் திறவடி என்பது போல மாறிவிடுகிறார்கள்' என்றான். ,என்ன விஷயம்' என்று கேட்டேன். ,முன்னர் விசாரணைகளுக்கு பொறுப்பாக இருந்த சர்மா தலைமையிலான ஆமி குறூப்பை ஒருமுறை செல்வராசா மாஸ்டர் தலைமையில் நமது பையன்கள் வழிமறித்துத் தாக்கினார்கள். சர்மாவோடு வந்த அனைவரும் முடிந்துவிட்டனர். சர்மா தனது பட்டியையும் கிழித்துவிட்டு தலைதெறிக்க ஓடினான். அன்று வந்த குறூப்பில் சர்மா மட்டுமே உயிர் தப்பினான். ஒரு வீட்டிற்குள் புகுந்து தான் தமிழனென்றும் தயவுசெய்துதன்னைக் காப்பாற்றும்படியும்கெஞ்சினான் தமிழன் என்றதும் மனமிரங்கிய அந்த வீட்டுக்காரர்கள் அவனைக் காப்பாற்றி அனுப்பினார்கள். இப்ப என்னடாவென்றால் செல்வராசா மாஸ்ரரிடம் பயிற்சி எடுத்த பையன்கள் என்று தெரிந்தால் ஆளை நொருக்குகிறான். தமிழன் என்று இவனைப் பாதுகாத்து அனுப்ப இவனே தமிழரை அழிப்பதில் முன்னுக்கு நிற்கிறான்' என்று சொன்னான்.

> *எனது பதவிக்கு ஏதாவது பிரச்சினை வருமானால் உன்னைக் கொல்லவும் தயங்கமாட்டேன்.*
>
> - சுகுமார்

தங்களைத் 'தமிழன்' என்று பெரிதாக இனங்காட்டும எந்த இந்தியன் ஆமியையும் நம்பக்கூடாது. பேச்சுவார்த்தைகளின் பொருட்டு இந்தியாவிலிருந்து இங்கே கொண்டு வந்தபோது கொல்லப்பட்ட ஜோனியின் விஷயமும் இப்படித்தான். வழக்கமாக எமக்கு 'மூளைச்சலவை' செய்யவரும் கேணல் வாசவனிடம் 'ஜோனியை நீங்கள் தான் கொன்றீர்கள். நம்பிக்கைத் துரோகிகளான நீங்கள் எம்மை மீண்டும் உங்களை நம்பச் சொல்கின்றீர்களா?' என்று நாங்கள் கேட்ட போது 'ஜோனி உயிருடன் தான் இருக்கிறார். ஜோனியின் உயிருக்கு நான் உத்தரவாதம் தருகிறேன். நான் ஒரு தமிழன், நான் சொல்வதை நம்புங்கள்' என்று கேணல் வாசவன் சொன்னான். நாங்கள் அதை நம்பவில்லை. 'காங்கேசன்துறையிலிருந்து பலாலி போவதற்குள் உமது உயிருக்கே உத்தரவாதமில்லை. நீர் எப்படி ஜொனியின் உயிருக்கு உத்தரவாதம் கொடுக்கிறீர்?' என்று கேட்டோம். பேசாமல் வாயை மூடிக்கொண்டு போய்விட்டார். தமிழன் என்று தன்னை இனம் காட்டினால் தான் சொல்வதை நாங்கள் நம்பிவிடுவோம் என்று நினைக்கிறான்' என்று இன்னொரு பையன் கூறினான்.

> *தங்களைத் 'தமிழன்' என்று பெரிதாக இனங்காட்டும் எந்த இந்தியன் ஆமியையும் நம்பக்கூடாது.*

எவனைக் கொன்றாவது தங்களுக்குப் பட்டி வரட்டும் என்று தமிழ் ஆமிகள் நினைக்கிறார்கள். பட்டிதான் கிடைக்குமோ அல்லது (சவப்) பெட்டிதான் கிடைக்குமோ என்பதைக் காலம் தீர்மானிக்கட்டும். இவர்கள் சொல்வது எதையும் நாம் நம்பப்போவதில்லை. நம்பிக் கெட்டதால் தான் தமிழன் இந்த நிலையில் இருக்கிறான்?

தூரத்தே சென்று கொண்டிருந்த சுகுமாரின் பட்டி தெரிந்தது. இந்தப் பையனின் முதுகும் புண்ணாய்த் தெரிந்தது. எமது பையன்களின் முதுகில் வேதனையுடன் ஏற்படும் வரிகள் இந்தியத் தமிழ் இராணுவத்தினரின் சீருடையில் பதவி உயர்வுக்கான பட்டிகளாய் மாறுகின்றன! □

## சிரித்திரன் சுந்தரின் கதைத்தேன் துளிகள் 4



### பார்வைகள்

கண் நிறைந்த மாப்பிள்ளையாகப் பார்த்து கை நிறையப் பணம் கொடுத்து தன் மகளுக்கு திருமணம் செய்து வைத்தார் அந்தத் தந்தை.

தினமும் மருமகன் அலுவலகம் செல்லும் போது அவரைக் கண்ணால் ஆராதித்து பூரித்து நிற்பார்.

ஒரு நாள் - அவர் மகள் சொன்னாள்.

''அப்பா அவர் கந்தோருக்குப் போகும் போது நீங்கள் முன்னுக்கு நிற்காதீர்கள்....''

வியப்போடு நோக்கிறவரை நோக்கித் தொடர்ந்தாள் —

''உங்கள் முழுவியளம் அவருக்குத் நல்ல சகுனமாக இல்லையாம்....''

கண்ணிறைந்த மருமகனின் 'கவலை' அவர் கண்களில் நீரை வரவழைத்தது. □

### வர்க்கங்கள்

□ **பிரசுரங்களின் பின்னணி:-**

சென்ற சனிக்கிழமை (7. 4. 90) காலையில் எமது ஞாயிறு மலர் ஆசிரியரைச் சந்திக்க யாழ் இந்துக் கல்லூரியில் படிக்கும் மாணவன் (ஆண்டு 10) ஒருவன் வந்தான்.

அவன் கையில் ஒரு சிறு கட்டுரை. அதனை ஆசிரியரிடம் ஒப்படைத்து விட்டு அவன் கேட்ட கேள்வி ''எவ்வளவு காசு'' என்று தான்.

பத்திரிகையில் தமது ஆக்கங்களைப் பிரசுரிக்கச் செய்வதற்கு பணம் கொடுக்க வேண்டும் எனப் பலர் நினைக்கின்றார்கள். அந்த மாணவனுக்கு அந்தக் கருத்தினை யாரோ சொல்லியிருக்க வேண்டும்.

டைக்கடித சமாச்சாரமாகிவிடும்.

சில பேரை கிண்டல் செய்வதற்காக அல்லது மட்டம் தட்டுவதற்காக காத்திருக்கும் ஒரு சிலருடைய பத்திரிகைகளில் உங்கள் சடுகுடு விளையாட்டுகள் சரிவரலாம். அவர்களும் களம் தருவார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் அது சரிவராது.

'' முகமூடிகளைக் கழற்றி வைத்துவிட்டு சிறிது நேரம் பேசிச் சுகித்திருப்போம்'' என்று கிண்டல் செய்து கொண்டு '' கார்த்திநேசன்'' என்ற முகமூடியைப் போட்டுக் கொண்டு '' இலக்குத் தவறாத இலக்கிய வாதியின்'' உண்மைத் தோற்றத்தையும், வேஷத்தையும், மர்மங்களையும் அம்பலப் படுத்த நினைப்பது எப்படியான செயல்பா

நீங்கள் உங்கள்லட்சியங்களை வெற்றி கொண்டு விட்டீர்களா? உங்கள் நோக்கங்களை அடைந்து விட்டீர்களா?

உங்களைச் சூழ இருப்பவர்கள், அயோக்கியர்களாக பம்மாத்துக் காரர்களாக, முகமூடி போட்டவர்களாக. வேடதாரிகளாக இருக்கலாம். அவர்கள் புகழுக்காக, சமூக அந்தஸ்துக்காக இலக்கியங்களைப் படைக்கலாம். அது அவர்களின் விருப்பம்.

அவர்களின் இத்தகைய திருகுதாளங்களும் சின்னத்தனங்களும், நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்காது. எனவே நீங்கள் உங்கள் கடமையினைச் செய்யுங்கள். எந்தச் சத்தியவேட்கையுடன் எழுத முனைந்தீர்களோ அந்தச் சத்திய வேட்கையுடன் எழுதுங்கள். எமக்குரிய பணி

சில குறிப்புகள்'' என்ற கட்டுரையில் ஒரு சிறு பகுதி.

''இலக்கிய விமர்சனத்தில் இயற் பண்புவாதம், விமர்சன யதார்த்த வாதம், சோசலிச யதார்த்தவாதம் ஆகிய சொற்கள் அடிக்கடி பயன் படுத்தப் படுகின்றன. சமூக யதார்த்தத்தை உள்ளபடியே சித்திரிப்பது இயற் பண்பு வாதம் என்றும் அதை விமர்சன பூர்வமாக நோக்குவது விமர்சன யதார்த்தவாதம் என்றும் அதை பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் நோக்குவது சோசலிச யதார்த்த வாதம் என்றும் நாம் சுருக்கமாக விளங்கிக் கொள்ளலாம். இவ்வகையில் எமிலிஜோலா போன்றவர்கள் இயற்பண்பு வாதிகள் என்றும் செக்கோவ், டிக்கன்ஸ் போன்றவர்கள். விமர்சன யதார்த்த வாதிகள்

# சிரித்திரன் சுந்தரின் கதைத்தேன் துளிகள் 4

### பார்வைகள்

கண் நிறைந்த மாப்பிள்ளையாகப் பார்த்து கை நிறையப் பணம் கொடுத்து தன் மகளுக்கு திருமணம் செய்து வைத்தார் அந்தத் தந்தை.

தினமும் மருமகன் அலுவலகம் செல்லும் போது அவரைக் கண்ணால் ஆராதித்து பூரித்து நிற்பார்.

ஒரு நாள் - அவர் மகள் சொன்னாள்.

''அப்பா அவர் கந்தோருக்குப் போகும் போது நீங்கள் முன்னுக்கு நிற்காதீர்கள்....''

வியப்போடு நோக்கிறவரை நோக்கித் தொடர்ந்தாள் —

''உங்கள் முழுவியளம் அவருக்குத் நல்ல சகுனமாக இல்லையாம்....''

கண்ணிறைந்த மருமகனின் 'கவலை' அவர் கண்களில் நீரை வரவழைத்தது. □

### வர்க்கங்கள்

அவனோ பரம ஏழை.

அயல் வீட்டவரோ நகை அடைவு பிடிக்கும் செல்வந்தர். ஏழை தான் வளர்க்கும் கோழிகள் இடும் முட்டைகளால் ஜீவனம் செய்து வந்தான்.

ஒருநாள் —

ஏழையின் கோழி ஒன்றினை வட்டியார் வீட்டு நாய் பதம் பார்த்துவிட்டது.

உடனே வட்டியாரை அணுகி ''ஐயா உங்களின் நாய் எனது கோழியைக் கொன்று விட்டது'' என்றான் ஏழை. மௌனமாக இருந்த வட்டியாரிடம் தொடர்ந்து சொன்னான்.

''தயவு செய்து உங்கள் நாயைச் சங்கிலியால் கட்டிப் போடுங்கள்''

கிண்டல் முறுவல் நெளிய வட்டியார் சொன்னார்.

''நாய்ச்சங்கிலியை ஒருவரும் என்னிடம் அடைவு வைப்பதில்லையே...'' □





### கோபுரக்கலசம்

மகனது உத்தியோக உயர்வுக்காக உபவாசமிருந்து உடலை உருக்கி இறைவனை உபாசித்தாள் அந்தத்தாய்.
ஒருநாள் கோயிலை வலம்வந்து கொண்டிருக்கையில் மயங்கி விழுந்தாள்.
அங்கு நின்ற அடியார்கள் அவளைப் பரிவுடன் தூக்கிச் சென்று அருகிலுள்ள ஓரிடத்தில் படுக்கவைத்து மயக்கம் தெளியவைத்தனர்.
நினைவு தெளிவடைந்த அவளிடம் -
''அம்மா உங்கள் வீடு எங்கேயுள்ளது....சொல்லுங்கள் நாங்கள் கொண்டு போய் விடுகிறோம்...''
என்றார் ஒருவர்.
''என்னுடைய ஒரே மகன் என்னோடு கோபித்துக் கொண்டு என்னை வீட்டால் வெளிக்கிடுத்தி விட்டான்... நான் இப்போ இந்தமடத்தில் தான் தங்கியுள்ளேன்....''
- என்றவள் நெடுமூச்சுடன் தொடர்ந்தாள் -
''என் தவக் கொழுந்தின் நல்வாழ்விற்காக கோயில் கோபுர நிழலைத்தான் நான் தஞ்சமடைந்திருக்கிறேன்....'' என்று நினைத்தது அந்தத் தாயுள்ளம். □

### கருணை

கோயில் வேள்வியில் ஆடுகள் பலிகொடுக்கப் பட்டுக்கொண்டிருந்தன -
முப்பது ஆடுகளுக்கு மேல் வெட்டித்தள்ளிய அந்தப் பராக்கிரமசாலி அந்தக் கணத்தில் கோயிலின்பின் கைகள் பதற நின்றான்.
கோயிலை வலம் வந்த மூதாட்டி ஒருவர் -
''ஏனப்பா இப்படிப் பயந்து பதறி நிற்கின்றாய்? எனக்கேட்கவும்,
''நான் அன்போடு ஆசையாய் வளர்த்த ஆட்டை இப்போது பலி கொடுக்கப் போகிறார்கள். அதுதான்........''
- எனப் பரிதவிப்புடன் பதில் உரைத்தான் அவன். □

# இலக்கியத்துடம்

### □ பிரசுரங்களின் பின்னணி:-

சென்ற சனிக்கிழமை (7.4.90) காலையில் எமது ஞாயிறு மலர் ஆசிரியரைச் சந்திக்க யாழ் இந்துக் கல்லூரியில் படிக்கும் மாணவன் (ஆண்டு 10) ஒருவன் வந்தான்.

அவன் கையில் ஒரு சிறு கட்டுரை. அதனை ஆசிரியரிடம் ஒப்படைத்து விட்டு அவன் கேட்ட கேள்வி ''எவ்வளவு காசு'' என்று தான்.

பத்திரிகையில் தமது ஆக்கங்களைப் பிரசுரிக்கச் செய்வதற்கு பணம் கொடுக்க வேண்டும் எனப் பலர் நினைக்கின்றார்கள். அந்த மாணவனுக்கு அந்தக் கருத்தினை யாரோ சொல்லியிருக்க வேண்டும்.

உண்மையில் சில பத்திரிகைகள் சஞ்சிகைகளில் பிரசுரமாகும் சில விடயங்களைப் பார்க்கும் போது தரமில்லாத இவற்றினைப் பிரசுரிக்க முறைகேடான அலுவல்கள் ஏதாவது நடக்கின்றதா? என்று யோசிக்க வேண்டியுள்ளது.

### □ இலக்கியவாதியின் இலக்குகள்:-

அந்த மாணவன் விடைபெற்றுப் போய் சில நிமிடங்கள் கழித்து அன்றைய தபாலில் வந்த படைப்புக்கள் ஆசிரியர் கையில் கிடைத்தன. அவற்றில் ஒன்று கார்த்திநேசன் எழுதிய 'இலக்கியவாதியின் இலக்குகள்'' என்ற 7 பக்க (புல்ஸ்கைப் தாளில்) கட்டுரை 1.4.90 ஆம் திகதி ஈழநாதம் ஞாயிறு மலரின் 'இலக்குத்தவறாத இலக்கிய வாதி'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரைக்கு பதில் கூறும் முகமாகவே அக்கட்டுரை எழுதப்பட்டு உள்ளது. ''ஈழநாதம் இதழில் இலக்குத் தவறாத இலக்கியவாதி'' என்று குறிப்பிடப்பட்ட எழுத்தாளரின் உண்மைத்தோற்றத்தைவெளிக் கொணர வேண்டிய தருணம் வந்து விட்ட தென நினைக்கிறேன். வேஷங்கள் கலைக்கப் படவேண்டும். மர்மங்கள் துலக்கப் பட வேண்டும்.
பொய்ம்மை முகத்திரை கிழித்தெறியப்பட வேண்டும். ஆஹா? ஒஹோ! என்று துதிபாடும் அடியார் கூட்டத்தைப் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை''

என்று தொடங்கும் அக்கட்டுரையினை எழுதிய கட்டுரையாளர் கார்த்திநேசன் கட்டுரையுடன் இணைப்புக் கடிதம் எதனையும் அனுப்பவில்லை. தனது சொந்தப் பெயர் விலாசம் என்பன போன்ற எதனையும் குறிப்பிடவில்லை.

புனைப் பெயரில் நீங்கள் எழுதலாம். ஆனால் பத்திரிகை ஆசிரியருக்குக் கூட எழுதுவது யார் என்று தெரியாமல் இருப்பது என்பது மொட்டைக்கடித சமாச்சாரமாகிவிடும்.

சில பேரை கிண்டல் செய்வதற்காக அல்லது மட்டம் தட்டுவதற்காக காத்திருக்கும் ஒரு சிலருடைய பத்திரிகைகளில் உங்கள் சடுகுடு விளையாட்டுகள் சரிவரலாம். அவர்களும் களம் தருவார்கள். ஆனால் எல்லா இடங்களிலும் அது சரிவராது.

''முக மூடிகளைக் கழற்றி வைத்துவிட்டு சிறிது நேரம் பேசிச் சுகித்திருப்போம்'' என்று கிண்டல் செய்து கொண்டு ''கார்த்திநேசன்'' என்ற முகமூடியைப் போட்டுக் கொண்டு ''இலக்குத் தவறாத இலக்கிய வாதியின்'' உண்மைத் தோற்றத்தையும், வேஷத்தையும், மர்மங்களையும் அம்பலப் படுத்த நினைப்பது எப்படியான செயல்பாடாக கருத முடியும்.

### □ விமர்சனங்கள்

''இலக்குத்தவறாத இலக்கிய வாதியோ'' அல்லது எந்த இலக்கியப் பிரம்மாவோ விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல.

அல்லது சொந்தவாழ்க்கையில் தில்லுமுல்லுகளைச் செய்து கொண்டே ஏனையவர்களுக்கு போதனை செய்ய முனைபவர்களையெல்லாம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டுஆட வேண்டும் என்ற கட்டாயம் கூட இல்லை.

இலக்கிய வாதியின் இலக்கியப் படைப்புக்களை உரிய நெறி முறைகளில் நின்று எப்படி விமர்சனம் செய்யவேண்டுமோ? அவ்வாறே சொந்த வாழ்க்கையில் தில்லு முல்லுகளைச் செய்து கொண்டு போதிக்க முனைபவர்களையும் விமர்சியுங்கள். அதை விட்டுவிட்டு ஒளித்து நின்று கல் எறியாதீர்கள்,

நீங்கள் சாட்டும் குற்றங்கள் உண்மையாக இருந்தால் சரியான நேர்மையான விமர்சனங்களை நீங்கள் முன்வைப்பதாக இருந்தால் ஏன் முக்காட்டைப் போட்டுக் கொண்டு முகம் மறைத்து நிற்கின்றீர்கள்.

### □ இலக்கியவாதிகளின் பணி:-

இந்தத் தர்க்கங்களை விடுவோம். நீங்கள் இள வயதில் எத்தகைய வேட்கையோடு எழுத ஆரம்பித்தீர்கள். ஒரு புதிய உலகைப் படைப்பதற்காகவோ அல்லது வேறு எந்தக் காரணங்களுக்காகவோ? எழுதத் தொடங்கியிருப்பீர்கள்.

நீங்கள் உங்கள்லட்சியங்களை வெற்றி கொண்டு விட்டீர்களா? உங்கள் நோக்கங்களை அடைந்து விட்டீர்களா?

உங்களைச் சூழ இருப்பவர்கள், அயோக்கியர்களாக பம்மாத்துக் காரர்களாக, முகமூடி போட்டவர்களாக. வேடதாரிகளாக இருக்கலாம். அவர்கள் புகழுக்காக, சமூக அந்தஸ்துக்காக இலக்கியங்களைப் படைக்கலாம். அது அவர்களின் விருப்பம்.

அவர்களின் இத்தகைய திருகுதாளங்களும் சின்னத்தனங்களும், நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்காது. எனவே நீங்கள் உங்கள் கடமையினைச் செய்யுங்கள். எந்தச் சத்தியவேட்கையுடன் எழுத முனைந்தீர்களோ அந்தச் சத்திய வேட்கையுடன் எழுதுங்கள். எமக்குரிய பணியினை நாங்கள் செய்வோம்.

போலிகள், நோஞ்சான்கள், கோமாளிகள், பம்மாத்துக்காரர்கள், முகமூடிக்காரர்கள், போன்றவர்களையெல்லாம் தோலுரித்துக் காட்டுகின்றோம் என்று சொல்லிக் கொண்டு அதே வேடங்களை நீங்களும் போடாதீர்கள். அவர்களது தில்லுமுல்லுகளை நீங்களும்செய்யாதீர்கள்.

புஷ்பா தங்கத்துரைகள், சுஜாத்தாக்கள், ராஜேந்திரக் குமார்கள் என்று ஆபாச எழுத்தாளர்களை கிண்டல் அடித்துக் கொண்டு அதே எழுத்தாளர்கள் போல எழுதும் நம்மவர்களில் சிலரை சிறந்த இலக்கியப் பிரம்மாக்கள் என்று இங்கு சிலர் சொல்வதைப் போல ஏனைய எழுத்தாளர்களின் குற்றங் குறைகளை விமர்சிப்பதாகக் கூறிக் கொண்டு கண்டபடி எழுதுபவர்கள். தமக்குள் தாமே திருப்திப் பட்டுக் கொண்டு, தம்மை தாமே தட்டிக் கொள்ளலாமே தவிர வேறு என்ன பிரயோசனம் கிடைக்கப் போகின்றது.

இதனை உணர்ந்து கொள்ளாமல் மாபெரும் கலை இலக்கிய பிரமாக்கள் என்று உங்களை நீங்கள் மெச்சிக் கொண்டு இருங்கள். அதனால் யாருக்கும் என்ன பிரயோசனம்.

### □ மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்:-

எம். ஏ. நுஃமான் அவர்கள் எழுதிய மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும்'' என்னும் நூலில் ''மார்க்சியமும் இலக்கியத்திறனாய்வும் இன்னும் சில குறிப்புகள்'' என்ற கட்டுரையில் ஒரு சிறு பகுதி.

''இலக்கிய விமர்சனத்தில் இயற்பண்புவாதம், விமர்சன யதார்த்த வாதம், சோசலிச யதார்த்தவாதம் ஆகிய சொற்கள் அடிக்கடி பயன் படுத்தப் படுகின்றன. சமூக யதார்த்தத்தை உள்ளபடியே சித்திரிப்பது இயற்பண்பு வாதம் என்றும் அதை விமர்சன பூர்வமாக நோக்குவது விமர்சன யதார்த்தவாதம் என்றும் அதை பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் நோக்குவது சோசலிச யதார்த்த வாதம் என்றும் நாம் சுருக்கமாக விளங்கிக் கொள்ளலாம். இவ்வகையில் எமிலிஜோலா போன்றவர்கள் இயற்பண்பு வாதிகள் என்றும் செக்கோவ், டிக்கன்ஸ் போன்றவர்கள். விமர்சன யதார்த்த வாதிகள் என்றும் கார்க்கி, ஷொலோகோவ் போன்றவர்கள் சோசலிச யதார்த்த வாதிகள் என்றும் இனங்காணப்படுகின்றனர். சோசலிச யதார்த்த வாதம் பற்றி பேசும்போதே தீர்வு வழிகாட்டல் பற்றியும் பேசுகின்றனர். ஆனால் இந்தப் போக்குகளுக்கிடையே தாண்டமுடியாத இரும்புச்

**அழலாடிக்குட்டன்**

சுவர் இருப்பதாக நாம் கூற முடியாது. ஜோலாவின் 'ஜெர்மினாலும்' செக் கோலின் 'ஆறாவது வார்ட்டுக் கார்க்கியின் 'தாயும்' சமூக யதார்த்தம் பற்றிய நமது புரிதலை விசாரிக்கச் செய்வதில் ஒரே மாதிரியான பங்கையே வகிக்கின்றன என்றே நான் சொல்வேன். சத்திய ஜித்ராயின் 'பதர் பாஞ்சாலி' யை ஒரு இயற்பண்பு வாதப் படைப்பு என்பர். ஆயினும் நமது சமூக யதார்த்தத்தை அது நமது முகத்தில் அறைந்து காட்டுவதை மறுக்க முடியாது. புதுமைப் பித்தனின் 'மகாமசானம்' ஒரு சமூகப் பிரக்ஞை உள்ள வாசகனின் உணர்வை உலுப்பாமல் போகாது. அசோக மித்திரனின் படைப்புக்களைச் சிலர் பூர்ஷ்வா தனி மனிதக்கலை என்று ஒதுக்கலாம். ஆனால் கீழ் மத்திய தர வர்க்கத்தின் சமூகயதார்த்தத்தின் உக்கிரமான சித்திரங்களாகவே அவரது பெரும்பாலான படைப்புக்கள் இருப்பதைக் காண்கிறோம். நமக்குள் சமூக மாற்றம் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்துவதில் இவை யெல்லாம் வெவ்வேறு அளவில் பங்காற்றவே செய்கின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். தீர்வு, வழிகாட்டல் என்ற கலைக்குப் புறம்பான குண்டாந்தடிகளால் நாம் இவற்றின் கலைத் தன்மையை சமூகப் பெறுமானத்தை அளவிடக்கூடாது.''

□ சமர் -

# கடந்த காலத்தின் பதிவுகள்

[3]

1987 அக்டோபர் மாதம் நடந்த இந்த யுத்தத்தின் போது உரும்பிராய் கோப்பாய் என்னும் இரண்டு கிராமத்து மக்கள் பட்ட துன்பம் சொல்ல முடியாது. அழிவுகளையும் பாவிக்கப்பட்ட ஆயுதங்களையும் பார்த்தால் இது ஒரு பெரிய யுத்தம் தான். கெரில்லாச்சண்டை என்றாலே என்னவென்று அறியாத இந்திய இராணுவத்தினர் புலிகளினால் தாக்கப்பட்டபோதெல்லாம் பதிலுக்கு புலிகளை தாக்க முடியாமல் – அடுத்து இனி என்ன நடவடிக்கை எடுப்பது தம்மைத் தாக்கிய புலிகளை திருப்பித்தாக்க முடியாது ஆத்திரமடைவது வழக்கம். உதாரணமாக ஒரு கண்ணிவெடித் தாக்குதலை எடுத்துக்கொண்டால் அவ்வாறான ஒரு தாக்குதலில் அகப்படுபவர் அந்த நிலையில் புலிகளைத்திருப்பிச் சுடவோ பதில் தாக்குதல் நடத்தவோ முடியாது. அப்படியே அழிந்துவிட வேண்டியதுதான். உயிர் தப்பியவர் பெரும்பாலும் கை, கால் இழந்த நிலையில் இருப்பார்.

அந்த இடத்திற்கு ஒரு பெரிய இந்தியப்பட்டாளம் அனுப்பப்படும். அவர்கள் சம்பவம் நிகழ்ந்த இடத்திலும் அந்தச் சுற்று வட்டாரத்திலும் வெறிபிடித்து ஓடுவார்கள் கண்டவர்களைச்சுடுவார்கள். வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்ப்பார்கள், பெற்றோல் ஊற்றிக் கொளுத்துவார்கள்; வீடுகளில் புகுந்து தங்க நகைகளையும் விலையுயர்ந்த பொருட்களையும் சூறையாடுவார்கள். தளபாடங்களை உடைத்துத் தீ வைப்பார்கள்; பெண்களை கற்பழிப்பார்கள். இப்படியே ஒரு ஜவான் கொல்லப்படும் ஒருசிறு சம்பவம் கூட ஒரு கிராமம் அழிவதற்குப் போதுமான சாட்டாக அமையும் இராமாயணத்தில் இலங்கையை அனுமன் எரியூட்டியதாக வால்மீகி கூறியது எவ்வளவு உண்மையாய் விட்டது. மீண்டும் மீண்டும் குரங்குகளால் இலங்கை தொடர்ந்து தீ மூட்டப்படுமென்று சூசகமான ஒரு அறிவுறுத்துதல் வால்மீகியின் தூரதிருஷ்டி ஞானத்தில் நிச்சயம் தெரிந்து தான் இருக்க வேண்டும்.

கோட்டையிலிருந்து புறப்பட்ட அமைதிப்படை பருத்தித்துறை வீதி மார்க்கமாகவும், காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி ஆகிய மூன்று பாதைகளிலும் வியூகமைத்து முன்னேறிக் கொண்டிருந்தது எனக் கூறும்போது இதை ஒரு வெளிநாட்டவர் வாசிக்க நேர்ந்தால், இந்தியப்படை தமக்கு எதிராக வேறொரு நாட்டின் பெரிய படையுடன் சண்டையிட்டு வெற்றியுடன் முன்னேறிக் கொண்டதாக எண்ணி ஏமாந்து விடக் கூடும். அவர்கள் சுட்டதும் குண்டு பொழிந்ததும், ஹெலிகொப்டரிலிருந்து சுட்டதும் செயின் புளொக்குகளிலிருந்து தாக்கியதும் அப்பாவிப் பொது மக்களையும் பெண்களையும், குழந்தைகளையும் ஆஸ்பத்திரியில் வார்ட்டுகளில் இருந்த நோயாளிகள், நர்சுகள் டாக்டர்களையும் தான். இந்திய இராணுவத்தினருக்கு வீரமிருந்திருந்தால் இமயமலைப் பிரதேசத்திலிழந்த இந்தியாவின் மொத்தப் பரப்பில் மூன்றிலிரண்டு பகுதிக்கு சமமான நிலப்பரப்பை எப்பொழுதோ மீட்டிருக்கலாமே.

இவ்வாறு பருத்தித்துறை வீதி வழியால் முன்னேறியவர்கள் முத்திரைச்சந்திப் பகுதிக்கு மேல் முன்னேற முடியாது. ஸ்தம்பவித்து நின்றனர். கூர்க்காப்படை அவசர அவசரமாக இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு இருபாலை வரைதான் முன்னேற முடிந்தது இதன் மேலும் கூர்க்காப் பிரிவினர் அதிகளவில் கொண்டுவரப்பட்டு கடந்த இடமெல்லாம் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டு கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு மேல் முன்னேற முடியாமல் நாவலர் பாடசாலைப் பகுதியிலேயே முகாமிட்டு அங்கிருந்தவாறு கோப்பாய் கிராமத்தினுள் இடையறாது ஷெல் குண்டுகளை ஏவியவாறு இருந்தனர்.

நாவலர் பாடசாலையில் இருந்து பருத்தித்துறை வீதியில் இலங்கை மின்சாரசபை ஊழியர் ஒருவருடைய வீடு ஒன்று இருந்தது. தமது அயலில் இந்தியப்படை வந்து கண்ட கண்டபடி சுட்டுக் கொண்டிருக்கும் பொழுது தமது வீட்டிலிருப்பது பாதுகாப்பில்லை என எண்ணி வேறு இடத்திற்குப் போக எண்ணி அங்கிருந்து ஒரு மோட்டார் வாகனத்தில் குடும்பத்தினரை ஏற்றிக் கொண்டு இருக்கும் போது நாவலர் பாடசாலையில் இருந்த படையினர் அவர்களை நோக்கி குறிவைத்து ஒரு ஷெல் குண்டினை ஏவினர். அது குறிதவறாது தாக்கியதும் அந்த இலிகிதருடைய ஒரு மகளும் (பதினாறு வயது) மனைவியும் பரிதாபமாக அந்த இடத்திலேயே அழிந்தனர். குடும்பத்தில் தப்பியது அந்த இலிகிதரும் மற்ற இன்னொரு பெண்குழந்தையும் தான் இவ்வாறு கோப்பாய்ப் பகுதியில் பல குடும்பங்கள் மிகவும் கொடூரமான முறையில் அழிக்கப்பட்டன. எஞ்சிய கோப்பாய் கிராம மக்களில் பலர் நீர்வேலி நோக்கிச் சென்று அரசகேசரிப் பிள்ளையார் கோயிலில் தஞ்சம் புகுந்தனர். வேறு சிலர் மட்டுவிலுக்கு புலம் பெயர்ந்னர். உரும்பராயிலிருந்தும், தமது உற்றார் உறவினரைப் பலி கொடுத்த பல குடும்பங்களும் அரசகேசரிப் பிள்ளையார் கோயிலில் தஞ்சமடைந்தனர். கோயில் பெரிய அகதி முகாமாக மாறி, அயலிலுள்ள பல வீடுகள், கோயில் மடம் நீர்வேலி சீ.சீ. பாடசாலை முதலிய கட்டடங்களையும் உள்ளடக்கி பெரிய முகாமாக விஸ்தரிக்கப்பட்டது, இப்பொழுதும் சில அயல் கிராம மக்கள் தாம் தங்கியிருந்த காலப் பகுதியில் மாதம் திகதியை நினைவு வைத்துக் கொண்டு அக்கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்து திரும்புகின்றனர். பல குடும்பங்கள் உரும்பிராய் கோப்பாயிலிருந்து நீர்வேலிக்கும் அங்கிருந்து ஆவரங்காலுக்கும் ஆவரங்காலிலிருந்து வயல்வெளிகளினூடாக மட்டுவிலுக்குமாக மாறி மாறி அலைந்து கொண்டிருந்தன.



# சேவல் கூவாது விடிந்தநாட்கள்

இவ்வாறு மட்டுவிலில் கூட பெரிய அகதிமுகாம் ஒன்று உருவானது. சாவகச்சேரியைச் சுற்றியுள்ள பகுதி மக்களும் கூட மட்டுவிலில்தான் தஞ்சம் புகுந்தனர். ஒரு மாதத்தின் பின்பு, ஊரடங்கு உத்தரவு இரண்டுமணி நேரம் தளர்த்தப்பட்ட போது உணவுப் பொருட்கள் ஏதாவது கிடைக்குமா என எண்ணி நூற்றுக்கணக்கான மக்கள் சாவகச்சேரி சந்தைப் பகுதியை முற்றுகையிட்டனர். சாவகச்சேரி சந்தைப்பகுதியில் மக்கள் கூடுவதைக்கண்ட அமைதிப்படையினர், அவ்வாறு மூன்றாம் நாளும் சந்தையில் மக்கள் கூடிய பொழுது ஒரு ரஷ்சிய ஹெலிகொப்டரில் வந்து ஆகாயத்திலிருந்து சரமாரியாகச் சுட்டனர். ஆமாம் இன்னொரு ஜாலியன் வாலா பார்க் சம்பவம் இதைவிட மோசமான வேறொரு நய வஞ்சகச் செயலைக் கூற முடியுமா? ஒரு மாதமாக உணவின்றி அடைத்துக் கிடந்த மக்களை ஊரடங்குகளைத் தளர்த்தி உணவுப்பண்டங்களை வாங்க அனுமதித்து விட்டு ஆகாயத்திலிருந்து காட்டுமிராண்டித்தனமாகச் சுட்ட கொடுமைக்கு ஈடாக ஹிட்லருடைய ஆட்சியில் கூட நிகழ்ந்திருக் முடியுமா? அப்பப்பா கொஞ்சமா துரோகம். அடக்கியொடுக்கப்பட்டு போராடிக் கொண்டிருக்கும் ஒரு மிகச்சிறிய சிறுபான்மை மக்களுக்கு உதவுவதாகப் பாசாங்கு வார்த்தை கூறிக்கொண்டு வந்து அவர்களை நய வஞ்சகமாக அழிப்பது எந்த நியாயத்தின்படியாகுமாம்?

**நவபாரதி**

இந்த தாக்குதலின் பின் மட்டுவிலில் அகதிகளாக வந்து சேர்ந்த மக்கள் அப்பகுதிக்கு தாக்குதல் விஸ்தரிக்கப்படக் கூடுமென்ற பீதியினால் நிலை குலைந்து ஓடி மீண்டும் நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் தஞ்சம் புகுந்தனர். அந்நாட்களில் பருத்தித்துறை வீதி எங்கும் கைகளில் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு குழந்தைகளையும் உடைமைகளையும் சுமந்து சொண்டு வளர்ப்புப் பிராணிகள் பின் தொடர வீதிகளில் புகலிடம் தேடிய வண்ணம் இங்குமங்கும் மக்கள் அலைந்து கொண்டிருந்த காட்சி சரித்திரத்தில் வேறெங்குமே நடந்திராத பரிதாபம். நிரந்தர ஊரடங்குச் சட்டத்தினாலும் குடாநாடு முழுவதும் நகரப் பகுதியில் ஒரு பர்லாங்கு இடைவெளிக் கொன்றாகவும் நாட்டுப் பகுதிகள் ஒரு மைலுக்குக் குறைந்த இடைவெளியில் அமைந்திருந்த இந்தியப்படை முகாம்களிலிருந்து கண்மண் தெரியாமல் அடிக்கப்பட்ட ஷெல்லுக்குப் பயந்தும் மக்கள் நடமாட்டமே இல்லாது சுடுகாடாக இருந்தது முகாம்களில் வயது வித்தியாசமில்லாமல் இழுத்து வரப்பட்ட மக்களை அடித்து வதைத்தார்கள். அப்படி அடித்து வதைக்கும் போது வதைபடுவோர் அழுது குழறும் வேதனையான குரல் கேட்டு முகாம்களுக்கு சற்று சமீபத்தில் வாழும் மக்கள் கதிகலங்கி ஒடுங்கினர். அரச அலுவலகங்கள் எல்லா வற்றிலும் இந்தியப்படைகள் அகதிகளாக கோயில்களில் தஞ்சம்புகுந்தவர்களைப் பார்வையிட சமூக சேவைப் பகுதியினர் யாருமில்லை. இதில் அநியாயமானதொரு நிலையென்னவென்றால் யாழ். அரச அதிபரே ஆனைக் கோட்டை அகதிமுகாமில் தமது குடும்பத்துடன் அகதியாக தங்கியிருந்தமை தான். வீடுகளை விட்டு வெளியேறியவர்கள் உணவு இன்றி தவித்தார்கள் சிலர் தேங்காய்களை உடைத்து சிறுதுடுகளாகக் கீறி எடுத்து உண்டார்கள். தண்ணீர் அருந்தலாமென்றால் ஷெல் விழுந்த கிணறுகளும் வேண்டுமென்றே இந்தியப்படையினரால் கழிவுப் பொருட்கள் இட்டுப் பாழாக்கப்பட்ட கிணறுகளுந் தான் காணப்பட்டன எல்லோருடைய நடமாட்டமும் கட்டுப்பட்ட நிலையில் ஒருவருக்கும் தாம் அடைப்பட்டு இருந்த முகாம் ஒன்றைத் தவிர மற்ற இடங்களில் என்ன நடைபெறுகிறது என்று அறிய முடியாது இருந்தது. □

(தொடரும்)

---

- □ யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையும், நோயாளர் நலன்புரிச் சங்கமும்.
- □ கலைப் படங்களும் - வீடியோ சென்டர்களும்
- □ மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமும்- சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் சம்பள சேர்வுப் பணமும்.
- □ இந்தியப் புத்தகங்களின் விலை.

‘என்னடாப்பா விக்கி உன்னைக் கன நாளாய் காணேல்லை’. என விக்கி

‘ஏன்டாப்பா சந்திக்குசந்தி- மூலைக்கு மூலை எண்டு எத்தினை இருக்கு, இந்தியாவில படம் வெளி வாறதுக்கு முந்

‘நேற்றைக்கு எங்கடை பொன்னம்பலத்தைக் கண்டனான். ஆள் நல்லாய் சோந்து போய் இருக்கிறான்.’ என்றான் சவுந்திரம்.

‘ஏன்டாப்பா-’

‘அவன் முந்தி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தால காங்கேசன்துறை சீமெந்துப் பக்டரியில வேலை செய்தவன்தானே’

‘ஓமோம்–’

முந்தி மூண்டரை மடங்கு விலைக்குத்தான் விலைப்பட்டுது. இப்ப கொஞ்சக்காலமாய் மூண்டே முக்கால் மடங்கு. நாலு மடங்கு எண்டு விற்கினம்’ என்று தொடங்கினான் சவுந்திரம்.

‘எங்கை விக்கினம்’ எனத் தாடி மாமா கேட்டான்.

மாமா இறைச்சி விக்கிற கடையில என்ன விறகே விற்பான்கள். என்ன கதையப்பா கதைக்கிறாய். இஞ்சை இருக்கிற எல்லாப் புத்தகக் கடையிலையும் இது தான்

கவிதை

## மாற்றம் காண்போம்

போர்முரசொலித்த மண்ணில்

## சிந்தனைப் புனம்

ஒருவன் ஏழையாக இருக்கலாம். ஏழ்மை என்பது இந்த உலகம் தோன்றிய நாள் முதல் உள்ள ஒரு பிரச்சினை. பொருளாதாரமே எல்லாப் பிரச்

டங்களை உடைத்துத் தீ வைப்பார்கள்; பெண்களை கற்பழிப்பார்கள். இப்படியே

இவ்வாறு பருத்தித்துறை வீதி வழியால் முன்னேறியவர் கள் முத்திரைச்சந்திப் பகு

யில் இலங்கை மின்சாரசபை ஊழியர் ஒருவருடைய வீடு பகுஒன்று இ(ரு)ந்தது. தமது அய

இன்னொரு பெண்குழந்தை யும் தான் இவ்வாறு கோப் பாய்ப் பகுதியில் பல குடும்பங்

யில் மக்கள் கூடுவதைக் கண்ட அமைதிப்படையினர், அவ் வாறு மூன்றாம் நாளும் சந்

திராத பரிதாபம். நிரந்தர ஊரடங்குச் சட்டத்தினாலும் குடாநாடு முழுவதும் நகரப்

(தொடரும்)

---

- ☐ யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையும், நோயாளர் நலன்புரிச் சங்கமும்.
- ☐ கலைப் படங்களும் - வீடியோ சென்டர்களும்
- ☐ மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமும்- சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் சம்பள சேர்வுப் பணமும்.
- ☐ இந்தியப் புத்தகங்களின் விலை.




'என்னடாப்பா விக்கி உன்னைக் கன நாளாய் காணேல்லை'. என விக்கியைச் சவுந்திரம் கேட்டான்.

'பழையபடி யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரிச் சங்கம் தொடங்கியிருக்கல்லே.' என்றான் விக்கி.

'மெய்யே' என்றான் தாடி மாமா.

'ஐ. பி. கே. எவ். வரமுன்னர் நோயாளர் நலன்புரிச் சங்கம் என்ன மாதிரி திறமாய் வேலை செய்ததெண்டு தெரியுமே.'

'ஓமோம்' யாழ்ப்பாணத்தில் இருக்கிற சனம் எண்டு இல்லை, வெளிமாவட்டங்களில் இருக்கிற சனங்களும் சங்கத்தைப் பற்றி நல்லாய்த் தான் சொன்னவையள்.'

'அப்ப சரியான நெருக்கடியான நேரம் தானே. ஆஸ்பத்திரியில வேலை செய்யிற உத்தியோகத்தர்களுக்கும், நோயாளர்களுக்கும் எல்லா உதவியளையும் செய்து கொண்டு வந்தது.'

'இப்ப எண்பத்தியேழு அக்டோபருக்குப் பிறகு இப்ப அது பழையபடி செயற்படத் தொடங்கியிருக்கு. எங்கடை மண்ணில இருக்கிற எங்கடை ஆஸ்பத்திரியை நாங்கள்தான் நல்லாய் பராமரிக்கவேணும். இப்ப பிரச்சினை ஒன்றும் இல்லை. பிறகேன் உந்த வேலையள் எண்டு சிலபேர் கேப்பினம். அப்பிடியான ஆட்களுக்கு நோயாளர் நலன் புரிச்சங்கத்தின்ரை அத்தியாவசியத்தை உணர வைக்க வேண்டும்.' என்றான் விக்கி.

☐ ☐ ☐

'ஊரெல்லாம் மினித்தியேட்டர் இருக்கு, வீடியோ சென்டர்கள் இருக்கு. ஆனால் இருந்து என்னபிரயோசனம்.' என்று கவலைப் பட்டான் சவுந்திரம்.

'ஏன்டாப்பா சந்திக்குசந்தி-மூலைக்கு மூலை எண்டு எத்தினை இருக்கு, இந்தியாவில படம் வெளி வாறதுக்கு முந்தியே வீடியோவில் இஞ்சை படம் வந்திடுது. பிறகேன்டாப்பா கவலைப்படுகிறாய்.' எனக் கேட்டான் தாடிமாமா.

'தாடி மாமா உனக்கு எதுவும் ஒழுங்காயும் தெரியாது, எதையும் ஒழுங்காயும் பார்க்கவும் மாட்டாய். நான் மசாலாத்தனமான தமிழ் சினிமாப் படங்களைப் பற்றிக் கதைக்கேல்லை. நல்ல தரமான சினிமாப் படங்களைப் பற்றிக் கதைக்கிறன்.' என்றான் சவுந்திரம்.

'ஓமோம் சவுந்திரம் சொல்லுறது சரிதான்.' என ஆமாம் போட்டான் விக்கி.

'தமிழ் - மலையாளம், என்று இந்திய மொழிப்படங்களை மாத்திரம் சொல்லேல்லை. உலகத்தில இருக்கிற எல்லா மொழிகளிலையும் உள்ள நல்ல கலைப் படங்களை தியேட்டர்களிலை தான் பாக்கேலாமல் இருக்கு. கடைசி வீடியோ கசெட்டாக வந்தால் தன்னும் உபயோகமாக இருக்கும்.'

'ஓமோம் - நல்லாத்தான் இருக்கும். ஆனால் எந்த வீடியோ சென்டரில போய் கேட்டாலும் கலைப்படங்கள் மருந்துக்குத் தன்னும் கிடையாது.''

'இதைப்பற்றி-இந்தப்படங்களில் ஆர்வம் உள்ள ஆராவது ஆட்கள் ஏதாவது முயற்சி எடுத்தால் நல்லது.'' என்றான் சவுந்திரம்.

☐ ☐ ☐

'நேற்றைக்கு எங்கடை பொன்னம்பலத்தைக் கண்டனான். ஆள் நல்லாய் சோந்து போய் இருக்கிறான்.' என்றான் சவுந்திரம்.

'ஏன்டாப்பா-'

'அவன் முந்தி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தால காங்கேசன்துறை சீமெந்துப் பக்டரியில வேலை செய்தவன்தானே'

'ஓமோம்–'

'அப்ப சம்பள நிர்ணயசபையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளம் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தாலையும், லங்கா சீமெந்து லிமிட்டெட்டினாலும் கொடுக்கேல்லை. ஒவ்வொரு தொழிலாளிக்கும் வருமதியான கணக்கு விபரம் மூன்று பிரதிகளில் கொடுக்க வேண்டும் எண்டு சொல்லி அந்தச் செலவுக்காக ஒவ்வொரு தொழிலாளியிட்டையும் இருந்து 1985ஆம் ஆண்டு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் ரூபா 50 வேண்டினது.'

'அப்ப பொன்னம்பலமும் கொடுத்தவனே.'

'ஓமாம்'

'பிறகு'

'அப்ப அப்படி ஐம்பது ரூபாய் கட்டின ஆட்களிட்டை இருந்தே வழக்குச் செலவு எண்டு திரும்பவும் 29-01-90, 11-02-90, 18-02-90ஆம் திகதியிட்ட கடிதங்கள் மூலம் மீண்டும் ரூபா 50 மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் வேண்டியிருக்கு.'

'பொன்னம்பலம் என்னவாம்.'

'அவனுக்கு வழக்கு என்ன மாதிரி எண்டும் சம்பள மிச்சக் காசு வந்து சேருமோ எண்டும், கவலையாய் இருக்கு' என்றான் விக்கி.

☐

'தமிழ் நாட்டில் இருந்து வாற புத்தகங்கள் எல்லாம் முந்தி மூண்டரை மடங்கு விலைக்குத்தான் விலைப்பட்டுது. இப்ப கொஞ்சக்காலமாய் மூண்டேமுக்கால் மடங்கு. நாலு மடங்கு எண்டு விற்கினம்' என்று தொடங்கினான் சவுந்திரம்.

'எங்கை விக்கினம்' எனத் தாடி மாமா கேட்டான்.

மாமா இறைச்சி விக்கிற கடையில என்ன விறகே விற்பான்கள். என்ன கதையப்பா கதைக்கிறாய். இஞ்சை இருக்கிற எல்லாப் புத்தகக் கடையளிலையும் இதுதான் நிலைமை.'

'ஏன் உப்பிடி விக்கவேணும்'

'அதுதான் ஏன் எண்டு கேக்கிறன். புத்தகங்களை இறக்குமதி செய்து விக்க ஏராளமான செலவு புத்தகக் கடைக்காரருக்கு இருக்கும் தான் எண்டாலும் ஒவ்வொரு புத்தகத்திலையும் இத்தனை மடங்கு கூட்டவேணுமே.'

'இந்தப் புத்தகங்களின்ரை விலையை என்னமாதிரி தீர்மானிக்கினம் எண்டு தெரியுமே.'

'யாழ்ப்பாணத்திலை எத்தினை புத்தகக் கடையிருக்கு. யாராவது ஒரு புத்தகக்கடைக்காரர் இதைப்பற்றி விளக்கமாகச் சொன்னால் என்ன?'

'நல்லதுதான். ஆர் விளக்கமாகச் சொல்லுவினம்'

☐

## படைப்பாளிகளே வாசகர்களே...

- ☐ ஞாயிறு மலர் பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்கள், விமர்சனங்கள் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.
- ☐ கலை, கலாசாரம் ஆய்வு, மொழியியல், வரலாறு பொருளாதாரம் அபிவிருத்தி மற்றும் சகல ஆக்க இலக்கிய, வல்லுனர்கள் அனைவரிடமிருந்தும் படைப்புக்கள் வரவேற்கப்படுகின்றன.
- ☐ உங்கள் கருத்துக்களும், படைப்புகளும் ஞாயிறுமலரின் தரத்தினை பேண உதவும் என நம்புகிறோம்.

— ஆ - ர்




## மாற்றம் காண்போம்

போர்முர சொலித்த மண்ணில்
பூம்புனல் பாயக் கண்டேன்!
வானர மமர்ந்த கொம்பில்
பூமுகம் சிலிர்க்கக் கண்டேன்!
ஏழரை யாகும் முன்னே
ஏகாந்த மாய் மறையும்!
வீதிகள் தோறும் மக்கள்
விரைந்திடல் காண லுற்றேன்!

ooo

வேலிகள் பயிரை மேய்ந்த
காலங்கள் கருகக் கண்டேன்!
தாலிகள் கழுத்தில் மின்னும்
தாய்க்குலம் திரியக் கண்டேன்!
ஓர்குலம் ஈழ மக்கள்
ஒன்றவர் சிந்தை யென்(று)
ஓரசரீரி வானில் ஒலித்திடும்
ஓசை கேட்டேன்!

ooo

நாட்டினில் அமைதி காண்போம்!
நல்லவை நடக்கக் காண்போம்!
மாக்களும் மனித ராகிய
மகிழ்ச்சியில் திளைக்கக் காண்போம்!
ஓரன்னை மக்கள் போன்றே
ஒற்றுமை ஓங்கக் காண்போம்!
பாரதி கண்ட பூமி
சம சமுதாயம் காண்போம்!

ooo

- கண. மகேஸ்வரன்

## சிந்தனைப் புனம்

ஒருவன் ஏழையாக இருக்கலாம் ஏழ்மை என்பது இந்த உலகம் தோன்றிய நாள் முதல் உள்ள ஒரு பிரச்சினை. பொருளாதாரமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆதாரம் என்று குறிப்பிட்ட கால் மார்க்ஸ் ஏழ்மையிலிருந்து தான் மானிடத்தின் பிரச்சினைகளே உருவெடுக்கின்றன என்ற கருத்தை நிராகரிக்கவில்லை. ''கந்தையானாலும் கசக்கிக்கட்டு'' என்ற தமிழ்ப்பழமொழியிலும் ஏழ்மையிலும் தூய்மையாக இருந்ததிலின் அவசியத்தையே வலியுறுத்துகின்றது.

ஒருவனிடம் ஏழ்மை நிலைமை காணப்படினும் அவனிடம் ஒழுக்கம் இருந்தால் உலகம் அவனை மதிக்கும் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பம் படும் என்பது இதன் தாற்பரியமே

**பொன். பூலோகசிங்கம்**

மதுபானம், புகைபிடித்தல், துர்நடத்தை, வாய்மையின்மை என ஒழுக்கக் கேடுகள் இப்போது மலிந்து விட்டன. இது ஆரோக்கியமற்ற சமூக அமைப்பின் வெளிப்பாடு

வாள் முனையே வலிமையுடையது என நெப்போலியன் சொன்னான். நா முனையே வலிமையுடையது என நாவலர் பகன்றார். பேனா முனையே வலிமையுடையது என வால்டேர சொன்னார். அறிவு முனையே வலிமையுடையது என பெர்ணாட்ஷோ குறிப்பிட்டார். ஆனால் ஒழுக்கமே வலிமையுடையது என வள்ளுவன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பற்றிக் கூறும் ஈழத்து பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய சில கருத்துக்கள்

சி. க. சிற்றம்பலம்
(தலைவர், வரலாற்றுத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)

இந்தியாவிற் கண்மையிலான ஈழத்தின் அமைவிடம் பண்டுதொட்டு கலாசார ரீதியில் இரு பிராந்தியங்களுக்குமிடையே நெருங்கிய தொடர் நீடித்து நிலைக்க வழி வகுத்தது. எவ்வாறாயினும் இத்தகைய தொடர்புகளில் தமிழக-ஈழத் தொடர்புகளே மிகமிக நீடித்ததொன்றாக அமைந்திருந்தன. வரலாற்றுக் காலத்தில் தமிழக-ஈழ நாகரிகங்கள் வளர்ச்சி பெற அத்திவாரமிட்ட பெருங்கற்காலப் பண்பாடு இரு பிராந்தியங்களையும் ஒருங்கிணைத்ததிலிருந்தே இத்தொடர்கள் வலுவடைந்தன. (Sitrampalam. S.K. 1980) ஈழத்துப் பாளி வரலாற்று நூல்களாகிய தீப வம்சம் போன்றவற்றில் இந்தியா தமிழகம் பற்றி வரும் குறிப்புக்களில் அடிக்கடி 'அக்கரை' என்ற (opposite coast, further coast) சொற் பிரயோகங்கள் இடம் பெறுவதன் மூலம் பாக்கு நீரிணைக்கு இருமருங்கிலுமிருந்த தமிழக-ஈழப் பிராந்தியங்களிடையே நிலவிய ஒருமைத்துவம் நன்கு புலப்படுகிறது. இத்தகைய ஒருமைப்பாட்டின் எச்சங்களாக இரு பிராந்திய மொழிகளான தமிழ், சிங்கள மொழிகளிலுள்ள நூல்களில் கடற்கோள்கள் பற்றிய சிந்தனைகளும் அமைகின்றன என்றால் மிகையாகாது. ஈழத்து முதல் மன்னனாகிய விஜயன் பாண்டிய நாட்டு இளவரசி திருமணம் பற்றிய ஐதிகமும் இத்தகையதே.

வரலாற்றுக்கால ஈழத்து அரசியல் வளர்ச்சியிற் கூட பாக்கு நீரிணையின் இருமருங்கிலுமமைந்த தமிழகம் - ஈழம் ஆகிய பகுதிகளில் ஒரு வித பொதுத்தன்மையை அவதானிக்க முடிகிறது. முடிவேந்தரும் குறுநில மன்னரும் ஆண்டதே தமிழகமாகும். ஈழத்துப் பாளி நூல்களில் பண்டைய ஈழத்தில் அநுராதபுரத்தை மையமாகக் கொண்ட மன்னரது ஆட்சியே நீடித்திருந்தது பாராட்டப் பெற்றாலும் கூட மத்தியில் தனிமன்னனது ஆட்சியுடன் நாட்டின் ஏனைய பகுதிகளில் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்தியே தமிழகம் போன்ற குறுநில மன்னர்கள் ஆட்சியும் நிலைபெற்றிருந்ததைச் சமகால ஈழத்துப் பிராமிக்கல் வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. (Gunawardha. R. A. L. H. 1985)

தமிழகம் – ஈழம் ஆகிய பிராந்தியங்களிற் காணப்படும் மிகப்பழைய எழுத்தாதாரங்கள் பிராமிய வரிவடிவத்திலமைந்த இப் பிராமிக் கல்வெட்டுக்களே. இவற்றிற் பெரும்பாலானவை கி. மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கும் இடைப்பட்டவையேயாகும். தமிழகத்திலே மிகப் பழைய பிராமிக் கல்வெட்டுக்கள் மதுரையை மையமாகக் கொண்டு தென் தமிழகத்திலே தான் காணப்படுகின்றன. தமிழ் வளர்த்த சங்கங்கள் கூட உதயமான இடமும் பாண்டி நாடாகிய தென் தமிழகமே.

இச் சந்தர்ப்பத்தில் பாளி நூல்களில் தேவநம்பியதீஸன் ஆட்சிக் காலத்திற்கு முன்னரும் விஜயன் ஆட்சிக்குப் பின்னருமான காலத்தில் (கி. மு. 6—3 ஆம் நூற்றாண்டுவரை) 'பண்டு' என அடைமொழியுடன் காணப்படும் மன்னர் பெயர்களும் பாண்டி நாட்டுடன் ஈழத்தை இணைப்பனவாகவே தான் காணப்படுகின்றன. ஈழத்து முதலரசனாகிய விஜயனின் பட்டத்தரசி பண்டு (பாண்டியவம்ச) இளவரசியாகும். விஜயன் பின் ஆண்ட மன்னர்களாக 'பண்டு வாசுதேவ' 'பண்டு காபய' ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் வட இந்தியாவிலிருந்த 'பண்டு' வம்சத்தவர் எனப் பாளி நூலோர் வியாக்கியானம் கொடுத்தாலும் கூடத் தொல்லியற் பின்னணி தமிழகப் பாண்டியராகவே இவர்கள் இருக்கலாமென எண்ணவைக்கிறது. காரணம் பாளி நூல்களில் பாண்டியர் பற்றி வரும் குறிப்புக்கள் எல்லாவற்றிலும் 'பண்டு' என்ற சொற்பிரயோகம் காணப்படுவதே. 'பழையர்' என்ற பொருளைத் தருவதே பாண்டியர் என்ற பெயரும் கூட. கிரேக்க அறிஞர்கள் கூட பண்டைய ஈழத்து மக்களை இதே பொருள் தரும் 'பழகோனி' என்ற பெயரால் அழைத்தலும் ஈண்டு நினைவு கூரற்பாலது. ஈழத்தின் செல்வாக்குள்ள பழையயெயர்களில் ஒன்றாகிய தம்பபண்ணி/தாமிரபரணி, தமிழ் நாட்டிலுள்ள தண்பொருளை என்ற ஆற்றுப் பெயரின் திரிபே எனலாம்.

ஈழமும் குறிப்பாக இதன் வடபகுதியும் தமிழகத்துடன் மிக அண்டிக் காணப்பட்டதால் தமிழகத்தில் ஏற்பட்ட மக்கள் வளர்ச்சி சமகாலத்திலும் இங்கு ஏற்பட்டிருக்கலாமெனக் கொள்ளல் தவறன்று. இதனால் இரு பிராந்தியங்களுக்குமிடையே ஆதி காலத்தில் பொது மொழி, பொது எழுத்துமுறை ஆகியவற்றைப் பயனபடுத்திய மக்கட் கூட்டத்தினர் வாழ்ந்தனர் எனக் கொள்ளலும் தவறன்று. காரணம் பெருங்கற்காலக் கலாசாரமே இரு நாட்டு நாகரிக வளர்ச்சிக்கும் வித்திட்டது. தமிழகத்தில் அமைந்த தமிழ்ச் சங்கங்களிலும் ஈழத்துப் புலவர்கள் அங்கம் வகித்திருக்கலாம் என்பதனை ஈழத்துப் பூதந்தேவனாரின் சங்கப்பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. (வேலுப்பிள்ளை ஆ. 1986, 1987) பூதந்தேவனார் என இருவர் குறிக்கப்படுகின்றனர். ஒருவர் வெறுமனே ஈழத்துப் பூதந்தேவனார்' என்று மட்டும் குறிக்கப்பட மற்றையவர் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார்' என விளிக்கப்பட்டுள்ளார். தமிழகம் ஈழமாகிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் வாசகங்களின் அடிப்படையில் நோக்கும் போது இரு அடைமொழிகளும் ஒருவரையே குறித்து நிற்கின்றன என்பது தெளிவு. இவரைப்போன்று வேறும் பல ஈழத்துப் புலவர்கள் பாடல்கள் சங்க இலக்கியங்களில் தொகுக்கப்படாத நிலையில் மறைந்திருக்கலாம். இவர்களில் பலரும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே சில நூற்றாண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருக்கலாம் என ஊகிக்கலாம்.

மேற்கூறிய கருத்தினை உறுதிப்படுத்துவனவாக ஈழத்து பிராமிக் கல்வெட்டுக்கள் அமைகின்றன. (Paranavi Tana S. 1970) பொதுவாக ஈழத்திற்கு பிராமி வரிவடிவம் பௌத்த மதம் அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் இங்கு புகுத்தப்பட்ட போது அம்மதத்தின் மொழியாகிய பாளியை எழுத இங்கு புகுத்தப்பட்டது என்று நம்பப்பட்டாலும் கூட இத்தகைய வரிவடிவம் இங்கு புகுமுன்னரே தமிழகம்- ஈழம் ஆகிய பிராந்தியங்களுக்குப் பொதுவான ஒரு பிராமி வரிவடிவம் இருந்ததென்றும் பௌத்த மதத்துடன் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த பிராமி வரிவடிவம் இதனை அமிழ்த்தியதென்றும் கல்வெட்டறிஞர்களான பர்ணாந்து (Fernando P. E. 1969) கருணரத்தினா (Karunaratne S. M. 1960) போன்றோர் கருதுகின்றனர். இத்தகைய வரிவடிவத்தில் எச்ச சொச்சமாகக் காணப்பட்ட சில எழுத்துக்களும், தமிழ் வடிவங்ககளும் இக்கருத்தினுக்குச் சான்றாக அமைகின்றன. உதாரணமாக ஈழத்து ஆதி நிர்வாகத்தில் முதுகெலும்பாக விளங்கிய நிலக்கிழார் 'பருமக' என இக்கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய வடிவம் தமிழ் பெருமகன்/பருமகன் ஆகியனவற்றின்எச்சமே. இவ்வாறு தான் தமிழகக் குறுநில மன்னர்களுக்குரிய ஆய், வேள் போன்ற பெயர்களும், பரதவர் போன்ற இனக்குழுக்களின் பெயர்களும் இவற்றில் காணப்படுகின்றன. (சிற்றம்பலம் சி. க. 1983).

> **வரலாற்றுக்கால ஈழத்து அரசியல் வளர்ச்சியிற் கூட பாக்கு நீரிணையின் இருமருங்கிலுமமைந்த தமிழகம்-ஈழம் ஆகிய பகுதிகளில் ஒரு வித பொதுந் தன்மையை அவதானிக்க முடிகிறது.**

இத்தகைய பின்னணியிற்றான் ஈழத்துப்பிராமிக் கல்வெட்டுக்களில் உள்ள 'தமேழ' என்ற பதம் பற்றி ஆராய்தல் அவசியமாகின்றது. உண்மையிலே தமிழர்/ என்பதன் ஒரு திரிபே 'தமேழ' எனலாம், இப்பதத்தின் மூன்றாவது எழுத்தாகிய 'ழ' தமிழிற்கே உரிய சிறப்பெழுத்தாகும். இதனை 'ழ' என்று வாசிப்பதற்குப் பதிலாக 'ட' என வாசித்தவரும் உளர். (Paranavitana. S. 1970) கருணரத்தினா போன்றோர் இதனை 'ழ' கர வடிவமே எனக்காட்டி 'ழ' கரத்தின் மிகப்பழைய வடிவம் 'ட' போன்றே இருந்ததென்றும் கூறியுள்ளனர். (Karunaratne S.M 1984)

அவ்வாறாயின் தமிழின் சிறப்பெழுத்தாகிய 'ழ' கரத்தை கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முந்தியே எழுதவும் விளங்கவும் உள்ள மக்கட் கூட்டத்தினர் ஈழத்தில் நிலைபெற்றிருந்ததினை இது எடுத்துக் காட்டுகின்றது எனலாம். இத் 'தமேழ' சொற்பிரயோகம் காணப்படும் இடங்களாக அநுராதபுரம், வவுனியா, அம்பாறை மாவட்டத்திலுள்ள 'குடுவில்' ஆகியன விளங்குகின்றன. இவற்றுள் வவுனியா அம்பாறை மாவட்டங்கள் இன்றும் தமிழ்பேசும் பிரார்த்தியங்களாகக் காணப்படுவதும் இவற்றுள் இக் கல்வெட்டுக்கள் 'தமேழ' என்ற சொற்பிரயோகத்துடன் காணப்படும் மிகப் பழைய கல்வெட்டுகளாக இவை அமைந்திருப்பதும், இவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகிறதெனலாம். அத்டன் 'தமேழ' என்ற வாக்கியம் கொண்ட மிகப் பழைய கல்வெட்டுக்கள் தமிழகத்திலன்றி ஈழத்திலே தான் இவ்வாறு காணப்படுகின்றன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இனி, இக்கல்வெட்டுக்களின் வாசகங்களை நோக்குவோம். முதலாவது கல்வெட்டு பண்டைய ஈழத்தின் தலை நகராகிய அநுராதபுரத்திற் காணப்படுகின்றது இதனை வாசித்த பேராசிரியர் பரணவித்தானா (Paranavitana. S. 1940) அவர்கள் இக்கல்வெட்டு இலுப்பரண்டவில் வசிக்கும் தமிழரான சமணனால் தமிழ்க் 'கஜபதிகள்' கூடுவதற்காக அமைக்கப்பட்ட கட்டிடம் பற்றிக் கூறுகின்றது என்றார். இயற்கையாக அமைந்திருந்த பாறையை வெட்டியே இவர்கள் கூடுவதற்காக பல படிகள் வெட்டப்பட்ட மண்டபம் அமைக்கப்பட்டது. மண்டபத்தின் மேற்பகுதி மரத்தினால் அமைக்கப்பட்டதால் அழிந்துவிட்டாலும் இவற்றின் கால்களை நாட்டுவதற்கான துளைகள் இப்பாறையிலே காணப்படுவது மேற்காட்டியவாறு ஊகிக்க வைக்கிறது. கல்லில் வெட்டப்பட்ட படிக்கட்டுக்கள் போன்ற இருக்கைகளில் ஆசனத்திலிருந்தோர் பெயர்களும் உள. இவற்றுள் குபிர. திஸ. குபிர, சுயாத, சக, நாஸ்த, கறாவ ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். கறாவனின் இருக்கை ஏனையவற்றை விட உயரத்தில் இருப்பதாலும் இப்பெயரின் அருகில் 'நாவிய' என்ற வசனம் காணப்படுவது பாளி நூல்களில் நாவிக என்ற சொற்பிரயோகம் வணிகரைக் குறித்து நின்றதாலும் இம் மண்டபம் ஒரு வணிக கணத்தினர் கூட்டம் கூடித் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைக்கப்பட்டது எனலாம். அத்துடன் கடலோடி எனப் பொருள் தரும் கறாவ இவர்களின் தலைவனாகவும் விளங்கியிருக்கலாம். இதனால் தமிழக வியாபாரிகள் ஒரு குழுவாகக் கூடி வெளிநாடுகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டதும் புலனாகின்றது. இந்து சமுத்திரமே பொதுவாக வணிக நடவடிக்கைகளின் தோற்றுவாய் எனக்கொள்ளப் படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளில் தமிழர் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே முன்னின்றதும் தெளிவாகிறது பின் மத்திய காலத்திலும் கூட இந்துசமுத்திரத்தில் வழக்கிலிருந்த வியாபாரிகளின் மொழி தமிழே என்பதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

(அடுத்த வாரம் முடியும்)

இன்றைய இலக்கிய உலகில் சமகால இலக்கியம், இறந்தகால இலக்கியங்கள்

றின் தன்மை என்னவென்பதை இதனூடாக கூறுகின்றார் Islands in the sky, The sands of mars, The deep

கோளின் பெயரில் இது விரிவாக்கப்பட்டு திரைப்படமானது. அதே வேளையில் நூலாகவும் வெளியிடப்பட்டு

வராய் இருந்தார்.

**வாழ்க்கை**

ஆர்தர் சி. கிளார்க் 1917 ஆம்

பிரிட்டனின் விண்ணாய்வு நிலையம் நல்ல பல ஆலோசனைகளைப்பெற்றது.அக்குழு

தொடர்பு செய்மதியை அமைக்க ஆலோசனை கேட்டார். அவரது ஆலோசனைப்படி

ஈழத்தில் எழுதப்படும் விண்ணாய்வுக் கட்டுரைகளில் இலங்கையை 2 ஆவது தாயக

களில் அடிக்கடி 'அக்கரை' என்ற (opposite coast, further coast) சொற் பிரயோகங்கள் இடம் பெறுவதன் மூலம் பாக்கு நீரிணைக்கு இருமருங்கிலுமிருந்த தமிழக-ஈழப் பிராந்தியங்களிடையே நிலவிய ஒருமைத்துவம் நன்கு புலப்படுகிறது. இத்தகைய ஒருமைப்பாட்டின் எச்சங்களாக இரு பிராந்திய மொழிகளான தமிழ், சிங்கள மொழிகளிலுள்ள நூல்களில் கடற்கோள்கள் பற்றிய சிந்தனைகளும் அமைகின்றன என்றால் மிகையாகாது. ஈழத்து முதல் மன்னனாகிய விஜயன் பாண்டிய நாட்டு

மிக்கல் வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. (Gunawardha. R. A. L. H. 1985)

தமிழகம் – ஈழம் ஆகிய பிராந்தியங்களிற் காணப்படும் மிகப்பழைய எழுத்தாதாரங்கள் பிராமிய வரிவடிவத்திலமைந்த இப் பிராமிக் கல்வெட்டுக்களே. இவற்றிற் பெரும்பாலானவை கி. மு. 3ஆம் நூற்றாண்டுக்கும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கும் இடைப்பட்டவையேயாகும். தமிழகத்திலே மிகப் பழைய பிராமிக் கல்வெட்டுக்கள் மதுரையை மையமாகக் கொண்டு தென் தமிழகத்திலே தான் காணப்

பட்டுள்ளனர். இவர்கள் வட இந்தியாவிலிருந்த 'பண்டு' வம்சத்தவர் எனப் பாளி நூலோர் வியாக்கியானம் கொடுத்தாலும் கூடத் தொலலியற் பின்னணி தமிழகப் பாண்டியராகவே இவர்கள் இருக்கலாமென எண்ணவைக்கிறது. காரணம் பாளி நூல்களில் பாண்டியர் பற்றி வரும் குறிப்புக்கள் எல்லாவற்றிலும் 'பண்டு' என்ற சொற்பிரயோகம் காணப்படுவதே. 'பழையர்' என்ற பொருளைத் தருவதே பாண்டியர் என்ற பெயரும் கூட. கிரேக்க அறிஞர்கள் கூட பண்டைய ஈழத்து மக்களை இதே பொருள்

துப் பூதந்தேவனார்' என விளிக்கப்பட்டுள்ளார். தமிழகம் ஈழமாகிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் வாசகங்களின் அடிப்படையில் நோக்கும் போது இரு அடைமொழிகளும் ஒருவரையே குறித்து நிற்கின்றன என்பது தெளிவு. இவரைப்போன்று வேறும் பல ஈழத்துப் புலவர்கள் பாடல்கள் சங்க இலக்கியங்களில் தொகுக்கப்படாத நிலையில் மறைந்திருக்கலாம். இவர்களில் பலரும் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே சில நூற்றாண்டுகட்கு முன்னர்

ஈழத்து ஆதி நிர்வாகத்தில் முதுகெலும்பாக விளங்கிய நிலக்கிழார் 'பருமக' என இக் கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய வடிவம் தமிழ் பெருமகன் / பருமகன் ஆகியனவற்றின்எச்சமே. இவ்வாறு தான் தமிழகக் குறுநில மன்னர்களுக்குரிய ஆய், வேள் போன்ற பெயர்களும், பரதவர் போன்ற இனக்குழுக்களின் பெயர்களும் இவற்றில் காணப்படுகின்றன. (சிற்றம்பலம் சி. க. 1983).

பதும், இவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகிறதெனலாம். அத்துடன் 'தமேழ' என்ற வாக்கியம் கொண்ட மிகப் பழைய கல்வெட்டுக்கள் தமிழகத்திலன்றி ஈழத்திலே தான் இவ்வாறு காணப்படுகின்றன என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இனி, இக்கல்வெட்டுக்களின் வாசகங்களை நோக்குவோம். முதலாவது கல்வெட்டு பண்டைய ஈழத்தின்

சமுத்திரமே பொதுவாக வணிக நடவடிக்கைகளின் தோற்றுவாய் எனக்கொள்ளப்படுகிறது. இத்தகைய நடவடிக்கைகளில் தமிழர் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே முன்னின்றதும் தெளிவாகிறது பின் மத்திய காலத்திலும் கூட இந்துசமுத்திரத்தில் வழக்கிலிருந்த வியாபாரிகளின் மொழி தமிழே என்பதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

(அடுத்த வாரம் முடியும்) □

---

# எதிர்காலம் கணிக்கும் கதாசிரியர்

□ தி. தவபாலன்




இன்றைய இலக்கிய உலகில் சமகால இலக்கியம், இறந்தகால இலக்கியங்கள் படைக்க எத்தனையோ எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். இச்சமகால இறந்தகால இலக்கியங்கள் பலவித அடிப்படைத்துடன் தான் எழுதப்படுகின்றன. அதேபோல் எதிர்கால உலகு பற்றிய இலக்கியம் படைப்பது ஒரு கடினமான செயல். இன்றைய உலகின் வளர்ச்சிக்கேற்ப எதிர்காலத்தைப் பற்றி எதிர்வு கூறுவனவாக அவ்விலக்கியங்கள் இருத்தல்வேண்டும். பெரும்பாலும் எதிர்காலம்பற்றிய இலக்கியம் விஞ்ஞானத்தைப் பற்றியதாகும். இன்றைய உலகம் விஞ்ஞான உலகம். இவ்விஞ்ஞானத்தினால் உலகில் எத்தனையோ செயல்கள் சாதிக்கப்படுகின்றன. சாதிக்கப்படும். ஆகையால் எதிர்காலம் பற்றிய கணிப்பு விஞ்ஞானம் சார்ந்ததாக இருக்கும். இவ் விஞ்ஞான எதிர்காலம் பற்றி திட்டமான எதிர்வு கூறுகிறார்கள். ஆங்கிலத்தில் ஆர்தர், சி. கிளார்க், ஜீலஸ் வேர்ன் H. G. வெல்ஸ் ஆகிய விஞ்ஞானப் புனைக் கதாசிரியர்களின் பல விஞ்ஞான, விண்ணாய்வு எதிர்வு கூறல்கள் பலித்திருக்கின்றன. இவர்களில் தற்போது நம்மிடையே வாழ்பவர் இங்கிலாந்தில் பிறப்பிடமாகக் கொண்ட ஆர்தர் சார்ள்ஸ் கிளார்க், இலங்கையிலும் பல ஆண்டு காலம் வாழ்ந்து இலங்கைக்கு பெருமை தேடித் தந்தவர் இவர். இன்றும் இலங்கையிலேயே வாழ்கின்றார்.

இவரது விஞ்ஞானம் அதாவது விண்ணாய்வுக் கருத்துக்கள் புனைக்கதைகளின் மூலம் அநேகமாக வெளிப்படுத்தப்பட்டன. தம் புனைக்கதைகளினூடாக கூறிய பெரும்பாலான கருத்துக்களும் பலித்துள்ளன.

இவரது சில புனைக்கதை கதைகள் Child Hoodsend இது பறக்கும் தட்டுக்களை ஆதாரமாக வைத்து பின்னப்பட்டது. பிறக்கும் தட்டுகள் எங்கிருந்து வருகின்றன. அவற்றின் தன்மை என்னவென்பதை இதனூடாக கூறுகின்றார் Islands in the sky, The sands of mars, The deep Range, A Fall of moondust என்பவை இவரது புகழ்பெற்ற கதைகளாம்.

1968ஆம் ஆண்டில் 2001 A space odyssey என்பது உலகில் திரைப்படமாக்கப்பட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய படம் ஆஸ்கார் விருதுபெற்ற படமும் கூட. இப்படம் 2091 ஆம் ஆண்டில் ரஷ்யாவும், அமெரிக்காவும் சேர்ந்து ஒரு சர்வதேச குழுவாக விண்ணில் சஞ்சரித்ததை விளக்குகின்றது. பூமியிலிருந்து சந்திரன், செவ்வாய், வியாழன் என சூரிய மண்டலத்தின் எல்லை வரை சென்று வேறொரு நட்சத்திர மண்டலத்தையே ஆராய்வதாக இப்படம் எடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிரகம் பற்றிய தொலை நோக்கி ஆய்வுமூலம் பெற்ற தகவல்கள், எதிர்பார்ப்புகள் எல்லாம் இப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. மிகுதியான விஞ்ஞானக் கற்பனைகளில் படமாக்கப்பட்ட வேளையில் தரமாக எடுக்கப்பட்ட ஒரேபடம் இதுதப்படம். இந்தப்படத்தை இயக்கியவர் ஸ்ரான்லி குப்ரிக் கதை வசன கர்த்தா ஆர்தர், சி. கிளார்க் தான். இக்கதை ஒரு சிறுகதையாக The Sentional என்ற பெயரில் ஏற்கனவே எழுதப்பட்டிருந்தது. ஸ்ரான்லி கிப்ரிக்கின் வேண்டுகோளின் பெயரில் இது விரிவாக்கப்பட்டு திரைப்படமானது. அதே வேளையில் நூலாகவும் வெளியிடப்பட்டு இலட்சக்கணக்கான வாசகர்களால் பாராட்டப்பட்டது.

இந்த 2001 கதையின் தொடர்ச்சியாக 2010 ஒடிசி 2 என கிளார்கால் 1982 இல் எழுதப்பட்டது. இக்கதை கொழும்பில் வைத்தே எழுதப்பட்டது. இதில் உலகின் முதன் முதல் விண்ணில் நடந்த ரஷ்யரான அலெக்சேய் வியனோவ் சிறப்பாக குறிக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவால் 1977இல் ஏவப்பட்ட வொஜேயர் கலங்களின் கிரக ஆய்வுகளை மையமாக வைத்து எழுதப்பட்டது இக்கதை. இக்கதையிலும் ஒரு சர்வதேச குழுவை விண்பயணத்தை மேற்கொள்கின்றது. வியாழனின் உபகிரகங்கள் விளக்கப்படுகின்றன. வியாழனின் சந்திரன்களான உயிரினம் வாழும் எனக் கருதப்படும் யூரோப்பாமீது ஆய்வு என சிறந்த விளக்கங்களை இந்நூல் கூறுகின்றது. அத்துடன் கலிபோர்னியாவின் கம்யூட்டர் விஞ்ஞான பேராசிரியர் என்று டாக்டர் சிவசுப்பிரமணியம் சந்திரசேகரப் பிள்ளை என்பவரையும் குறிப்பிடுகின்றார்.

இன்று உலகின் எதிர்காலத்தைக் குறிப்பிடும் சர்வதேச மனிதரான ஆர்தர்சி. கிளார்க் இன்றல்ல சிறுவயதிலிருந்தே எதிர்கால விஞ்ஞானத்தில் விண்ணாய்வில் ஆர்வமுடையவராய் இருந்தார்.

## வாழ்க்கை

ஆர்தர் சி. கிளார்க் 1917 ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம்திகதி இங்கிலாந்தின் சோமசெற் என்னுமிடத்தில் பிறந்தார். சிறுவயதிலேயே விண்ணாய்வில் மிகுந்த ஆர்வமுடையவராய் இருந்தார். பத்துவயதில் இவரது ஆர்வம் கண்டு அவரது தந்தையார் வில்லைகளை வாங்கிக் கொடுத்தார். அவ்வில்லைகளைக் கொண்டு ஒரு தொலைநோக்கியை அமைத்து தினமும் சந்திரனை ஆராய்ந்து வந்தார். தன் பதின்மூன்றாம் வயதில் விஞ்ஞான அதிசயங்கள் என்ற விஞ்ஞானப்புனைக் கதைகள் படிக்க ஆரம்பித்தார். அதிலிருந்து விஞ்ஞான புனைக்கதைகள் ஆர்வம் தொற்ற உற்றார், உறவினர் மூலம் பல நாடுகளில் வெளியான விஞ்ஞானப் புனைக் கதைகளை வாங்கிப்படித்து தம் அறிவை வளர்த்தார். அக்கால விஞ்ஞானப் புனைக் கதைகள் பல ஆய்வுகளின் அடிப்படையிலே எழுதப்பட்டன. அதனால் அவை களைகளினூடு பல உண்மைகளை வெளிப்படுத்தும். ஆகையால் அவற்றைப் படித்து தம் அறிவை வளர்த்தார். (இவரும் ஆய்வுகளை மையமாக வைத்தே கதைகளை எழுதுகின்றார்.) தனது முதல் விஞ்ஞானப் புனைக்கதையை டௌட்டன் என்னுமிடத்தில் அமைத்த தனது பாடசாலை சஞ்சிகையில் வெளியிட்டார். தனது கல்வியை உயர்தரத்துடன் பணக்கஷ்டத்தினால் நிறுத்திவிட்டு வேலை தேடத் தொடங்கினார். தனது 19 ஆவது வயதில் கணக்கியலாளராக வேலை பார்க்கத் தொடங்கினார் கிளார்க்.

வேலை செய்யும் வேளையிலேயே விஞ்ஞானப் புனைக் கதைகளை வெளியிடும் பதிப்பக ஆசிரியர் குழுவுடன் சேர்ந்து விண்ணாய்வு பற்றிய ஆலோசனைகளை வழங்கினார். அக்குழு பிரிட்டனில் விண்ணாய்வு நிலையத்தின் ஆலோசனைக் குழுவாக நியமிக்கப்பட்டது. அக்குழுவால் பிரிட்டனின் விண்ணாய்வு நிலையம் நல்ல பல ஆலோசனைகளைப்பெற்றது. அக்குழு ஒரு கலத்தை (மூவர் செல்லக்கூடிய) சந்திரனிற்கு செல்லும்படியாக வடிவமைத்தது. இது பல பொருளாதாரத் தடையினால் செயற்றுப் போனது.

இப்பதிப்புக்குழுவின் உதவியுடன் 2ஆம் உலகயுத்த காலத்தில் கிங்ஸ் கல்லூரியில் பயின்று முதல்தர பௌதீக வியலறிஞராக வெளியேறினார். 1941 ஆம் ஆண்டு பிரிட்டனின் முதல் 'ரேடார்சமிக்ஞை' ஏற்பாளராகப் பணியாற்றினார். ரேடரை முதலில் புரிந்துகொண்ட பெருமை ஒரு விஞ்ஞானப் புனைக்கதையாசிரியரிடம் சேர்ந்தது.

1945 இல் தனது முதல் நூலாக தந்தியற்ற உலகம் (Wireless World) என்ற விஞ்ஞான நூலை எழுதினார். இதனை பிரிட்டன் வானொலி பத்திரிகைப் பிரிவு வெளியிட்டது. இந்த நூலே இன்றைய செய்மதித் தொடர்புகளுக்கு வித்திட்டது.

ஒரு செய்மதி பூமியிலிருந்து 22,000 மைல்கள் தொலைவிலிருந்துவானொலி, தொலைக் காட்சி செய்திப் பரிமாற்றத்தை நிகழ்த்தும். மணிக்கு 7000 மைல் வீதம் 24 மணி நேரத்தில் பூமியைச் சுற்றும் என்று அந் நூலில் கூறினார். செய்மதிகள் விண்ணிற்குச் செலுத்தப்படும் முன்பே (10 வருடங்களுக்கு முன்) தன் ரேடர் அனுபவங்களைக் கொண்டு தந்த இம் முடிவுகள் 20 வருடங்களின் பின் நிறைவேறியது.

1965 இல் அமெரிக்க தகவல் தொடர்பு பிரதமர் 'ஹம்பேட் ஹம்ரி' கிளார்க்கிற்கு அழைப்பு விடுத்தார். ஒரு தகவல் தொடர்பு செய்மதியை அமைக்க ஆலோசனை கேட்டார். அவரது ஆலோசனைப்படி முதல் தகவல் தொடர்புச் செய்மதியான 'இன்டல்சட்' அனுப்பப்பட்டது. இது 22,300 மைல்கள் தொலைவில் இயங்கியது. (ஒரு விஞ்ஞானப் புனைக் கதாசிரியரின் சக்தி இது) அதேபோல் சந்திரனுக்குச் சென்ற அப்பொலோ கலங்களை வழிப் படுத்தியவரும் இவரே.

கிளார்க் தனது முதல் விஞ்ஞானப்புனைக்கதை நாவலை 1950 இல் வெளியிட்டார். அதன் பெயர் ''கோள்களிற்கு பயணம்'' அன்று முதல் அவரது விஞ்ஞானப் புனை கதைகளை எழுதத் தொடங்கினார். இன்று உலகின் அதிக பணம் பெறும் விஞ்ஞானப்

> கிளார்க்கின் எந்த ஒரு நூலும் இன்று பத்து மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின்றன. பிளேபோய் முதல் நியூ சயன்ரிஸ்ட் வரையான உலகப் புகழ் பெற்ற இதழ்கள் இவரது கட்டுரைகளை வேண்டி நிற்கின்றன.

புனைக்கதாசிரியராகத் திகழ்கின்றார்.

அமெரிக்காவில்மணமுடித்த கிளார்க் தன் அமெரிக்க மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு இலங்கைக்கு வந்தார். தலைநகரான கொழும்பை ஒட்டிய கடற்பகுதியில் கடலாய்வு செய்து பல ஆண்டுகளை இங்கு கழித்தார். அவ்வேளை இலங்கையைப் பற்றி ''செரண்டிப் ஒரு பார்வை'' என்ற நூலை எழுதினார். அதில் இலங்கையின் கடல்வளத்தைப் பற்றி மக்களுக்கு விரிவாக எழுதி உள்ளார்.

அவர் இலங்கைக்கு வந்த வேளையில் அப்போதைய பத்திரிகைகளெல்லாம் கிளார்க் இலங்கையின் பிரஜா உரிமை பெற்றுத் தங்கிவிடப் போகிறார் என்று பரபரப்பான செய்திகளை வெளியிட்டன. ஏனெனில் அவரது வரவால் தம்நாடு பெருமையடையாதா என உலக நாடுகள் வேண்டிக் கொண்டிருந்தன. இன்றும் ஈழத்தில் எழுதப்படும் விண்ணாய்வுக் கட்டுரைகளில் இலங்கையை 2 ஆவது தாயகமாகக் கொண்ட ஆர்தர். சி. கிளார்க் என்றே குறிக்கப்படுபவர் இவர்.

விஞ்ஞானத்தின் எதிர்காலத்தைக் கூறும் கிளார்க் இன்றுவரை 28 விஞ்ஞானப் புனைக் கதைகளும் 2௫ விஞ்ஞானக் கட்டுரை நூல்களும் வந்துள்ளன. இன்னும் இனியும் விண்வெளித்திட்டங்கள் (அமெரிக்காவின்)கிளார்க்கின் கதைகளையும், கட்டுரைகளையும் மையமாக வைத்தே செயற்படுத்தப்படுகின்றன. இத்தகைய பெருமை கொண்ட நுண்மதியாளனான கிளார்க்கைப் பற்றி சர்வதேச அளவில் '5' நூல்கள் வெளிவந்துள்ளன. 500ற்கு மேலான கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டன.

அன்மையில் ரியாத்தில் அனைத்துலக விண்ணாய்வாளர்களை கூட்டிய மகாநாட்டில் கிளார்க் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இதைவிட விஞ்ஞான எழுத்திற்காக 1965இல் யுனெஸ்கோ கலிங்கப்பரிசையும், வெஸ்ரிங் இல்ல விஞ்ஞான எழுத்துப் பரிசையும் 1969 இல் பெற்றார்.

கிளார்கின் எந்த நூலும் இன்று பத்து மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகின்றன. பிளேபோய் முதல் நியூசயன்ரிஸ்ட் வரையான உலகப்புகழ்பெற்ற இதழ்கள் இவரதுகட்டுரைகளைவேண்டி நிற்கின்றன.

இன்றைய உலகின் எதிர்காலத்தை துணியும் பணி ஓர் எழுத்தாளனுக்கு கிடைத்தது உலக எழுத்துலகிற்கே ஒரு பெருமை. இன்று இலங்கை அரசின் விஞ்ஞான ஆலோசகர் இவர். இவரது பெயரால் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வு நிலையமே இயங்குகின்றது. வெளிநாட்டு செய்திகளை செய்மதிகள் மூலம் வாங்கி தொலைக் காட்சிக்களித்தல், ஆய்வுகள் செய்தல் போன்றவற்றை இவ்வாய்வு நிலையம் நிகழ்த்தி வருகின்றது. □

## சிறுகதை




எப்போது அடை மழை கொட்டுமோ? என்ற அளவுக்கு வானம் இருண்டு போய் இருந்தது. கொஞ்சநாட்களாகவே இப்படித்தான் கிண்ணியா கிராமம் முழுதும் விடிவதற்கு தாமதமாகிறது. திருக்கோணமலை நகரத்தையும் கிண்ணியா கிராமத்தையும் பிரிக்கும் அந்த கடல் பகுதி அமைதியாக இருந்தது. ஆனால் அங்கு மனித நடமாட்டத்திற்கு இராணுவ கெடுபிடிகளுக்கும் மட்டும் குறைவிருக்கவில்லை. நகரில் இருந்து கிராமத்திற்கு செல்பவர்களையும் கிராமத்தில் இருந்து நகரிற்கு செல்பவர்களையும் ஏற்றிச் செல்வதற்கென இரண்டு 'பாதைகள்' விடாமல் ஓடிக் கொண்டிருந்தன.

இந்திய இராணுவம் விலகிச் செல்வதற்கான நாட்கள் குறிக்கப்பட்டு இந்தியப்படையினர் கட்டம் கட்டமாக கிண்ணியா கிராமத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். அந்த படைவீரர்களின் முகங்களில் ஒன்றுமில்லாத ஒரு கடுகடுப்பு மேஜர் சர்மா கதறிக் கொண்டிருந்தான். இத்தனை நாட்கள் ஆடிய ஆட்டங்களுக் கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டதே, என்ற ஆவேசம். இந்திய ஆட்சி மாறுவது சகஜம் ஆனால் எப்படி இந்திய வெளியுறவுக் கொள்கையில் இப்படியான மாற்றம்? அதுவும் திருக்கோணமலை துறைமுகத்தையும் - எண்ணெய்க் குதங்களையும் விட்டு விலகிக் கொள்வதற்கு டில்லிக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது? அவனது கடுகடுப்புக்கு முன் அத்தனை வீரர்களும் நடுங்கிக் கொண்டிருந்தனர்.

மேஜர் சர்மாவின் விழிகள் எங்காவது தமிழ் இளைஞர்கள் நிற்கிறார்களா? என்றே தேடிக் கொண்டிருந்தது. இளைஞர்களைக் கண்டால் புலி, என்று பிடித்து போக முன்னர் தனது ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் அவன் மேல் காட்டி நகரில் உள்ள முகாமிற்கு இழுத்துச் செல்லலாமே என்ற நினைப்பு அவன் நெஞ்சம் முழுதும் நிரம்பி வழிந்தது.

சஞ்சய் மும்முரமாக இயங்கிக்கொண்டிருந்தான். மேஜர் சர்மா கிண்ணியா கிராமத்திற்கு வந்து ஒன்பது மாதங்களில் அவனது பழிவாங்கல்களும் - தேடுதல்களும் தமிழ் பேசும் மக்களின் மீதான ஆக்கிரமிப்பும் ஆலங்கேணி என்றும் தமிழ்ப்பகுதியில் ஒரு வெறியாட்டமே நடந்து கொண்டிருந்தது. பலவழிகளில் அவனை அழிக்கப் பார்த்தும் மக்களின் நலன் கருதி அந்தமுயற்சிகள் கைவிடப்பட்டன. ஆனால் நேற்று முடிவாகிவிட்டது மேஜாசர்மா கிண்ணியாவில் இருந்து திருமலை நகரமுகாம்மிற்கு செல்லக் கூடாது. அதற்குள் அவன் அழிக்கப்படவேண்டும். இல்லாவிட்டால் கிண்ணியாவில் பிடிபட்டு திருமலை நகரமுகாமிற்கு கொண்டு செல்லபபட்டிருக்கும் பல தமிழ்- முஸ்லிம் இளைஞர்களின் வாழ்க்கை முடிவடைந்து விடும். மேலிடத்து உத்தரவு வந்த அன்றிரவே மூன்று போராளிகள் ஆயத்தமாக நகருக்குள் சென்றுவிட்டனர். அதிகாலை சர்மாவின் 'ஜீப்' வருவதற்கு முன் சஞ்சய் அவர்களிடத்தே வரவேண்டும். ஆனால் - இங் சர்மா அவனுக்கு முன்னரே அங்கு போய் விடுவானோ என்ற நிலையில் அவசரம்- அவசரமாக இயங்கிக் கொண்டிருந்தனர். இந்திய இராணுவத்தினர்.

ஒருவாறு அந்த 'பாதையில்' ஏறிவிட்டான் சஞ்சய் நகரிற்கு தொழிலாளர்களை ஏற்றிச் செல்லும் கடைசி 'பாதை' அது சனம்நெருக்கியடித்துக் கொண்டிருந்தது. 'பாதை' கரையில் இருந்து நகரரத் தொடங்கவும் தனது ராணுவத்திற்கு உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்த சர்மாவும் இன்னும் மூன்று இராணுவத்தினரும் ஓடிவந்து ஏறிக் கொண்டனர்.

சஞ்சயின் மனது 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது இத்தனை வருடகால போராட்ட அனுபவத்தில் அவன் ஒன்றுமே இப்ப தடுமாறியதில்லை. கழுத்திலே மரணத்தை தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் அவர்களுக்கு உயிர் ஒரு பொருட்டல்லத்தான். ஆனால் தனது முடிவினால் தங்கள் முயற்சியின் முடிவுகள் திருமலைநகரத்து இராணுவ முகாம்களில் இருக்கும் பிடிபட்ட கிண்ணியா- - ஆலங்கேணி, தமிழ்முஸ்லிம் இளைஞர்களின் எதிர்காலம் எல்லாம் அவன் கண்முனால் நிழற்படமாக ஓடியது. மெல்ல குனிந்து பாதையில் உட்கார்ந்து கொண்டான். நிச்சயமாக அவனுக்கு தெரியும். சர்மா தன்னைக் கண்டால் சும்மா விடப் போவதில்லை. ஏற்கனவே பல இடங்களில் மோதுப்பட்ட அனுபவங்களும்- கைதிகள் பரிமாற்ற நிகழ்வுகளும் இவர்கள் மேல் ஒரு பசாசுத்தனமான அழிக்கும் வெறி சர்மாவில் குடிகொண்டிருந்தது.

பின்பகுதியில் ஏறிய சர்மாவும் மூன்று சீக்கிய இராணுவத்தினரும் முன்பகுதிக்கு வந்து கொண்டிருந்தனர். சஞ்சய் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தான்.

திடீரென்று அவனைச் சூழ இருட்டாக இருந்தது. அவனுக்கு பக்கத்தில் நின்ற அந்த இளம் பெண் அவனை மறைத்துக் கொண்டு நெருக்கமாக நின்றாள் அனைவருக்கும் திக்கென்றது. அங்கே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்ற பெண்களுக்கான மரபு ரீதியான குணம் இருக்கவில்லை. தங்கள் தாய்நாட்டிற்காக போராடப்போன அந்தவிடுதலை வீரனை காப்பாற்றவேண்டிய வீரமும் - மனிதாபிமானமும் நிரம்பி இருந்தது.

சஞ்சய்க்கு என்ன செய்வதென்றேபுரியவில்லை விடுதலைப் போராட்டதில் பெண்களின் பங்களிப்பு, அவர்கள் இயக்கத்தை பொறுத்தவரை சளைத்ததல்லத்தான ஆனால் இன்றைய நிலை அவனுக்கு என்னவோ செய்தது. அந்த இளம் பெண்ணுக்கு துணையாக பக்கத்தில் நின்றஇரண்டு முஸ்லிம் சகோதரிகளும் அவளுக்கருகே வந்து நின்று கொண்டனர்.

சர்மாவும் மூன்று சீக்கிய இராணுவத்தினரும் அவர்கள் நின்ற இடத்தருகே வந்து ஏதோ தமக்குள் புரியாத பாசையில் பேசிக்கொண்டு சிரித்தபடி வேறுபக்கம் சென்றுவிட்டனர்.

பாதை மெதுவாக கரையை அடைந்தது. சர்மாவும் இராணுவத்தினரும் கரையில் பாய்ந்து இறங்கி தமது சகாக்கள் இருந்த இடத்துக்குச் சென்றுவிட்டனர். 'பாதையில்' வந்த ஏனையவர்களும் மெல்ல மெல்ல இறங்கிக் கொண்டிருந்தனர். அந்த இளம் பெண் சஞ்சயின் அருகில் இருந்து விலகிக் கொண்டாள். மெல்ல எழுந்து கொண்ட சஞ்சய் அவளைப் பார்த்து கரங்களைக் குவித்து பாதையில் இருந்து இறங்கி மறைந்து மறைந்து நகருக்குள் செல்லும் வேளை அவனது கண்கள் ஏனோ பனித்திருந்தன. □




உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் ஒரு நாட்டின் அதிபதி இறந்து விட்ட சேதி அறிந்தால் —

'பக்கத்து வீட்டு பஞ்சவர்ணமும் செத்துப் போனான்தானே' — இது அவர்களின் அபிப்பிராயம்.

'நைல் நதி நீளமானது' என்றால், 'பறங்கியாற்றை விடவா?' — இதுவும் அவர்களின் அபிப்பிராயம் தான்.

சும்மா சொல்லக் கூடாது.

தேசப் படத்தைப் பார்த்தால் கண்டு கொள்ளலாம். வன்னிப் பிரதேசம் விசாலமானது என்பதை.

ஆனால்—

மனிதர்களினதும், அவர்களின் வாழ்க்கையும் மிகக் குறுகியது.

அடிப்படை அவலம் இன்றும் எல்லா இதயங்களுள்ளும் தேங்கியுள்ளது.

இங்கே ஒருவன் பூக்களை முகர ஆசைப்படமாட்டான் — காரணம்.

அவன் தோட்டத்தில் உள்ள மிளகாய்ச் செடிகளை மாடுகள் முகர்வதாய் அவன் மனசுக்குள் திரைப்படம் ஓடத் தொடங்கிவிடும்.

ரசிப்பதற்காக இங்கே எவரும் பயிர்செய்வதில்லை. காரணம் —

## மூலிகை வைத்தியம்

### நுரையீரல் நோய்களைக் குணப்படுத்தவல்ல மொசுமொசுக்கை இலை

ஆதிகால மக்கள் தனக்கோ மற்றவர்களுக்கோ ஏதாவது நோய்கள் ஏற்பட்ட போது, அதைப் பச்சிலைகளைக் கொண்டே குணப்படுத்திக்கொள்வது வழக்காக இருந்து வந்திருக்கிறது! தற்போது விஞ்ஞான ரீதியாக வைத்தியமுறை பலவாறாகப் பிரிந்து பச்சிலை மற்றும் இதர பொருள்களைக் கொண்டு மாத்திரைகள், ஊசி மருந்துகள் தண்ணீர் மருந்துகளை தயாரிக்கின்றனர். ஆதிகாலத்தில் இவ்வகையான மருந்துகள் இருந்ததில்லை. சிலவகைப்

திவிடக்கூடிய அற்புத ஆற்றலைப் பெற்றது. சாதாரண இருமல், சுவாசக்குழாய் சுவாசப்பைகளின் நுண் அறைகளில் ஏற்படும் இரணம், அழற்சி ஆகியவற்றை ஆற்றிவிடும் தன்மையுடையது. மேலும் சுவாசப்பைகளில் உண்டாகும் சளியை அகற்றி அதனை சுத்தம் செய்யும் தன்மை உடையது. இக்கீரையை உடுவர கப நோய்கள் நிவர்த்தியாகும்.

மனதில் அமைதியின்மை. கோபம் ஆகியவற்றைக் கூட ஒழித்துக்கட்டக்கூடியது, சளி இருமல், வரட்டு இருமல்,

உட்கொள்ளின் சுவாசகாசம்' ரத்தகாயம் சளியினால் வரக்கூடிய காய்ச்சல், மூக்கில் ஏற்படும் இரணம், மூக்கினால் எப்பொழுதும் ஒழுகிக் கொண்டிருக்கும் சளி, மூக்கு வாசம் நுகரும் சத்தியற்ற நிலை, நாக்கு ருசி அற்றுப் போதல் போன்றவை நிவர்த்தியாகும்.

இக்கீரையை சூரணமாக செய்து உட்கொண்டு வர நீண்டநாள்பட்ட எலும்புருக்கி நோய், காசநோய் இளைப்பு நோய் இரத்த, சுவாச, கபக்சநோய்கள் குணமாகி நோயாளிக்கு உடல் வலுவைக் கூட்டும்.

இக்கீரையை நாம் இலகுவாக இனம் கண்டு கொள்ளலாம். இக்கீரையின் அடிமுதல் கொடிகள், காம்புகள், இலை போன்ற எல்லா இடங்களிலும் மயிர்போன்ற அமைப்புக்கள் காணப்படுவதில் இருந்து அடையாளம் காண




# வெளிச்சம் வேண்டும்!

வன்னிக் கிராமத்தில் —

அதிகாலை வேளையில் ....

பறவைகளின் சப்தம் சங்கீதமாய் காதுகளுக்குள் நுழையும். மென் காற்றின் ஆதிக்கத்துக்குட்பட்டு, இலைகள் இசைமழை சிந்தும். கிழக்கு வானத்தை கிழித்தெழும் சூரியனின் பொற்கரங்கள் விழிகளைத் தழுவும்.

சுகம்! சுகம்!

பரந்த வயல் வெளியும், பச்சைப் பயிர்களைச் சுமந்திருக்கும் தோட்டங்களும் அழகானவை. மிக மிக அழகானவை.

இலைகளின் மேனியில் நிறைந்திருக்கும் பனித் துளிகளும், புழுதி நிலத்தில் மழை பொழிந்ததன்பின் பரவும் மண் வாசனையும் இனிப்பானவை.

குளமும், அதற்குள் முளைத்து வானத்தைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருக்கும் தாமரைப் புஷ்பங்களும், குளக்கட்டின் ஓரங்களில் நிமிர்ந்து ஆகாயத்தை நோக்கி கையசைத்துக் கொண்டிருக்கும் மகிழ மரங்களும் அற்புதமானவை.

ஆம்; அத்தனையும் இனிப்பு .... இனிப்பு!

ஆனால் —

மனிதர்களின் வாழ்க்கைதான் கசப்பு.

பனித் துளிகளை வானத்தின் கண்ணீர்த்துளிகள் என்று அர்த்தம் கொள்பவர்கள் தான் அதிகம்.

குயில்கள் இங்கே பசியினால் கூவுவதாகவே அபிப்பிராயமெடுக்கப்படுகிறது.

வாழ்க்கையை எங்கோ .... யாருக்கோ விற்பனை செய் விட்டு, சடலங்களாகவே பல உருவங்கள் நடமாடுகின்றன.

இறந்தகாலமும், நிகழ்காலமும் எதிர்காலத்தின் மீது விரக்தியையே விதைத்து விடுகின்றன.

இங்கே பலர் கண்ணீர் சிந்தாமல் சிரிக்கப் பழகி விட்டார்கள்.

வாழ்க்கை இவர்களை அந்நியப்படுத்திவிட்டு, ஓடுவது தெரியாமல் ஓடி.... ஓடி.... விளையாடுவார்கள்.

ஓர் அடையாளம் தெரியாத பாதையை நோக்கி இவர்களின் பாதங்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நகர்ந்து கொண்டிருக்கின்றன.

அநியாய இறந்து விட்ட செதி அறிந்தால் —

'பக்கத்து வீட்டு பஞ்சவர்ணமும் செத்துப் போனான்தானே' — இது அவர்களின் அபிப்பிராயம்.

'நைல் நதி நீளமானது' என்றால், 'பறங்கியாற்றை விடவா?' — இதுவும் அவர்களின் அபிப்பிராயம் தான்.

சும்மா சொல்லக் கூடாது.

தேசப் படத்தைப் பார்த்தால் கண்டு கொள்ளலாம். வன்னிப் பிரதேசம் விசாலமானது என்பதை.

ஆனால்—

மனிதர்களினதும், அவர்களின் வாழ்க்கையும் மிகக் குறுகியது.

அடிப்படை அவலம் இன்றும் எல்லா இதயங்களுள்ளும் தேங்கியுள்ளது.

இங்கே ஒருவன் பூக்களை முகர ஆசைப்பட மாட்டான் — காரணம்.

அவன் தோட்டத்தில் உள்ள மிளகாய்ச் செடிகளை மாடுகள் முகர்வதாய் அவன் மனசுக்குள் திரைப்படம் ஓடத் தொடங்கிவிடும்.

ரசிப்பதற்காக இங்கே எவரும் பயிர்செய்வதில்லை. காரணம் —

அறுவடையின் போது வெறும் பதரே வீட்டிற்கு வந்து விடும்.

ஒவ்வொரு ஆண்டும் வரும் தை மாதங்களில், இங்கே சூரியனுக்குப் பொங்கல் படைப்பது 'இந்த ஆண்டிலிருந்தாவது எமது வாழ்க்கைக்கு வெளிச்சம் தா!' என்று நான் எண்ணியதுண்டு.

வார்த்து வைத்திருப்பதற்குப் பதிலாக இங்கே பல மனிதர்களை வாழ்க்கை சிதைத்து வைததிருக்கிறது.

நெஞ்சுக்குள் சோகங்களை விதைத்து வைத்திருக்கிறது.

காயங்களை தமது ஆயுதங்கள் என்றும் பலவீனங்களை தமது பலம் என்றும் இங்கே பலர் அர்த்தப்படுத்தி வைத்திருப்பது வருத்தம் கொள்ளவைக்கிறது.

திசை தெரியாமல் — காற்றடிக்கும் திசை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மேகங்கள் போல வாழ்க்கை எது என்று தெரியாமல் இங்கே பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பயணப்பட வேண்டிய பாதைகள் சின்னப் பரப்பிற்குள் அடங்கிவிடுகின்றன.

கமல் படத்தைப் பார்த்து விட்டு வந்த ஒருவன் சொன்னான். 'ரஜனி இருந்திருந்தால் நிச்சயம் வில்லனுக்கு கைவைத்திருப்பார்.'

இந்த சினிமா நோய் வன்னியில் மட்டுமல்ல; ஈழத்தின் சகல பகுதிகளிலும் பீடித்திருப்பது பள்ளத்தை நோக்கி வாழ்க்கை சென்று கொண்டிருப்பதற்கான அத்தாட்சி.

இளைய இதயங்களே!

எமது சமுதாயம் சகதிக்குள் கிடந்து தத்தளிப்பதைப் பாருங்கள்.

சகதிக்குள் இருந்து எம்மை முதலில் நாம் மீட்டுக் கொள்வோம்.

மூடத்தனமான எண்ணங்களுக்கு கொள்ளி வைக்க எழுந்து விடுவோம்.

எமக்கென்று பாதைகளை அமைத்துக் கொண்டு பயணப்படத் தொடங்குவோம்.

எம்மைப் புறக்கணிப்பவர்களை நோக்கி போர் தொடுக்க எழுவோம்.

பரந்த மனோபாவத்தை எமக்குள் வளர்த்துக் கொள்வோம்.

இனி — மலரும் காலம் இனிப்பு எண்ணங்களை எமக்குள் இறக்குமதி செய்யும்.

நாம் இப் பூமியில் நின்று புன்னகைத்துக் கொள்ளப் பழகுவோம்.

இன்னும்...

---

ோ மற்றவர்களு போ ஏதாவது நோய்கள் ஏற்பட்ட போது, அதைப் பச்சிலைகளைக் கொண்டே குணப்படுத்திக்கொள்வது வழக்காக இருந்து வந்திருக்கிறது! தற்போது விஞ்ஞான ரீதியாக வைத்தியமுறை பலவாறாகப் பிரிந்து பச்சிலை மற்றும் இதர பொருள்களைக் கொண்டு மாத்திரைகள், ஊசி மருந்துகள் தண்ணீர் மருந்துகளை தயாரிக்கின்றனர். ஆதி காலத்தில் இவ்வகையான மருந்துகள் இருந்ததில்லை. சிலவகைப் பச்சிலைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை தினசரி ஆகாரத்துடன் சேர்த்து உண்டு நோய்களை குணப்படுத்தி உள்ளனர்.

# நுரையீரல் நோய்களைக் குணப்படுத்தவல்ல மொசுமொசுக்கை இலை

இந்தவகையிலே எமது கிராமபுறங்களில் கவனிப்பாரற்று தேடுவாரற்று இருக்கும் கீரைகளில் மொசு மொசுக்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இந்தக் கீரை நுரையீரல் கோளாறுகளைக் குணப்படுத் ...லைப் பெற்ற . சாதாரண இருமல், சுவாசக்குழாய் சுவாசப்பைகளின் நுண் அறைகளில் ஏற்படும் இரணம், அழற்சி ஆகியவற்றை ஆற்றி விடும் தன்மையுடையது. மேலும் சுவாசப்பைகளில் உண்டாகும் சளியை அசற்றி அதனை சுத்தம் செய்யும் தன்ம உடையது. இக்கீரையை உடுவர கப நோய்கள் நிவர்த்தியாகும்.

மனதில் அமைதியின்மை. கோபம் ஆகியவற்றைக் கூட ஒழித்துக்கட்டக்கூடியது, சளி இருமல், வரட்டு இருமல், இரும்புவலிகள் போன்றவற்றையும் அகற்றச்செய்யும் நீண்ட நாளைய நோய்களால் பீடிக்கப்பட்டு தளர்ந்து போன உடலுக்கு பலத்தைக் கொடுக்கும் டானிக்காகவும் (Tonic) உதவுகிறது.

இக் கீரையை சூரணம் செய்தும், உணவுவகைகளோடு சேர்ந்து பக்குவப்படுத்தியும் உண்ணலாம். இக்கீரையை ஆய்ந்தெடுத்து ஊறவைத்த புழுங்கல் அரிசியுடன் சேர்த்து மாவாக்கி அதில் இட்லி, தோசை, அப்பம் போன்ற உணவுகளை செய்து நாள்தோறும் உணவாகக் கொள்ளலாம். இவ்வாறு ...

...ரத்தகாயப் ...ளியினால் வரக் கூடிய காய்ச்சல், மூக்கில் ஏற்படும் இரணம், மூக்கினால் எப்பொழுதும் ஒழுகிக் கொண்டிருக்கும் சளி, மூக்கு வாசம் நுகரும் சத்தியற்ற நிலை, நாக்கு ருசி அற்றுப் போதல் போன்றவை நிவர்த்தியாகும்.

இக்கீரையை சூரணமாக செய்து உட்கொண்டு வர நீண்டநாள்பட்ட எலும்புருக்கி நோய், காசநோய் இளைப்பு நோய் இரத்த, சுவாச, கப கசநோய்கள் குணமாகி நோயாளிக்கு உடல் வலுவைக் கூட்டும்.

இக்கீரையை நாம் இலகுவாக இனம் கண்டு கொள்ளலாம். இக்கீரையின் அடிமுதல் கொடிகள், காம்புகள், இலை போன்ற எல்லா இடங்களிலும் மயிர்போன்ற அமைப்புக்கள் காணப்படுவதில் இருந்து அடையாளம் காணலாம். குரங்குக்கு தலைமுதல் வால்வரை அடர்த்தியான ரோமம் காணப்படுவது போல இக்கீரையிலும் காணப்படுவதால் இக்கீரையை 'இருகுரங்கினாக' என்ற பரிபாஷையில் சித்தர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இக்கால நாகரிகத்தை கண்ட மக்கள் இக்கீரையை மட்டமாக நினைத்து அலட்சியப்படுத்தி ஒதுக்கித் தள்ளி விடுகிறார். எனவே மேற்கூறப்பட்ட மருத்துவ உபயோகங்களை அறிந்து இக்கீரையை தினமும் நாம் உணவோடு உண்டு வரலாம்.

— ந. ஜெயராஜா □

---

## வைரவரிகள்

சுத்தமான வீரம், சுத்தமான மானஸ்தனுக்கு மட்டுமே வரும். அதாவது வீரத்தின் விளைநிலம் மானம் என்பதாகும்.

— இரேக்க மொழி

பூமிக்குத் தெரியும்
சாமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலமை-
அந்த
சாமி மறந்தாலும்
பூமிதந்திடும்
தகுதத பலனை...

— பட்டுக்கோட்டை

அண்ணாந்து
பார்க்கின்ற
மாளிகை கட்டி
அதனருகினில்
ஓலைகுடிசை கட்டி
பொன்னான-
உலகென்று
பேருமிட்டால்-இந்த
பூமிசிரிக்கும் - அந்த
சாமி சிரிக்கும்...

— கண்ணதாசன்

---

## "கோணர் கிக்"

284 சதுர அடி வீடுகளைக் கட்டுங்கள், அவ்வாறு கட்டினால் தான் நாம் உங்களுக்கு 15 ஆயிரம் ரூபாய் புனர்வாழ்வு நிதியாகத் தருவோம் - கேட்கப்பட்டிருப்பவர்கள் தமது வீடுகளை முற்றாக இழந்த வவுனியா சின்னத் தம்பனை மக்கள் - கொடுப்பவர்கள் புனர்வர்ழ்வு அமைச்சினர்.

ஒரு சதுர அடி வீடு கட்டுவதற்கு 300/- ரூபா தேவைப்படுகின்றது என இதில் அனுபவம் வாய்ந்த கட்டிடத் தொழிலாளி சொன்னார். 284 சதுர அடிக்கு 85200/- ரூபா தேவைப்படும் ஒன்றும் இல்லாத இந்த மக்கள் 284 சதுர அடி கட்ட எங்கு போவார்கள்? 284 சதுர அடி கட்டி முடிக்கு முன்பு த்மக்கு 'ஆறடி விதி' வந்து விடுமோ என அவர்கள் "ஈழநாதம்" பத்திகையாளரைக் கேட்டனர்! பதில்.........??

- அங்கதன்



## அன்னை பூபதி
## ஓர் அறக் காவியம்

- பாண்டியூரன்

எங்கள் மண்ணிலே
இந்தியக் கூலிகள் ஏன் நுழைந்தனர்...?
எங்களைத் தின்னவா !
தங்கமாம் தமிழ் ஈழ விடுதலைத்
தாகத் தீயின் இளைஞர் பொசுங்கிட...
சங்கை யுள்ளவர் தாய்க்குலம்
என்பதைத்
தரணி யெங்கணும் சாற்றுந் தமிழச்சி
எங்களின் இதயம் அவள் நாமமே
ஈழமெங்கணும்...
அன்னவள் தீபமே !

பொன்னெழுத் திலோர் காவியம்
பூபதிப் பூவையென்று பொறித்தவள் !
தாய்க்குலம்
மண்ணில் மேம்பட வைத்தவள் !
வேங்கையின் மைந்தர் நெஞ்சில்
மறக்கனல் மூட்டினாள் !
அன்னை தன்னை நினைவதோர் வேளையா...?
ஆர் மறந்தனர் பின்னை நினைந்திட
கண்ணை விற்றபின்...
ஓவியக் காட்சியா...?
காலன் வந்தபின் காதலின் மாட்சியா...?

காந்தியத்தைக் கடைச் சரக்காக்கிய
கண்ண விந்தவர் கண்முன்
சரித்திர மாந்தராகிய மாதர் திலகமே !
மண்ணின் மானம்....
உன் மானமென்றாக்கினாய் !
சாந்தி எங்களின் மண்ணில் தறிபட,
தாய்க்குல மடி தீயில் தணன்றிட
ஏந்தும் ஆயுதமும்... எரி நெஞ்சமும்
எங்கள் அஞ்சலிக் காணிக்கை யாக்கினோம் !

வீரவேங்கை திலீபன்
நம் வேந்தனை
வேள்வித் தீயிலே வீழ்ந்தநெய் யாக்கிய
தீரம் எம்மைக் கலக்கிட...
தேறுமுன் தெய்வமாகித் திணறவைத்தாய்
அம்மா !
பார வேலினை ஏந்திடும் பாலனை
பாய்புலி என ஆக்கும் தமிழச்சி
ஆருமில்லை யம்மா !
அன்னை பூபதியன்றி (இம்) மண்ணில்
ஆரை நினைவதோ...?

## நூல் விமர்சனம்

# தரிசனம்

**நூல்:** புதியதோர் உலகம் செய்வோம்
**விடயம்:** கவிதை
**எழுதியவர்:** புத்தெழில் மு. திருஞானசேகரம்

மறைந்த திருவாளர் மு. திருஞான சேகரம் யார்? அவர் ஆசிரியர். மாணவர் கல்வியில் அக்கறை உள்ள தனிப் பயிற்சி நிறுவன ஆசிரியர். அத்துடன் 'புத்தெழில்' என்னும் கலை இலக்கிய ஏட்டுக்கும் ஆசிரியர். தமிழர்தம் கலைகளும் தமிழ் இலக்கியமும் புதிய எழில் பெறவேண்டும் என்பது அவருடைய இலட்சியமாக இருந்தது.

அவர் இயற்றிய ஒன்பது ஆக்கங்களைக் கொண்ட 'புதியதோர் உலகம் செய்வோம்' என்னும் வெளியீடு. விடுதலைப் புலிகளின் பிரசார வெளியீட்டு வாரியம் இந்தப் புத்தகத்தைப் பிரசுரித்திள்ளது.

இந்தக் கவிதைகளிலே திருஞானசேகரம் என்ன சொல்லுகிறார்? எவற்றை உணர்த்துகிறார்? இந்தப் படைப்புகளின் உள்ளடக்கப் பெறுமானம் யாது? மேற்படி வினாக்களுக்கு விடையாகக் குறிப்புரைகள் சிலவற்றை இங்கு தருவோம்.

நம் நாட்டில் நிலவும் ஒடுக்கலும் சுரண்டலையும் கவிஞர் கடுமையாக எதிர்க்கிறார். அவை ஒழிக்கப்படல் வேண்டும். விடுதலை நிலைநாட்டப்படல் வேண்டும். இதுவே புத்தெழிலாரின் இதய வேட்கையா உள்ளது.

இங்குள்ள சுரண்டலும் ஒடுக்கலும் இரண்டு விதமான வடிவங்களை எடுத்துள்ளன. ஒன்று இன மேலாதிக்கம்; மற்றது வர்க்க மேலாதிக்கம். மேலாதிக்கத்தின் இந்த இரண்டு வடிவங்களுக்கும் எதிரியாக நின்று குரல் தருகிறார் திருஞானசேகரம்.

இனமேலாதிக்க எதிர்ப்புப் பல வழிகளில் வெளிப்படுகிறது.

ஒன்று- போராளிகளைப் போற்றுதலும் வியத்தலும். ''விடுதலை வேள்வியல்/ குருதி சொரிந்து மடிந்த/ புனிதவுடல்கள்/ மணங்கமமுஞ் சந்தன மரங்கள்'' என்பது கவிஞரின் கணிப்பு.

இரண்டு - அடிமைத் தனத்தை நிராகரித்தல். 'விடுதலை தவறிக் கெட்ட' அடிமை நாட்டிலே வீசும் தென்றலைக் கூட வேண்டாம் என்று வெறுத்துக் தள்ளுகிறார், புத்தெழிலார். ஏன்? அந்தத் தென்றற் காற்று. சுதந்திரக் காற்று, இல்லையாம். அடிமைத் தனத்தின் நாற்றம் வீசும் அசுத்தக் காற்று, வெறுக்கத் தக்க தென்பது கவிஞரின் உள்ளக் கிடக்கை அவர் பாடுகிறார்- ''தென்றலே என்னைத் தீண்டாதே- உனக்கும் கூடக் சுதந்திரம்- இல்லை- சொந்த மண்ணில் நடக்கக்கூட- வந்தவன் தானே அனுமதிக்க வேண்டும் ........ மந்தைக் கூட்டம்போல்- பத்துடன் ஒன்றாய்க் கூடி நடகம் பாழ்பட்ட மனது மறுக்கிறதே சுதந்திர பூமியில்- சுதந்திரம் காற்றைச் சுவாசிக்க- இதயம் ஏங்குதே.'' 'எந்நாளோ!' என்னுங்கவிதையில், ''...... நித்தமும் பம்பரமாய்ச் சுற்கிறது- நம் மண்ணின் காவல் தெய்வங்கள்- சுதந்திரம் பெருமூச்சு விடும் நாள் எந்நாளோ?' என்று கேட்கும் போது கவிஞரின் அடிமைத் தன நிராகரிப்புக் குரலை நாம் தெளிவாக இனங்கண்டு கொள்ளுகிறோம்.

புத்தெழிலாரின் இனமேலாதிக்க எதிர்ப்பு அடிமைத் தனத்தை நிராகரிப்பதுடன் சுதந்திரத்தை வரவேற்கிறது: விடுதலை வேட்கையை உறுதியாகப் பற்றிச் கொள்ளுகிறது.

அடிமைத் தனத்தை நிராகரித்து, விடுதலையை வரவேற்கும் புத்தெழிலார், அந்நியர்கள் இந்த மண்ணைவிட்டு ஓட வேண்டும் என்ற வேட்கையையும் வெளியிடத் தவறவில்லை '' வந்தவனும் போனவனும் - ஏறிச் சவாரிசெய்ய- -முதுகை வளைத்துக்கொள்ள மனிதவுரு மந்தைகளே......- நும்மில் சவாரி செய்யும்- மட்டி மடையர் எல்லாம்- மண் கவ்வ மாட்டாரோ:

இந்த- மண்ணை விட்டு ஓடாரோ? ''யார் இந்த மட்டி மடையர்கள்? உள் நாட்டின் அந்நியர்களையும், அமைதி காக்க என்று சொல்லிக் கொண்டு இங்கு வந்து நுழைந்த வெளிநாட்டு அந்நியர்களையும் சேர்த்தே கவிஞர் சாடுகிறார். என்று கொள்ளுதல் வேண்டும்.

புத்தெழிலாரின் படைப்புகளில் ஒன்று '' மகிழ்ச்சியைக் கொடுத்துடுமோ?' என்பது தாய் மண்ணில் வாழ்ந்திடாமல் தப்பியோடி வெளிநாட்டு போகிறவர்களையும் திருஞானசோகரம் விமர்சனம் செய்துள்ளார். அவர்கள். சுண்டிப் பிழைப்பதற்கர்கத்தான் அந்நியமண் போனார்கள் என்பது புத்தெழிலாரின் நிலைப்பாடாகும். மண்ணின் மைந்தர்கள் விடுதலையை நேசித்து நித்தித்தம் மரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் வேளையிலே பிச்சை ஓடேந்தி, பணம், நாடி பறந்து ஓடுகிறவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள் அல்லர் என்பது கவிஞர் கொள்கை.

புத்தெழிற் கவிஞரின் இன மேலாதிக்க எதிர்ப்பு உணர்வுகள் அனைத்துக்கும் அடிநாதமாக அவருடைய அஞ்சாமை அமைகிறது ''நெஞ்சுக்கு நேரே துப்பாக்கி நீளினும்- அஞ்சிடோம் இனித் துஞ்சிடோம் ......'' என்று பாடியவர் திருஞானசேகரம். அவர் ' மாவீரர்களுக்கு' அஞ்சலி செலுத்துதற்கென்று இந்தக்கவிதைகளைச் சேகரித்துக் கொண்டு அச்சகம் செல்லும் வழியிலே துரோகத் துப்பாக்கி அவர் உயிரைப் பறித்து விட்டது. அவ்வாறு உயிர் துறந்த ஒரு தேசத் தொண்டருக்கு, விடுதலைப் புலிகள் சார்பிற் செய்யப்பட்டதோர் அஞ்சலி தான் இந்தப் புத்தக வெளியீடு என்று கொள்ளுதல் வேண்டும்.

தொகுத்துச் சொல்வதானால், புத்தெழிலாரின் இனமேலாதிக்களதிர்ப்பு(i) போராளிகளைப் போற்றுதலும்வியத்தலும் (ii) அடிமைத்தனத்தை நிராகரித்தல் (iii) விடுதலையை வரவேற்றல் (iv) உள் நாட்டு / வெளிநாட்டு அந்நிய ஆக்கிரமிப்பாளரை வெளியேற்ற வேண்டும் எனனும் வேட்கை (v) தாயகத்தைத் துறந்து வெளிநாட்டிற் பிழைப்பு நடத்துவோரை விமரிசித்தல் (vi) அஞ்சாமை என்னும்ஆறு வழிகளில் வெளியாகியுள்ளது என்று கூறலாம்.

இத்துடன் வர்க்க மேலாதிக்க எதிர்ப்பும் புத்தெழிலாளரின் இதயநாதமாக இருந்துள்ளமையை அவதானித்தல் வேண்டும். இப்போது வெளியாகியுள்ள புத்தகத்தின் பெயர் 'புதியதோர் உலகம் செய்வோம்' என்பது. இதே தலைப்பில் அமைந்த கவிதையில் வர்க்க மேலாதிக்க எதிர்ப்பை கவிஞர் காட்டுகிறார்.

இவர் கருதும் புதிய உலகம் எப்படிப்பட்டது?

'மாடாய்உழைத்து ஓடாய்ப் போன - கறுத்தமேனி கேள்விக்குறியாய் வளைந்துபோக- உடலைத் தூக்கி நடக்க முடியாது ஊதிப்பருத்த - முதலைக் கூட்டம். சுரண்டிக் கொழுக்கும்' நிலைமை அற்றுப்போன ஓர் உலகமே இவர் காண விழையும் புதிய உலகம்.

'பாழ்பட்டுப் போன பண்டைப் பண்பால் - தாழ்வுற்ற வாழ்வைத் தினமும் வாழும்- மாதர்தாமும் தம்மைச் சுற்றியபாச விலங்கை–உடைத்து' எறிந்த ஓர் உலகமே இவர் காண விழையும் புதிய உலகம்.

இந்த வெளியீட்டின் இறுதிக் கவிதையாக விளங்குவது 'புதிய பாதை.'

'நாளை இந்த உலகம் மாறும்/புதியதொரு தலைமை தோன்றும் - அதனால் / வாழ்வு ஒழிந்து போகும் - அதற்கு / உழைக் குங்கரங்களை உயரத் தூக்குவோம்/ புதிய பாதையை நாங்கள் வகுப்போம்.'

## முருகையன்

(1) இன மேலாதிக்கம் (2) வர்க்க மேலாதிக்கம் ஆகிய இரண்டும் ஒழிய வேண்டும். அடிமைத்தனம் அழிய வேண்டும் விடுதலை நிலை நாட்டப்பட வேண்டும்; ஒடுக்கலும் சுரண்டலும் இல்லாத சமுதாயம் உருவாக வேண்டும். இவையே புத்தெழிற் கவிஞர் உணர்த்தி நிற்கும் எண்ணங்கள்.

புதிய தலைமைக்கு உரிய திசை நெறிகளைச் சுருங்கிய வடிவிற் கூறிவிடும் ஒரு முயற்சியின் அடையாளமாக இந்தப் புத்தகம் உள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரசார வெளியீட்டு வாரியம் இதனை வெளியிட்டுள்ளது பொருத்தமானதே. □

## ரொம்மியின் சாதனை

ரொம்மி சுகாட்டோவுக்கு நாற்பது தடவைகள் பாம்புகள் கடித்தன. நூறு வித நச்சுப் பாம்புகளுடன் 44 நாட்கள் 2.5X2 மீட்டர் கண்ணாடிப் பெட்டியில்

''ஏன் உன் தம்பி அழுகிறான்?''
''அவன் சற்று முன்னர் மேல் மாடியிலிருந்து வந்தான், நடக்காமல்.''
□

## அடுத்த பேச்சாளர்

அவருடைய நீண்ட நேரச் சொற்பொழிவை கேட்கப் பொறு

இறைச்சி ருசி உணவாகக் கொள்ளப்பட்ட போதும், திபெத்திய மதம் நாய்களை கொல்வதற்கும் உண்பதற்கும் தடைவிதிக்கிறது.
□

## 1171.....

'ஐ லவ் யூ' வாக்கியம் இப்போ பழையதாய்விட்டது. இதற்குப் பதி

உங்களுக்கு ஒரு மழலைச் செல்வன் இருக்கிறானா? அன்னையாக உங்களால் இதுவரைக்கும் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லையா? இதோ மகாகவி ரவீந்திரநாத் தாகூர் உங்களுக்கு அவனைப் புரியவைக்கிறார். எத்துணை கள்வன்தான் உங்கள் செல்வன்.

## எத்துணை கள்வன்தான் இக்குழந்தை!

காந்தியத்தைக் கடைச் சரக்காக்கிய
கண்ணை விந்தவர் கண்முன்
சரித்திர மாந்தராகிய மாதர் திலகமே!
மண்ணின் மானம்....
உன் மானமென்றாக்கினாய்!
சாந்தி எங்களின் மண்ணில் தறிபட,
தாய்க்குல மடி தீயில் தணன்றிட
ஏந்தும் ஆயுதமும்... எரி நெஞ்சமும்
எங்கள் அஞ்சலிக் காணிக்கை யாக்கினோம்!

வீரவேங்கை திலீபன்
நம் வேந்தனை
வேள்வித் தீயிலே வீழ்ந்தநெய் யாக்கிய
தீரம் எம்மைக் கலக்கிட...
தேறுமுன் தெய்வமாகித் திணறவைத்தாய்
அம்மா!
பார வேலினை ஏந்திடும் பாலனை
பாய்புலி என ஆக்கும் தமிழச்சி
ஆருமில்லை யம்மா!
அன்னை பூபதியன்றி (இம்) மண்ணில்
ஆரை நினைவதோ...?

தாயகத் தமிழீழப் புலிக்கொடி
தரணி யெங்கணும் பட்டொளி வீசிடும்!
கோயில் ஆயிர கோடி
எழுப்பினும்,
குடியிருந்த குடில் ஒரு பூபதித்
தாயை வெல்வதோர்
கோயில் அதாகுமோ?

தாளிலே மலர் சாத்தி வணங்கினோம்
சேய்கள் ஆயிரகோடி
தமிழினம் சேர்ந்துன் வீரத்
தியாகத்தைப் பாடினோம்! □

## புத்திஜீவிகள்

- அந்த ஊரில் பேராசிரியர் ஒருவர் விரிவுரை நிகழ்த்த வந்திருந்தார்.

- அவருடைய விரிவுரையைக் கேட்க ஒரு மனிதன் தொடர்ச்சியாகச் சென்றான்.

- விரிவுரைகளின் முடிவில் அவற்றினை முழுமையாக மனனஞ் செய்திருந்த அந்த மனிதன் பேராசிரியரைச் சந்தித்து-

''என்னாலும் உங்களைப்போன்று விரிவுரை நிகழ்த்தமுடியும்'' - என்றான்.

- பின்னர் பேராசிரியரைப் போன்று உடையணிந்து வகுப்பொன்றில் விரிவுரையை நிகழ்த்திக் காட்டினான்.

- மாணவர்கள் அதிசயித்து மெய்மறத்து போயினர். சந்தோஷத்தால் கரகோஷம் செய்தனர்.

- இறுதியாக, கேள்விநேரத்தின் போது மாணவன் ஒருவன் விரிவுரை நிகழ்த்தியவரிடம் கேள்வி ஒன்றினைக் கேட்டான்.

- விரிவுரை நிகழ்த்தியவருக்கு தர்மசங்கடமான நிலை - வினாவுக்கு விடை தெரியவில்லை. இருப்பினும் பின்வருமாறு கூறி சமாளித்துக் கொண்டான்.

''இப்படிச் சுலபமான கேள்வியையா என்னைக் கேட்பது.''

□ **இக்கதையைக் கூறியவர் கலிபோர்னியா தொழில் நுட்பக் கல்லூரிப் பேராசிரியர் வில்லியம் மௌலர்.**

புத்தெழிலாரின் இதய வேட்கையா உள்ளது.

இங்குள்ள சுரண்டலும் ஒடுக்கலும் இரண்டு விதமான வடிவங்களை எடுத்துள்ளன. ஒன்று இன மேலாதிக்கம்; மற்றது வர்க்க மேலாதிக்கம். மேலாதிக்கத்தின் இந்த இரண்டு வடிவங்களுக்கும் எதிரியாக நின்று குரல் தருகிறார் திருஞானசேகரம்.

நித்தமும் பம்பரமாய்ச் சுற்றுகிறது– நம் மண்ணின் காவல் தெய்வங்கள்- சுதந்திரம் பெருமூச்சு விடும் நாள் எந்நாளோ?' என்று கேட்கும் போது கவிஞரின் அடிமைத்தன நிராகரிப்புக் குரலை நாம் தெளிவாக இனங்கண்டு கொள்ளுகிறோம்.

புத்தெழிலாரின் இனமேலாதிக்க எதிர்ப்பு அடிமைத்தனத்தை நிராகரிப்பதுடன் நியமண் போனார்கள் என்பது புத்தெழிலாரின் நிலைப்பாடாகும். மண்ணின் மைந்தர்கள் விடுதலையை நேசித்து நித்தம் மரணத்தைத் தழுவிக் கொண்டிருக்கும் வேளையிலே பிச்சை ஓடேந்தி, பணம், நாடி பறந்து ஓடுகிறவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள் அல்லர் என்பது கவிஞர் கொள்கை.

புத்தெழிற் கவிஞரின் இனக்கியுள்ளது என்று கூறலாம்.

இத்துடன் வர்க்க மேலாதிக்க எதிர்ப்பும் புத்தெழிலாளரின் இதயநாதமாக இருந்துள்ளமையை அவதானித்தல் வேண்டும். இப்போது வெளியாகியுள்ள புத்தகத்தின் பெயர் 'புதியதோர் உலகம் செய்வோம்' என்பது. இதே தலைப்பில் அமைந்த கவிதையில் வர்க்க மேலாதிக்க எதிர்ப்பை கவிஞர் காட்டுகிறார்.

புதிய தலைமைக்கு உரிய திசை நெறிகளைச் சுருங்கிய வடிவிற் கூறிவிடும் ஒரு முயற்சியின் அடையாளமாக இந்தப் புத்தகம் உள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரசார வெளியீட்டு வாரியம் இதனை வெளியிட்டுள்ளது பொருத்தமானதே. □

## ரொம்மியின் சாதனை

ரொம்மி சுகாட்டோவுக்கு நாற்பது தடவைகள் பாம்புகள் கடித்தன. நூறு வித நச்சுப் பாம்புகளுடன் 44 நாட்கள் 2.5X2 மீட்டர் கண்ணாடிப் பெட்டியில் வாழ்ந்து சாதனை படைத்து கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்ற சுகாட்டோ தினமும் ஐந்து நிமிடங்கள் வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டான். பாம்புகளுடன் இருந்தே உணவுண்டான். பொழுதுபோக்காக அவனுக்கு வழங்கப்பட்ட இன்னிசைக்கேற்ப சில பாம்புகள் நடனமாடின. என்னுடைய உடல் நீலமும் கறுப்புமாக மாறிவிட்டது. நாம் மிருகங்களை நேசிக்கவும் புரிந்து கொள்ளவும் முடியுமெனில் அவை எம்முடன் அன்புடன் பழகும் என்று ரொம்மி பத்திரிகையாளரிடம் கூறினான்.

□

அவர் - உங்கள் மகன் என்மீது ஒரு கல்லை வீசினான்...
இவர் - அது உங்கள்மேல் பட்டதா...?
அவர் - இல்லை...
இவர் - அப்படியென்றால் அது என் மகனில்லை...

□

டொக்ரர் - என் கடமை நேரம் தெரியாதா உனக்கு? அகால வேளையில் தொலைபேசியில் கூப்பிடலாமா...?
நோயாளி - தெரியும் சார்...... ஆனால் என்னைக் கடித்த பாம்புக்கு தெரியாது....

□

## பனையில் 'ஆம்ஸ்'

வீட்டைச் சோதித்து விட்டு பின்புறம் போன இந்திய இராணுவத்தினர் பனைகளை நிமிர்ந்து பார்த்தனர்.

ஒருவன் கேட்டான்-அது என்ன கிரனேட்டுக்களா...?

வீட்டுக்காரி பதிலளித்தாள் — ''அது பனங்காய்''
சிப்பாய் கேட்டான் — ''அங்கே ஆம்ஸ் இருக்கா...''
வீட்டுக்காரி -
''ஏறிப்பாருங்க...''

□

''ஏன் உன் தம்பி அழுகிறான்?''
''அவன் சற்று முன்னர் மேல் மாடியிலிருந்து வந்தான், நடக்காமல்.''

□

## அடுத்த பேச்சாளர்

அவருடைய நீண்ட நேரச் சொற்பொழிவை கேட்கப் பொறுமையில்லாது, சபையோர் ஒவ்வொருவராக வெளியேறிக்கொண்டிருந்தனர்.

அவர் பேச்சை முடித்தபோது எஞ்சியிருந்தவர், அருகில் கதிரையில் இருந்த ஒருவர் மட்டுமே.



பேச்சாளர் அமரும்போது கேட்டார் - ''நீங்கள் மட்டும் தங்கியிருந்த காரணம் என்ன?''

''நான்தான் அடுத்த பேச்சாளன்'' என்றார் அவர்.

□

## திபெத்தியப் பண்பு

திபெத் உலகில் வறிய நாடுகளில் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அவர்கள் கட்டாக்காலி நாய்களை பேணிப் பாதுகாக்கிறார்கள். லாசூரில், சமீபத்தில் தான் ஒரு 'நாய்கள் ஹோட்டல்' திறக்கப்பட்டது. 10,000 கட்டாக்காலி நாய்களில் 400 நாய்களுக்கு இங்கே இடமளிக்கப்பட்டது. ஆசியாவின் பல பாகங்களில் நாய் இறைச்சி ருசி உணவாகக் கொள்ளபபட்ட போதும், திபெத்திய மதம் நாய்களை கொல்வதற்கும் உண்பதற்கும் தடைவிதிக்கிறது.

□

## 1171.....

'ஐ லவ் யூ' வாக்கியம் இப்போ பழையதாய்விட்டது. இதற்குப் பதிலாக கம்பியூட்டர் ரீதியாக, 1171-25310-11721 என்ற எண்களைப் பயன்படுத்தக் கண்டு பிடித்துள்ளார் இந்திய எழுத்தாளரான கே. எஸ். கோபாலகிருஷ்ணா.

□

## இருட்டில் அமைச்சர்

முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங், மின்சாரத் தொழிலாளர் மாநாடு ஒன்றின் போது பேசுகையில் கூறியது:

சனத் தொகை வளர்ச்சியைத் தடுக்க வேண்டுமானால் ஒவ்வொரு கிராமத்திற்கும் மின்சார வசதி செய்யப்பட வேண்டும். மின்சாரம் இல்லையென்றால் ஒருவர் ஒரு புத்தகத்தை வாசிக்கவோ வேறு வேலைகள் செய்யவோ முடியாது...... □

**தொகுப்பு: எஸ்.பி.கே.**

## சிந்தனைப் புனம்....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னான். ஒழுக்கமற்றவனுடைய வாளோ, நாவோ, பேனாவோ அறிவோ வலிமை பெறாது. வலிமை பெற்றாலும் வெற்றி பெறாது. வெற்றி பெற்றாலும் நிலைத்து நிற்காது என முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் குறிப்பிட்டார்.

ஆகவே ஒழுக்கமே உயர்ந்தது. ஒழுக்க முடையவரே நற்குடிப் பிறந்தோர்கள் ஆகும். இதனால் தான் பூரியர்க்கில்லை சீரிய ஒழுக்கம் என நீதி நூற் கொத்து குறிபபிடுகின்றது.

உங்களுக்கு ஒரு மழலைச் செல்வன் இருக்கிறானா? அன்னையாக உங்களால் இதுவரைக்கும் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லையா? இதோ மகாகவி ரவீந்திரநாத் தாகூர் உங்களுக்கு அவனைப் புரியவைக்கிறார். எத்துணை கள்வன்தான் உங்கள் செல்வன்.

# எத்துணை கள்வன்தான் இக்குழந்தை!

குழந்தை விரும்பினால் இந்தக் கணமே அவனால் சுவர்க்கத்திற்குச் சென்றுவிட முடியும்.

ஆனால் அப்படி அவன் எங்களை விட்டுப் பிரியாமலிருப்பதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

எப்போதும் மாதாவின் மார்பின்மேல் தலையைச் சாய்த்துப் படுத்திருக்க அவன் விரும்புவதும் அவளைக் காணாது அவனால் ஒரு கணப்பொழுதும் இருக்கமுடியாதென்பதுமே அவையாகும்.

குழந்தைக்கு எல்லாப் புத்திசாலித்தனமான வார்த்தைகளும் தெரியும். ஆனால் உலகில் சிலருக்கு மட்டுமே அவற்றினை விளங்கிக்கொள்ள முடியும்.

அவன் பேசாமல் இருப்பதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

அவன் விரும்புவதெல்லாம் எல்லா வார்த்தைகளையும் தனது அன்னையின் உதடுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். இந்தக் கள்ள நோக்கத்தோடுதான் அவன் ஒன்றுமே தெரியாத அப்பாவிபோல் மௌனமாக இருக்கிறான்.

குழந்தையிடம் பொன்மணிகளும் முத்துக்களும் நிறைந்திருந்தன. ஆனால் அவன் சொத்துக்கள் எதுவுமே இல்லாத ஏழையைப் போல் இந்த உலகிற்கு வந்தான்.

இப்படி இவன் மாறுவேடத்தில் வந்ததற்கும் காரணங்கள் இல்லாமலில்லை.

இந்த இனிய, சிறிய குழந்தை பிச்சைக்காரனைப்போல அம்மணக் கோலத்தில் இந்த உலகிற்கு வந்ததே யாருமற்ற அனாதைபோலத் தன்னைக் காட்டிக்கொண்டு அன்னையின் எல்லையற்ற அன்பு வெள்ளத்தில் திளைப்பதற்கே.

குழந்தை அது முன்னர் வசித்து வந்த நிலாவில் எல்லா வசதிகளையும் பெற்று எதுவித கவலையுமின்றி இருந்தது.

அது தன்னுடைய சகல சுகங்களையும் சுதந்திரங்களையும் தானாகவே விட்டுக்கொடுத்துவிட்டு இவ்வுலகிற்கு வந்ததற்கு காரணங்கள் இல்லாமலில்லை.

அருமை மாதாவின் இதயத்தின் ஒரு சிறிய மூலையிலேயே அளவற்ற இன்பம் இருக்கிறது என்பதையும் அவளுடைய கைகளால் அள்ளப்பட்டு அவளுடைய மார்போடு இறுக அணைத்துக்கொள்ளப்படுவதில் உள்ள இன்பம் தன்னுடைய முன்னைய சுதந்திரத்தைவிட பன்மடங்கு மேலானது என்பதையும் அது அறிந்திருந்தது.

குழந்தைக்கு என்றுமே அழத் தெரிந்திருக்கவில்லை. இந்த உலகத்திற்கு வருவதற்கு முன்னர் அது முழுக்க முழுக்க ஒரு இன்பமயமான உலகிலேயே வசித்து வந்தது.

ஆனால் அது இப்போது கண்ணீர் விடுவது ஒரு காரணத்தோடுதான். தன்னுடைய மந்தகாசப் புன்னகையால் மாதாவின் மனதை ஈர்த்துக்கொள்ளும் அதேவேளை சிறு சிறு விடயங்களுக்கான கண்ணீர் சிந்துவதன் மூலம் அவளுடைய பரிவு, அன்பு இரண்டினையும் ஒரே சமயத்தில் பெற்றுவிடலாம் என்பதும் அதற்குத் தெரிந்திருக்கிறது.

எத்துணை கள்வன்தான் இக்குழந்தை!

மூலம்: ஆங்கிலம் தமிழாக்கம்: க. கனகசபாபதி □